
Vol.3 Issue : 2

# வைகறை வெளிச்சம்

ரூ.10

மார்ச் 2010 - ரபீஉல் அவ்வல் 1431




## பூனா குண்டுவெடிப்பு யாரால்?



## புது நாடு புகுகிறார் எம்.எஃப். ஹுசைன்




## இஸ்லாமும் இதர மதங்களும்




## 108 சேவை : ஒரு பார்வை



## 26/11

கர்கரேயின் மனைவி

அசோக் காம்தியின் மனைவி



## கூறுவதென்ன?

நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை (த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவன் போலவான்; மேலும் எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்

**(அல்குர் ஆன் 5 : 32)**


# வைகறை வெளிச்சம்

மார்ச் 2010 - ரபிஉல் அவ்வல் 1431

**Volume : 3 Issue 2**

ஆசிரியர்
**மு. குலாம்முஹம்மது**

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

இணை ஆசிரியர்
**எம். முஜிபுர்ரஹ்மான் உமரி**

தனி இதழ் ரூ. 10/-

**ஆண்டுச் சந்தா**
**உள்நாடு ரூ.140/-**
**வெளிநாடு ரூ. 1000/-**

**பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்**

**வைகறை வெளிச்சம்**
என்ற பெயரிலேயே அனுப்ப
வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594



**VAIGARAI VELICHAM**
235, Peters Road, Royapettah,
Chennai - 600 014.
**Phone: 044-45566909 Mob: 9444239594**
E-mail: darultrust@yahoo.com
Website : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.


கவர் ஸ்டோரி




பக்கம் 47

## பூனா குண்டுவெடிப்பு யாரால்?


1. தரீக்குல் குர்ஆன் 4
2. நபிமொழி விளக்கம் 10
3. நாம் பிரிந்துவிட வேண்டாம் 14
4. 60 வயதுக்கு பிறகு. . . 18
5. 'சிமி' நீதி கிடைக்குமா? 20
6. 108சேவை 23
7. சிர்காழியில் உமர் பாரூக் உரை 25
8. கர்கரேயை கொலை செய்தது யார்? நூல் வெளியீட்டு விழா 28
9. முஸ்லிம்களே உஷார் 31
10. கர்கரேயை கொலை செய்தது யார்? தொடர் 37
11. மகளிர் மன்றம் 39
12. இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் தன்னைத் தந்த மழவர்கள்! 41
13. அப்துல் ஸலாம் (நோபிள்) அறிந்த அறிவியல் 52
14. "இஸ்லாமும் இதர மதங்களும் ஓர் கருத்துப் பரிமாற்றம்" 56
15. கம்யூட்டர் கல்வி 60
16. பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை 62

# ஒழிப்போம் இனவெறி! ஏற்போம் நன்னெறி!!

சுமார் இருபத்து ஏழாயிரம் மாணவர்கள் நேரடியாகப் பயின்று வரும் பல்கலைக்கழகம் சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

இப்போது காலவரம்பற்ற விடுமுறை விடப்பட்டுள்ளது. காரணம் இதுதான்.

**28.2.2010** ஞாயிற்றுக்கிழமையன்று பல்கலைகழகத்தின் மாணவர் கவுதம் குமார் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமுற்றார். புதுச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். இவர் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

கவுதம் குமார் இறந்த செய்தி பரவியதும் வட மாநிலத்தைச் சார்ந்த சுமார் ஐநூறு பேர் பல்கலைக்கழகத்திலுள்ள கணினிகள், கண்ணாடிகள், மின்விளக்குகள், ஆம்புலன்ஸ், பஸ், ஆட்டோ, கார்கள் என கண்ணில் பட்டதையெல்லாம் அடித்து நொறுக்கியுள்ளனர்.

ரகளையில் ஈடுபட்டோரை காவல்துறை அடித்து விரட்டியது. அங்குமிங்கும் சிதறி ஓடினர். அவர்களில் சிலரைக் காணவில்லை என்ற புகார் எழுந்தது.

மறுநாள் திங்கட்கிழமை பல்கலைக் கழகத்துக்கு அருகேயுள்ள பாலமான் ஆற்றிலிருந்து ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது பி.இ. மாணவர் சுமித்குமாரின் உடல் என அடையாளம் காணப்பட்டது. இவரும் ஜார்கண்ட் மாநிலத்தைச் சார்ந்தவர்.

அதற்கு மறுநாள் செவ்வாய்க்கிழமை இரு சடலங்கள் அதே ஆற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. அவை ஆஷிஸ் ரஞ்சன், சர்பராஸ் ரேப் ஆகிய இரு மாணவர்களின் உடல் என அடையாளம் காணப்பட்டது. இருவரும் பீகார் மாநிலத்தைச் சார்ந்தவர்கள்.

பிரச்சனை பெரிதாவதைத் தவிர்க்க காலவரம்பற்ற விடுமுறை விடப்பட்டுள்ளது. பீகார் மாநில முதல்வர் நிதீஷ்குமார் தமிழக முதல்வரைத் தொடர்பு கொண்டு வட மாநில மாணவர்களின் உயிருக்குப் பாதுகாப்புத் தரும் படி வேண்டுகோள் விடுத்தார்.

பிரச்சனை இனி எப்படி திரும்பும் என்று அனுமானித்திட முடியவில்லை.

இந்தியாவின் அதிமுக்கிய நகரங்களில் ஒன்றான மும்பை இனவெறியின் கேந்திரமாக வடிவெடுக்கிறது. மஹாராஷ்டிரா நவ நிர்மான் சேனா என்ற அமைப்பினர் மஹாராஷ்டிராவிலுள்ள வெளி மாநிலத்தவரை அவமானப்படுத்தி வெளியேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஆஸ்திரேலியாவில் இந்தியர்களின் மீதான தாக்குதல் எல்லை மீறிப் போய்விட்டது. அங்கு வாழும் இந்தியர்களை, "மாறு வேஷத்தில் வெளியே செல்லுங்கள். ஏழைகள் போல் நடியுங்கள்" என வேண்டிக் கொள்கிறார்கள் நம்முடைய தேசத்தின் வெளியுறவு அமைச்சர்.

ஒரு காலத்தில் எட்டுத் திக்கிலும் வெற்றிக் கொடி நாட்டிய ஏகாதிபத்திய ஆங்கிலேயே இங்கிலாந்தில் இப்போது இந்தியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படுவதில்லை. பதவி உயர்வுக்கான எல்லாத் தகுதிகளும் இருந்தும் இந்தியன் என்ற தகுதியால் எல்லா உயர்வும் அடிவாங்குகிறது.

நிறம், மொழி, நிலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உணர்வுகள் மெல்ல மெல்ல வெறியாக வளர்ந்து இன்று முழு உலகையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

இன்று சிதம்பரத்தில் நடக்கும் வன்முறைகளுக்கும் இங்கிலாந்தில் நடக்கும் இழிவுகளுக்கும் இதுவே காரணம். இந்த பிராந்திய வெறி மனித குலத்துக்கு நன்மை பயக்காது.

மனிதனை மனிதனாகப் பார்த்திடும் பரந்து விரிந்த பார்வையிலிருந்து தூர விலகி அவனது தோலின் நிறம், நாவிலிருந்து வெளிவரும் ஒலி, மொழி பிறந்த நாடு ஆகியவற்றினடிப்படையில் அணுகிடும் தீய பார்வையும் சிந்தனையுமே பிராந்திய வெறி பரவுவதற்கு காரணம்.

அல்லாஹ் கூறுகிறான் : அல்லாஹ் நாடியிருந்தால் உங்களை ஒரே சமுதாயமாக ஆக்கியிருப்பான். ஆனால் அவன் உங்களுக்கு வழங்கியிருப்பவற்றில் உங்களை சோதித்துப் பார்ப்பதற்காகத்தான்(இவ்வாறு செய்தான்) (5:48)

மேலும் கூறுகிறான்:

வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதும் உங்களுடைய மொழிகளும் உங்களுடைய நிறங்களும் வேறுபட்டிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவை. நிச்சயமாக இதில் கற்றறிந்தோருக்கு பல சான்றுகள் உள்ளன (30:22)

பேராற்றல் மிக்க எல்லாம் வல்ல ஏகன் அல்லாஹ் மனித குலம் முழுவதையும் ஒரே மாதிரிப் படைத்திடும் வலிமையுள்ளவன் தான். படிப்பினைக்காகவும் சிந்திப்பதற்காகவும் சோதனைக்காகவுமே பல இனங்களாக மனிதனைப் படைத்தான். வெட்டிக் கொன்று மாய்ந்து மடிந்து போவதற்கல்ல.

சிவப்பு மனிதனுக்கும் நிழல் கருப்புத்தான். கருப்பு மனிதனுக்கும் இரத்தம் சிவப்புதான். எல்லோருக்கும் மனம் ஒன்றுதான்.

யாருக்கும் அல்லாஹ் இரு இதயங்களை வைத்திடவில்லை (33:4)

நீயும் நானும் ஒன்னு. எல்லோரும் களி மண்ணு.

இந்த யதார்த்தம் புரியாமல் அல்லது புரிந்தும் புரியாதது போல பிதற்றுவது அழிவையும் இழப்பையும் தவிர வேறெதையும் தந்துவிடாது.

இறைவன் படைத்த இந்த நிலத்தை மனிதன் பிரித்தான். என் நாடு. உன் நாடு என்றான். பாஸ்போட் என்றான். விசா என்றான். எல்லைக் கோடு என்றான். ஆயுதங்களைக் கண்டு பிடித்தான். உயிரற்ற எல்லைக் கோடுகளுக்காக உன்னத உயிர்களைக் கொன்று குவித்தான். தான் உருவாக்கிய பிளவுகளுக்குத்தானே பலியாகிக் கொண்டிருக்கிறான்.

இப்படித்தான் மொழிகள் நிறங்கள் இவற்றின் பெயரால் வீழ்கிறான்.

இவையெல்லாம் ஜாஹிலிய்யா எனும் அழிவுக் கொள்கைகள் என்று இஸ்லாம் அடித்துச் சொல்கிறது. யாரும் தனது நிறத்தையோ மொழியையோ நாட்டையோ தேர்வு செய்து பிறப்பதில்லை. எனவே இவற்றினடிப்படையில் ஒரு கொள்கை உருவாக முடியாது. ஏனெனில் இவற்றின் மூலம் எது சரி ? எது தவறு? எது சத்தியம்? எது அசத்தியம்? எனக் கண்டறிய இயலாது. இவை மனித இனத்தை வழி நடத்திட வக்கற்றவை.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: தன்னுடைய சமுதாயம் அநீதியிலிருக்கும் போது (இனவெறியின் காரணமாக) அதற்கு உதவி செய்பவன் கிணற்றில் விழுந்து கொண்டிருக்கும் ஒட்டகத்தின் வாலை கெட்டியாகப் பிடித்திருப்பவனைப் போலாவான் (அறிவிப்பாளர் : இப்னுமஸ் ஊத் (ரழி) நூல் : அபூதாவூத்)

இன்றைய அறிவியல் யுகத்தில் புதிது புதிதாய்க் கண்டு பிடிக்கப்படும் ஆயுதங்களெல்லாம் ஏதேனுமொரு இனவெறியை நிலைநாட்டிடவே பயன்படுகின்றன என்பதை நாகரிக சமுாயத்துக்கு நினைவூட்டுகிறோம்.

இனவெறி என்றொரு மாயவலையை தானே விரித்து அதில் தானே வலியப் போய் மாட்டிக் கொண்டு வெளியே வரத் தெரியாமல் விழிக்கும் இன்றைய உலகத்துக்கு இஸ்லாத்தின் தேவை முன்னெப்போதையும் விட அதிகமாக ஏற்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்தும் பூமிப்பந்தின் இதரப் பகுதிகளிலிருந்தும் இழிந்த வெறியை அடியோடு விரட்ட இஸ்லாத்தின் வழிகாட்டுதலை ஏற்றிட அனைவரையும் அழைக்கிறோம்.

# தரீக்குல் குர்ஆன் - 26

இல்யாஸ் ரியாஜி

وَاِذْ قُلْنَا لِلْمَلٰٓئِكَةِ اسْجُدُوْا لِاٰدَمَ فَسَجَدُوْٓا اِلَّآ اِبْلِيْسَ اَبٰى وَاسْتَكْبَرَ وَكَانَ مِنَ الْكٰفِرِيْنَ ○ 34

**வசனம் - 34**

**ஆதமுக்கு சிரம் பணியுங்கள் என்று நாம் மலக்குகளிடம் கூறிய போது இப்லீஸைத் தவிர அனைவரும் சிரம் பணிந்தனர். அவன் மறுத்தான். பெருமை யடித்தான். இறை மறுப்பாளர்களில் ஒருவனாகிவிட்டான்.**



மனிதகுலத்தின் தந்தை ஆதம் நபி அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய உயர்ந்த மரியாதையை இவ்வசனம் கூறுகின்றது. சில கேள்விகளுக்கு விடை தேட வேண்டிய இடம் இது.

ஆதம் நபிக்கு மலக்குகள் ஸஜ்தா - சிரவணக்கம் - செய்ய வேண்டும் என ஏன் அல்லாஹ் கட்டளை யிட்டான்?

ஒளியால் படைக்கப்பட்ட மலக்குகளிடம் கூறப்பட்ட கட் டளை நெருப்பால் படைக்கப் பட்ட இப்லீசுக்குப் பொருந்துமா?

என்பவைதான் அக் கேள்விகள்.

**சுஜூத்**

சுஜூத் என்ற அரபுச் சொல்லுக்கு தாழ்மை பணிவு என்று பொருள். இறைவணக்க மான தொழுகையில் உச்சக்கட்டப் பணிவைக் காட்டும் முகமாக நெற்றியைத் தரையில் வைத்து முழந்தாளிட்டு வணங்குவதே சஜ்தா அல்லது சுஜூத் எனப் படுகிறது.

பேரறிஞர் குர்த்துபீ (ரஹ்) கூறுகின்றார்கள். ஆதம் நபிக்கு மலக்குகள் செய்த சுஜூத் ஓர் வணக்கமல்ல என்று எல்லா அறிஞர்களும் ஏகோபித்துக் கருதுகின்றனர். மலக்குகள் தங்களின் நெற்றியைத் தரையில் வைத்து தொழுகையில் செய்திடும் ஸஜ்தா வைப் போலவே சுஜூத் செய் தார்கள். ஏனென்றால் ஸஜ்தா செய்தார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதன் வெளிப் படையான பொருள் என்னவோ அதுவே இவ்விடத் துக்குப் பொருந்தும் என்கின்றனர் பெரும் பாலான அறிஞர்கள்.

இவ்வாறு இன்னொரு மனிதருக்கு (மரியாதை நிமித்த மாக) ஸஜ்தா செய்வது கூடுமா? அல்லது ஆதம் நபிக்கு மட்டுமே இது பொருந்துமா?

(யூசுப்) அவர்தம் பெற்றோரை அரியாசனத்தின் மீது உயர்த்தி (அமர்த்தி)னார். அவர் கள் (எல்லோரும்) அவருக்கு சிரம் பணித்தனர் (12:100) என்று கூறு கின்றான். எனவே மனிதனுக்கு மனிதன் ஸஜ்தா செய்யலாம் என்று யஅகூப் (அலை) வின் காலம் வரை அனுமதி இருந்ததா? படைப்புகளுக்கு ஸஜ்தா செய்யலாம் என்ற அனுமதி கடைசியாக எந்தக் காலம் வரை இருந்தது?

இக்கேள்விகளுக்கு பல்வேறு கருத்துக்கள் பதிலாக வருகின்றன. அதிகமான அறிஞர்களின் கருத்து என்ன வென்றால் மனிதனுக்கு ஸஜ்தா செய்யலாம் என்ற அனுமதி நபி-ஸல் - அவர்களின் காலம் வரை இருந்தது என்பதே.

மரமும் ஒட்டகமும் நபி - ஸல் - க்கு ஸஜ்தா செய்வதைக் கண்ட நபித் தோழர்கள் "அல் லாஹ்வின் திருத்தூதரே மேய்ந்து திரியும் ஒட்டகங்களையும், மரங்களையும் விட உங்களுக்கு ஸஜ்தா செய்திட நாங்களே தகுதி மிக்கவர்கள்" என்று கூறியபோது "அகிலங்களின் இறைவனாம் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருக்கும் ஸஜ்தா செய்வது தகுமானதல்ல" என நபி-ஸல்-கூறினார்கள் (நூல்: அல்இர்வா இது ஹசன் தரத்திலான ஹதீஸாகும்).

முஆத் பின் ஜபல் (ரழி) சிரியாவிலிருந்து மதீனா திரும்பிய போது நபி-ஸல்-க்கு ஸஜ்தா செய்தார்கள். உடனே "என்ன இது?" என நபி-ஸல்- கேட்டார் கள். அதற்கு "அல்லாஹ்" வின் திருத்தூதரே, நான் சிரியா சென்றிருந்தேன். அங்குள்ள மக்கள் தங்களின் மதத் தலைவர் களுக்கு ஸஜ்தா செய்வதைக் கண்டேன். அதை உங்களுக்கும் செய்திட விரும்பினேன்" என்று அவர்கள் கூறினார்கள்.

அதற்கு நபி -ஸல் - கூறினார் கள். "இவ்வாறு செய்யக்கூடாது. யாரேனும் யாருக்கேனும் ஸஜ்தா செய்ய வேண்டும் என்று கட்டளையிடுவதாக இருந்தால் மனைவி தன் கணவனுக்கு ஸஜ்தா செய்ய வேண்டுமெனக் கூறி யிருப்பேன் (அப்படிக் கூறவில்லை) கணவனுக்குரிய கடமையை நிறை வேற்றாமல் ஒரு பெண் இறை வனுக்குரிய கடமையை நிறைவேற் றிட முடியாது. மகப்பேறு சூழ் நிலையில் அவள் இருக்கும் போது அவளை அவன் விரும்பிக் கேட்டால் தன்னைத் தந்திட அவள் மறுக்கக் கூடாது" (அறிவிப் பாளர் : அபூவாகித்) (ரழி) நூல் : இப்னுமாஜா, இப்னு ஹிப்பான், பைஹகீ, ஹதீசின் வாசகம் இமாம் புஸ்தி (ரஹ்) வின் அறிவிப்பின் படி. . . )

"மனிதனுக்கு மனிதன் ஸஜ்தா செய்வதை நபி-ஸல்- தடை செய்துள்ளார்கள். ஒருவருக் கொருவர் முஸாபஹா (கைலாகு) கொடுக்கும்படி கட்டளை யிட்டார்கள்" என்று முஆத்ஜபல் (ரழி) வழியாக வரும் மற்றொரு அறிவிப் பில் காணப்படுகிறது.

தடை செய்யப்பட்ட இந்த ஸஜ்தாவைத்தான் தஸவ்வுஃப் எனும் சூபியிஸத்தைக் கடை பிடிக்கும் மூடர்கள் தம்முடைய ஷைகுமார்களுக்குச் செய்து கொண் டிருக்கின்றனர். அவர்களின் முயற்சிகள் வீணானவை. அவர் கள் செயல்கள் நஷ்டத்துக்குள் ளானவை. (நூல்: குர்த்துபீ)

ஷஹீது ஸய்யித்துகுதுப் (ரஹ்) கூறுகின்றார்கள் : ஆத முக்கு ஸஜ்தா செய்யும் படி மலக்குகளுக்கு அல்லாஹ் கட்டளை யிட்டான். அதை ஏற்று மலக் குகள் ஸஜ்தா செய்தனர். பூமியில் குழப்பம் செய்வார்கள். இரத்தம் சிந்துவார்கள் என்று கருதப்பட்ட மனிதப் படைப்புக்கு அல்லாஹ் வழங்கிய உச்சபட்ச மரியாதை இது.

மலக்குகளை விடவும் உயர்வை அடைகின்ற ரகசியத் தை மனிதனுக்கு அல்லாஹ் உவந் தளித்தான். தனது பாதையை தானே தேர்ந்தெடுத்துக் கொள் ளும் சுயவிருப்பம் எனும் சிறப்புத் தகுதியை வழங்கியது போல அறிவு ஞானம் எனும் சிறப்புத் தகுதியையும் வழங்கினான்.

மனித இயல்பின் கலவையும் அவனின் வலிமையும் தனது வழியை தானே தேர்ந்தெடுத்துக் கொள்வதை உறுதி செய்வதாக வும் நேர்வழி எனும் அமானிதத் தின் துணையோடு அல்லாஹ்வை நோக்கிச் கிளம்புவதாகவும் தான் உள்ளது. இவை யெல்லாம் அல் லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள மரியாதைகளில் உள்ளவையாகும். (நூல் : ஃபீழிலாலில் குர்ஆன்).

## ஏனிந்தக் கட்டளை

ஆதம் நபிக்கு ஸஜ்தா செய்ய வேண்டும் என்று மலக்குகளுக்கு அல்லாஹ் ஏன் கட்டளையிட்டான்? என்ற கேள்விக்குரிய பதிலைப் பார்ப்போம்.

அல்லாஹ்வைத் துதிப்பதையும் புகழ்ந்தேற்றுவதையும் தம்முடைய பெருமைக்குரிய அமல் என்று மலக்குகள் கருதினர். தனக்கு மலக்குகளும் தேவையில்லை. அவர்களின் வணக்கமும் தேவையில்லை (நான் தேவைகள் அற்றவன்) என்று மலக்குகளுக்குக் காட்டுவதற்காக ஆதமுக்கு ஸஜ்தா செய்யுங்கள் என்று அல்லாஹ் கட்டளையிட்டான் என்று சில அறிஞர்கள் கூறியுள்ளனர்.

மலக்குகள் ஆதம் நபியை தம்மைவிட சிறிய தரம் குறைந்த படைப்பு என்று கருதினார்கள். அவரின் தனித்தன்மையை அறிந்திருக்கவில்லை. எனவே அவருக்கு மரியாதை நிமித்தமாக ஸஜ்தா செய்யும்படி கூறினான் என்று சில அறிஞர்கள் கூறியுள்ளனர்.

“பூமியில் பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்” (2:30) என்று அல்லாஹ் கூறிய போது “பூமியில் குழப்பம் செய்து ரத்தம் சிந்துவோரை படைக்கப் போகிறாய்?” என்று மலக்குகள் கூறியதற்கு அப்போதைய தண்டனையாகவே (நீங்கள் குறை கூறியவருக்கு நீங்கள் பணியுங்கள்) ஸஜ்தா செய்யுங்கள் என்று கூறினான் என்று கருதுவதற்கும் இடமுண்டு.

மனிதனை விட மலக்குகள் தான் உயர்ந்தவர்கள் என்று கருதுபவர்களே இவ்வாறு கூறுகின்றனர். மனிதன்தான் மலக்குகளை விட உயர்ந்தவன் என்று கருவோர், “மனிதன் உயர்ந்தவன் என்பதால்தான் முதல் மனிதருக்கு ஸஜ்தா செய்யும்படி மலக்குகளுக்குக் கட்டளையிட்டான்” என்று ஒரே சொற்றொடரில் கூறுகின்றனர்.

ஆக, ஆதம் நபிக்கு ஸஜ்தா செய்யும்படி ஏன் அல்லாஹ் கூறினான் கேள்விக்குரிய பதில் யார் சிறந்தவர் மனிதனா? மலக்கா? என்ற கேள்விக்கான பதிலில் அமைந்துள்ளது.

மனிதனே உயர்ந்தவன் என்ற கருத்தைக் கொண்டிருக்கும் இப்னு அப்பாஸ் (ரழி) தனக்குரிய சான்றுகளான கீழ்காணும் வசனங்களைக் காட்டுகின்றார்கள்.

நபியே நீர் உயிர்வாழ்வதன் மீது சத்தியமாக அவர்கள் மதிமயக்கத்தில் தட்டழிந்து கொண்டிருந்தார்கள் (16:72) என்று நபி-ஸல்-அவர்களின் வாழ்நாள் மீது சத்தியம் செய்கிறான்.

நபியே உமக்காக உமது முந்தைய தவறுகளையும் பிந்தியவற்றையும் அல்லாஹ் மன்னித்து . . . . (48:2) என்று நபிக்கு அபயமளித்துள்ளான். (மனிதகுலத்தைச் சார்ந்த நபியைப் பற்றி இப்படி உயர்வாகக் கூறியுள்ள அல்லாஹ்)

(மலக்குகளில்) யாரேனும் “அவனன்றி நானும் ஒரு இறைவன்தான்” என்று கூறினால் அவருக்கு நாம் நரகத்தையே கூலியாகக் கொடுப்போம் (21:29) என்று மலக்குகளைப் பற்றிக் கூறியுள்ளான்.

எனவே மலக்குகளை விட மனித இனமே உயர்ந்த இனம் என்கின்றார்கள் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள்.

## இதற்குப் பதில்

அல்லாஹ் மலக்குகளின் வாழ்நாள் மீது சத்தியம் செய்யவில்லை. தன்னுடைய ஜீவிதத்தின் மீதும் அல்லாஹ் சத்தியம் செய்யவில்லை. எனவே நபியின் வாழ்நாள் மீது சத்தியம் செய்வதாலேயே மனித இனமே உயர்ந்தது என்பது சரியல்ல. இது போல மலக்குகளின் வாழ்நாள் மீது சத்தியம் செய்யவில்லை என்பதால் அவர்கள் உயர்வற்றவர்கள் எனக் கருத முடியாது.

அல்லாஹ் வானத்தின் மீதும் பூமியின் மீதும் சத்தியம் செய்கிறான். அதற்காக அவை அல்லாஹ்வின் அர்ஷை விட ஏழுசுவனங்களை விட உயர்வானவை எனக் கருதமுடியுமா? அத்திமரம் ஸைத்தூன் மரம் ஆகியவற்றின் மீதும் தான் அல்லாஹ் சத்தியம் செய்கிறான்?

மலக்குகளில் ஒருவர் தன்னைத் தானே கடவுள் என்று கூறிக் கொண்டால் அவருக்கு நரகமே தண்டனை என்ற (21:29) வசனத்தை இதற்கு ஆதாரமாகக் காட்டுவதும் சரியல்ல. ஏனெனில் நபியைப் பார்த்ததே அல்லாஹ் கூறுகின்றான். “நபியே நீங்கள் இணை வைத்தால் கூட உமது நற்செயலும் அழிந்து போகும். நீர் நஷ்டமடைந்தவர்களில் ஒருவராவீர்” (39:65)

எனவே இவ்வசனங்களை அதற்கு சான்றாக எடுக்க முடியாது.

மனிதன்தான் மலக்குகளைவிட உயர்ந்தவன் என்ற கருத்துடைய அறிஞர்கள் மலக்குகள் ஆதம் நபிக்கு செய்த சுஜூத் நெற்றியைத் தரையில் வைத்து செய்யும் வழமையான சுஜூத் என்கின்றனர். மலக்குகளை விட மனிதனே உயர்ந்தவன் என்று இதன் மூலம் அல்லாஹ் உணர்த்திவிட்டான் என்கின்றார்கள்.

நெற்றியைத் தரையில் வைத்து தொழுகையில் அல்லாஹ்வுக்காக செய்யும் சுஜூத் போன்று மலக்கு கள் செய்யவில்லை. பணிவைக்காட்டிக் குனிந்தனர் என்று விளக்கமளிக்கின்றனர். மலக்குகளே மனிதனை விட உயர்ந்தவர்கள் என்ற கருத்துடைய அறிஞர்கள்.

ஆதம் நபிக்கு மரியதை நிமித்தமாக மலக்குகள் சுஜூத் செய்தனர். அதிலுள்ள வழிபாடு அல்லாஹ் வுக்குத்தான். நாம் தொழுகையில் கிப்லாவை முன்னோக்குவது போல ஆதமை முன்னோக்கி அல்லாஹ்வுக்கே மலக்குகள் சுஜூத் செய்தனர். உஸ்ஜுதுாலிஆதம = ஆதமுக்கு ஸஜ்தா செய்யுங்கள் என்ற வாக்கியத்தின் பொருள் ஆதமை நோக்கி ஸஜ்தா செய்யுங்கள் என்பதே என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். (நூல் : குர்த்துபீ)

மலக்குகளை ஆதமுக்கு ஏன் அல்லாஹ் சுஜூத் செய்ய வைத்தான்? மலக்குகள் எப்படி சுஜூத் செய்தார்கள்? ஆகிய இரு கேள்விகளுக்கான பதில் மலக்குகள் சிறந்தவர்களா? மனிதன் சிறந்தவனா? என்ற கேள்விக்குரிய பதிலில் அமைந்திருக்கிறது. அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன்.

பேரறிஞர் இமாம் ஃபஹ்ருத்தின் அர்ராசீ (ரஹ்) அவர்கள் தமது விரிவுரையில், ஆதம் நபிக்கு மலக்குகள் செய்த சுஜூத் மரியாதை, கண்ணியம், சங்கை, ஸலாம் ஆகியவற்றினடிப்படையில்தான். அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று அவர்கள் சுஜூத் செய்தனர். எனவே அது இறைவழிபாடுதான் என்று உறுதியுடன் தெரிவிப்பதோடு "ஆதம் நபியை கிப்லாவாக முன் வைத்தனர். நெற்றியைத் தரையில் வைக்கவில்லை குனியவுமில்லை பணிவைக் காட்டினர்" என்ற கருத்துக்கள் பலஹீனமானவை என்றும் கூறுகின்றார்கள். (நூல்: இப்னு கதீர்)

## இப்லீசைத்தவிர:

"இத் குல்னாலில் மலாயிகத்தி மலக்குகளிடம் நாம் கூறிய போது" என்று அல்லாஹ் கூறியுள்ளான். மலக் என்பதன் பன்மை மலாயிக்கத்.

ஆதமுக்கு சுஜூத் செய்யும்படி மலக்குகளிடம் தான் அல்லாஹ் கூறினான். அந்தக் கட்டளை இப்லீசுக்குப் பொருந்துமா? சுஜூத் செய்யவில்லை என்று காரணம் காட்டி அல்லாஹ் ஏன் இப்லீசை தண்டித்தான்? என்ற கேள்வி இவ்விடத்தில் எழுகிறது.

ஷஹீத் ஸய்யித்குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள். உயர்ந்தவனாம் அல்லாஹ்வின் மேலான கட்டளை யை ஏற்று மலக்குகள் அனைவரும் சுஜூத் செய்தனர். இப்லீசை தவிர.

மகத்தான அல்லாஹ்வுக்கு மாறுபுரிதல், மதிப்புக்குரியவர்களின் கண்ணியத்தை விளங்கி டாமல் ஆணவம் கொள்ளுதல், பாவம் செய்து அதன் மூலம் பெருமை அடைதல் உண்மையை விளங்கிட மறுத்து (இதயத்தை) ப் பூட்டிக் கொள்ளுதல் ஆகிய தீய பண்புகள் பயங்கரமாகக் கிளம்பிய கட்டம் அது. இப்லீஸ் ஆணவம் கொண்டு சுஜூத் செய்திட மறுத்தான்.

இப்லீஸ் மலக்குகளுடன் சேர்ந்து இருந்தாலும் அவன் மலக்குகளின் இனமல்ல. அவன் அவர்களுள் ஒருவனாக இருந்திருந்தால் அக்கட்டளைக்கு மாறு செய்திருக்கமாட்டான். ஏனெனில் மலக்குகள் "அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்திட மாட்டார்கள் அவன் ஏவியதை நிறைவேற்றுவார்கள்" (66:6) என்ற உயர்ந்த பண்புக்குரியவர்கள்.

இப்லீசைத் தவிர மலக்குகள் அனைவரும் சுஜூத் செய்தனர் என்ற சொற்றொடரை வைத்து அவன் மலக்குகளின் இனம் என்று கருத முடியாது. அவன் அவர்களுடன் சேர்ந்து இருந்திருக்கின்றான் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக குறிப்பிட்ட ஒரு குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்கிறார். வேறொரு குடும்பத்தைச் சார்ந்த அஹ்மது என்பவர் (என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் எங்கே எப்போது சென்றாலும் அஹ்மதுவும் அவர்களுடனே செல்வார்.) இப்போது "அந்தக் குடும்பத்தவர் வந்தனர். அஹ்மதைத் தவிர" என்று சொன்னால் அதற்கு என்ன பொருளோ அதே பொருள் தான் இப்லீசைத் தவிர" என்ன வார்த்தைக்கு பொருந்தும்.

ஏனெனில் இப்லீஸ் 'ஜின்' கூட்டத்தைச் சார்ந்தவன் என்பது, "கொழுந்து விட்டு எரியும் நெருப்பிலிருந்து ஜின்களை அல்லாஹ் படைத்தான்" (55:15) என்ற திருமறை வசனம் மூலம் தெளிவாகிறது (இப்லீஸ் ஜின் இனத்தைச் சார்ந்தவன் மலக்குகளில் ஒருவனல்லன் என்று திட்டவட்டமாக தெரிந்து விட்டது (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள் என்று நபி-ஸல் - கூறியதாக அன்னை ஆயிஷா (ரழி) அறிவித்துள்ளார்கள் (நூல்: - முஸ்லிம்)

வேறு இனத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் மலக்குகளுடன் இருந்து வந்ததால் மலக்குகளிடம் கூறப்பட்ட கட்டளை இப்லீசையும் உள்ளடக்கியது தான் அக்கட்டளையை அவன் புறக்கணித்ததால் சபிக்கப்பட்டான்.

## மறுத்தான் :

ஆதமுக்கு சுஜூத் செய்திட இப்லீஸ் மறுத்தான் அல்லாஹ்வின் விரோதியாம் இப்லீஸ் ஆதமுக்கு அல்லாஹ் வழங்கிய மரியாதையைக் கண்டு பொறாமை கொண்டான் என்கிறார் அறிஞர் கத்தாதா (ரஹ்) அவர்கள் (நூல்: இப்னுகதீர்)

நபி-ஸல்- கூறினார்கள்: திருக்குர்ஆனிலுள்ள ஸஜ்தா வசனங்களை ஓதி ஒருவர் ஸஜ்தா செய்தால் ஷைத்தான் அழுது கொண்டே அங்கிருந்து விலகிச் சென்று கூறுகிறான் "ஸஜ்தா செய்யும்படி மனிதனுக்குக் கட்டளையிடப்பட்டது அவன் ஸஜ்தா செய்து விட்டான். எனவே அவனுக்குத் சுவனம் கிடைக்கும். (ஆதமுக்கு) சுஜூத் செய்யும்படி எனக்கு கட்டளையிடப்பட்டது. அட நாசமே.... நான் ஸஜ்தா செய்யவில்லை. எனக்கு நரகம் தான்" (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

## பெருமையடித்தான்:

மனிதனைவிட நானே உயர்ந்தவன். உயர்ந்தவன் தன்னைவிட தாழ்ந்தவனுக்கு சுஜூத் செய்ய வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளை அறிவற்ற செயல் என்று கருதினான்.

இது போன்ற ஆணவம் பற்றி நபி-ஸல் - கூறினார்கள் : "யாருடைய உள்ளத்தில் கடுகளவு ஆணவம் இருந்தாலும் அவர் சுவனம் புகமுடியாது" அப்போது ஒரு நபித்தோழர், அல்லாஹ்வின் திருத்தூதரே. . . ஒருவர் தனது ஆடையும் செருப்பும் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். (இது ஆணவம் ஆகுமா?) என்று கேட்டார்.

நபி-ஸல்- கூறினார்கள் : "அல்லாஹ் அழகானவன். அழகை விரும்புகிறான். உண்மையை ஏற்க மறுப்பதும் மனிதர்களை இழிவாகக் கருதுவதும் ஆணவமாகும்". (நூல் : முஸ்லிம்)

இப்லீஸ் தனது ஆணவத்தை எப்படிக் காட்டினான் என்பதை திருக்குர்ஆனின் மற்ற அத்தியாயங்களில் காணலாம்.

"களி மண்ணால் நீ படைத்த ஒருவனுக்கு நான் சுஜூத் செய்ய வேண்டுமா?" (17:61)

நான் அவரை விட சிறந்தவன். என்னை நீ நெருப்பால் படைத்தாய் அவரை நீ களிமண்ணால் படைத்தாய் (38:76)

"ஓசை தரும் கருப்புக் களி மண்ணால் நீ படைத்துள்ள (இம்) மனிதனுக்கு நான் சுஜூத் செய்வதற்கில்லை" (15:33)

இப்படி அவன் வெளிப்படையாகவே கூறியதால் அல்லாஹ் அவனை காஃபிராக்கி விட்டான். எனவே யாரேனும் ஒருவர் அல்லாஹ்வின் கட்டளைகளையோ இறைத்தூதரின் கட்டளைகளையோ அறிவீனமானது என்று விமர்சித்தால் இப்லீசின் நிலைதான் அவருக்கும். மார்க்க அறிஞர்களிடையே இதில் எந்த கருத்து வேறுபாடுமில்லை.

இமாம் மாலிக் (ரஹ்) கூறியதாக இப்னுல்காசிம் (ரஹ்) கூறுகின்றார். பொறாமையும் ஆணவமும் தான் முதலில் நிகழ்ந்தபாவங்கள். இப்லீஸ் ஆதம் மீது பொறாமை கொண்டான். தடுக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசித்திட ஆர்வம் ஊட்டினான்.

கத்தாதா (ரஹ்) கூறினார்கள். அல்லாஹ் ஆதமுக்கு வழங்கிய மரியாதையைக் கண்டு அவர் மீது இப்லீஸ் பொறாமை கொண்டான். "நான் நெருப்பால் படைக்கப்பட்டவன். அவர் களி மண்ணால் படைக்கப்பட்டவர்" என்றான் எனவே ஆணவமே முதல் பாவம். அடுத்தது பேராசை. தடுக்கப்பட்ட மரத்தின் கனியை ஆதம் பேராசையின் காரணமாக சாப்பிட்டார். அந்தப் பொறாமைதான் மனிதன் தன் சக மனிதன் மீது பொறாமை கொள்ளக் காரணம் (நூல் : குர்த்துபீ)

## காஃபிராகிவிட்டான்:

ஷஹீது ஸய்யித்குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள். இந்த இடத்தில் நிரந்தர யுத்தத்துக்கான களம் தெளிவாகி விட்டது. இப்லீசிடமுள்ள தீய குணங்களுக்கும் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியான மனிதனுக்குமிடையிலான யுத்தம் அது மனிதனின் இதயத்தில் அந்த யுத்தம் நிரந்தரமாக நடந்து கொண்டிருக்கும்.

அல்லாஹ்வின் விருப்பப்படியும் அவனிடம் செய்துகொண்ட உடன்பாட்டின்படியும் எந்த அளவுக்கு ஒரு மனிதன் பாவங்களிலிருந்து பாதுகாப்பை பெறுகின்றானோ அந்தஅளவுக்கு அந்தப் போர்களத்தில் நன்மைக்கு வெற்றி கிடைக்கும். மனோ இச்சையிடம் ஒருவன் எந்த அளவுக்கு தன்னை ஒப்படைக் கின்றானோ அந்த அளவுக்கு தீமை வெல்லும். அம்மனிதன் இறைவனைவிட்டு

விலகிச் செல்வான். போர் நடந்து கொண்டேயிருக்கும். (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

மலக்குகளுடன் சேர்ந்து உயர்ந்த அந்தஸ்தில் வீற்றிருந்த இப்லீஸ் பொறாமையாலும் ஆணவத்தாலும் வீழ்ந்தான். இறுதியில் சாபத்துக்குரியவனானான்.

“எல்லா செயல்களும் முடிவுகளைக் கொண்டே அமைகின்றன” என்று நபி-ஸல் கூறியுள்ளது. (நூல்: புஹாரீ) இங்கு கவனிக்கத் தக்கதாகும்.

அறிஞர் தபரீ (ரஹ்) கூறியுள்ளார்கள். இப்லீசின் சம்பவத்தை அல்லாஹ் கூறி அவனைப் போன்ற மனிதர்களை எச்சரிக்கிறான். ஆரம்பத்தில் பெரிய அந்தஸ்தில் இருந்த இப்லீஸ் தனது தீய குணங்களால் வீழ்ந்தான். அதுபோலவே தான் யூதர்களும், அவர்களுக்கு அல்லாஹ் ஏராளமான அருள்களை வழங்கியிருந்தான். எனினும் (தங்களின் பொறாமையின் காரணமாக) அறிந்து கொண்டே நபியை உண்மையான இறைத்தூதர்தான் என்று ஏற்க மறுத்தார்கள். (அதனால் அவர்கள் சாபத்துக் குரியவர்களானார்கள்)

நம் அறிஞர்கள் கூறுகின்றனர் : ஒரு மனிதனின் இறுதி முடிவை வைத்துத்தான் அவன் நல்லவனா கெட்டவனா என்று தீர்மானிக்கமுடியும். இறைத்தூதர் அல்லாத ஒருவரிடமிருந்து ஏதேனும் அற்புதங்கள் நிகழ்ந்தால் அதை மட்டும் வைத்து அவரை ஒரு இறை நேசர் என்று கூறமுடியாது. ஏனெனில் இறுதி முடிவு என்ன ஆகும் என்பதை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது. (நூல் : குர்த்துபீ)

யூனுஸ் பின் அப்துல் அஃலா அஸ்ஸதஃபீ (ரஹ்) கூறுகின்றார்கள்: நான் இமாம் ஷாபிஈ (ரஹ்) விடம், “நீங்கள் நீரின் மேல் நடக்கின்ற மனிதனைக் கண்டால் அவரின் செயலை குர்ஆன் ஹதீசுடன் ஒத்துப் பார்க்காமல் அவரிடம் ஏமாந்து விடாதீர்கள்” என்று அறிஞர் லைஸ் பின் சஅத் (ரஹ்) கூறுகின்றாரே என்று கேட்டேன்.

அதற்கு, “லைஸ்பின் ஸஅத் (ரஹ்) முழுமையாகச் சொல்லவில்லை”. நீரின் மேல் நடக்கின்ற வரையோ ஆகாயத்தில் பறப்பவரையோ நீங்கள் கண்டால் அவரின் செயலை குர்ஆன் ஹதீசுடன் ஒத்துப் பார்க்காமல் அவரிடம் ஏமாற வேண்டாம்” என்று கூறியிருக்க வேண்டும் என்று இமாம் ஷாபிஈ (ரஹ்) பதிலளித்தார்கள். (நூல் : இப்னு கதீர்)

இன்ஷா அல்லாஹ் - தொடரும்


# தைபா ஹஜ் சர்வீஸ்

## கோடை ஜியாரத், உம்ரா

**ஜோர்டான், அம்மான், கெய்ரோ, பைத்துல் முகத்தஸ், மக்கா, மதீனா உள்ளிட்ட நபிமார்கள் வாழ்ந்த இடங்களைக் காணவாரீர்!**

**பயண நாட்கள்**

**புறப்பாடு : மே 10. 2010 திரும்புதல் : மே 30. 2010**

**நான்கு நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடம், இருவருக்கு ஒரு அறை.**

**கோடை உம்ரா, ரமழான் உம்ரா புனித ஹஜ் புக்கிங் விரைவாக நடைபெறுகிறது.**

# TAIBA HAJ SERVICE

6/8, Second Floor, Rutland Gate IInd Street, Thousand Lights, Chennai - 600 006.
Tel.: 044-2833 2770 / 28332771 Fax : 28332769 Cell : 94448 54653 / 98410 10786
E Mail : taibahajservice@gmail.com

# சகோதரா கவலைப்படாதீர்!

قال ﷺ: «مَنْ جعلَ الهمَّ همّاً واحداً؛ كفاه اللهُ همَّ دنياه. ومن تَشَعَّبَتْهُ الهمومُ؛ لم يُبالِ اللهُ في أيِّ أَوْدِيةِ الدُّنيا هلَكَ»(١).

*நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்: எல்லாக் கவலைகளையும் ஒரே கவலையாக யார் கொண்டாரா அவருடைய உலகத்தின் கவலைகளில் அல்லாஹ் அவருக்குப் போதுமானவன். யாரை கவலைகள் குலைத்து விட்டதோ அவர் உலகத்தின் எந்த ஓடையில் (விழுந்து) அழிந்தாலும் அல்லாஹ் அவனைப் பொருட்படுத்தமாட்டான். (அறிவிப்பாளர்: இப்னு உமர் (ரலி), நூல் : ஹாகிம், பைஹகீ)*

ஒருவர் கவலையோடு கன்னத்தில் கைவைத்து அமர்ந்திருந்தார். "ஏன் சோகமாக அமர்ந்திருக்கிறாய்?" என்று அவரின் நண்பர் கேட்டார்.

அதற்கு அவர், "மளிகைக்கடைக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். இம்மாத தொலைப்பேசிக் கட்டணம், மின்சாரக் கட்டணம் இன்னும் செலுத்தவில்லை. அவசரத்துக்கு உறவினர் ஒருவரிடம் வாங்கிய கடனை திரும்பக் கேட்கிறார். தேதி பதினைந்து தான் ஆச்சு, சம்பளம் வாங்கிட இன்னும் பாதி மாதம் காத்திருக்க வேண்டும்" இப்படி எனக்கு பல கவலைகள். அதனால் தான் அனைத்தையும் சமாளிக்க வழி தெரியாமல் உட்கார்ந்துவிட்டேன் என்றார்.

அதற்கு நண்பர் கூறினார் : "உன் பிரச்சினை ஒன்றே ஒன்றுதான். பணத்தட்டுபாடு என்ற ஒன்றுதான் அது. செலவுகளுக்கு ஏற்ப வருமானத்தைப் பெருக்கினாலோ அல்லது வருமானத்துக்கு ஏற்ப செலவைச் சுருக்கினாலோ தீர்ந்து போய் விடும் இப்பிரச்சனை".

சுயமுன்னேற்ற நூல்கள் கூறும் கதை இது. நம்மில் பலரும் இப்படித்தான். ஒரே கவலையைப் பலவாறாய் பங்குவைத்து, விதவிதமாய்க் கவலைப் படுகிறோம். அவற்றை கொஞ்சம் நிதானமாக ஆராய்ந்து பார்த்தாலே அது அவ்வளவு பெரிய விஷயமல்ல என்பது தெரியும்.

கவலைப்படுவதால் மட்டுமே பிரச்சினை தீராது. மனக் கவலையால் உடல்நலம் பாதிக்கும். இறைத்தூதர் யூசுப் (அலை) அவர்களின் பிரிவை எண்ணி, வருந்தி வருந்தி அவர்களின் தந்தை யஅகூப் (அலை) அவர்களின் கண்பார்வையே பறிபோனதாக திருக்குர்ஆன் கூறுகிறதல்லவா?

நபிகளார் (ஸல்) அவர்களின் அருமைத் துணைவியார் அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுடைய கற்புநெறி மீது சிலர் ஐயங்களைக் கிளப்பி அவதூறுகளைப் பரப்பியபோது, அவர்கள்

என்று கருதுகிறோம். கவலைகளை எதிர்த்து வாழ முடியாமல் மாய்ந்து போகின்ற வரே கைவிடப்பட்டவர் என்பது அந்த நபிமொழி சொல்லும் செய்தி.

> *உள்ளத்தில் நம்பிக்கையை விதைக்கும் சில வார்த்தைகளை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் அதுவே மனக் கவலை போக்கிடும் மாமருந்தாக தன்னம்பிக்கையைத் திறக்கும் திறவுகோலாக மாறிவிடும். அது அந்த வார்த்தை செய்த மாயமல்ல. அல்லாஹ் ஏற்படுத்திய மாற்றம்.*

அடைந்த கவலை எல்லையில்லாதது. கண்ணீர் வடித்தார்கள். வேதனை அவர்களை வாட்டியது. அன்னை ஆயிஷா (ரலி) கூறினார்கள்: கவலை என் ஈரக்குலையை அறுத்துவிடும் போலிருக்கிறதே என நான் எண்ணினேன்.

எனவே, வரம்பு மீறிய கவலை உடல் நலத்தைக் கெடுக்கும். வாழ்க்கைப் போட்டியில் எதிர்காலத்தில் பங்கேற்க முடியாத அளவுக்கு அது ஊனத்தை ஏற்படுத்தி விடக் கூடும்.

“கவலைகள் யாரை சிதைந்துவிட்டதோ அவர் உலகத்தின் எந்தப் பள்ளத்தாக்கில் அழிந்து கிடந்தாலும் அல்லாஹ் அவரைப் பொருட்படுத்த மாட்டான்” என்ற வார்த்தை சொல்லும் உண்மை என்ன வென்றால், கவலைப்பட்டே உருக்குலைந்து, அழிந்து போகின்றார்

ஒரு நாள் நபிகளார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கு (தொழுகையல்லாத நேரத்தில்) வந்தார்கள். அங்கே மதீனாவாசி ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் அபூஉமாமா (ரலி).

அவரிடம் வந்து நபி (ஸல்), “அபூஉமாமா! தொழுகை நேரம் அல்லாத இந் நேரத்தில் ஏன் பள்ளிவாசலில் அமர்ந்திருக்கிறீர்” என்று கேட்டார்கள்.

அதற்கு அவர், “அல்லாஹ்வின் திருத்தூதரே, கவலைகள் தான் என்னை இங்கே கட்டிப் போட்டு வைத்துள்ளன. எனக்கு கடன்களும் உள்ளன” என்றார்.

“உனக்கு சில வார்த்தைகளை நான் கற்றுத் தரட்டுமா? அவற்றை நீ (தொடர்ந்து) கூறிக்கொண்டிருந்தால் அல்லாஹ் உனது கவலையைப் போக்கு வான். உனது கடனை நிறை வேற்றுவான்” என்று நபி (ஸல்) கேட்டதும் அவர் “சரி” என்றார்.

“இறைவா, உன்னிடம் (நடந்ததை எண்ணி) துக்கப்படுவதை விட்டும் (நடக்கவிருப்பதை எண்ணி) கவலைப்படுவதை விட்டும் பாதுகாப்புத் தேடு கிறேன். பலவீனம், சோம்பேறித் தனம், ஆகியவற்றை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன். கோழைத் தனம், கஞ்சத்தனம், இவற்றை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன்.”

: اللهمَّ إنِّي أعوذُ بكَ مِنَ الهمِّ والحَزَنِ، وأعوذُ بِكَ من العَجْزِ والكَسَلِ، وأعوذُ بِكَ مِنَ الجُبْنِ والبُخْلِ، وأعوذُ بِكَ من غَلَبَةِ الدَّينِ وقَهرِ الرِّجالِ».

“இந்த துஆவை காலை, மாலை (தினமும் ஓதிவருவீராக” என்று நபி (ஸல்) கூறினார்கள்.

அபூஉமாமா (ரலி) கூறினார்கள்: “நான் அதைக் கடைப் பிடித்தேன். அதனால் அல்லாஹ் என் கவலையைப் போக்கினான். என் கடனை நிறைவேற்றினான்” (அறிவிப்பாளர்: அபூசயீத் அல் குத்ரீ (ரலி), நூல் : அபூதாவூத்)

கவலையும் துக்கமும் வாட்டி வதைத்தால் ஆறுதல் தேடி இறை யில்லமாம் பள்ளிவாசலுக்கு வருவது தவறல்ல. ஆனால் அதுவே பிரச்சனைக்குத் தீர்வாகி விடுமா? ஆகாது என்பதுதான் நபி (ஸல்) வழிகாட்டல்.

அவருக்கு ஒரு துஆவை வழித் துணையாகக் கொடுத்து உழைப்பதற்கு அனுப்பி வைத்தார்கள். உள்ளத்தில் நம்பிக்கையை விதைக்கும் சில வார்த்தைகளை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் அதுவே மனக் கவலை போக்கிடும் மாமருந்தாக தன்னம்பிக்கையைத் திறக்கும் திறவுகோலாக மாறிவிடும். அது அந்த வார்த்தை செய்த மாயமல்ல. அல்லாஹ் ஏற்படுத்திய மாற்றம்.

நம்மிடமுள்ள மன உறுதியை பொருத்து சிலவேளைகளில் கவலையிலிருந்து கிடைக்கும் விடுதலை, நாம் எதிர்பார்த்ததை விட அழுத்தமாக அமைந்து விடும். அன்னை ஆயிஷா (ரலி) அவர் களின் மீது அவதூறுகளை சிலர் அள்ளி வீசியபோது, மிகுந்த மனக் கவலைக்கு ஆளான அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் குற்றமற்றவள் என்பது நன்றாகத் தெரியும்.

என்மீது சுமத்தப்பட்டுள்ள களங்கத்தை அல்லாஹ் துடைப்பான் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், திருக்குர்ஆனின் வசனங்களில் என் ஒழுக்கத்தைப் பறைசாற்றும் வார்த்தைகளை வழங்குவான் என்று நான் நினைக்கவில்லை. நான் அவ்வளவு உயர்வானவள் என்று என்னைக் கருதியதில்லை. நான் நிரபராதி என்பதை அல்லாஹ் கனவின் மூலம் நபி (ஸல்) அவர்களுக்கு உணர்த்துவான் என்றே எண்ணிக்கொண்டிருந்தேன். (அறிவிப்பாளர் : உர்வா பின் சுபைர் (ரலி) நூல் : அஹ்மது)

ஆனால் அந்நேரத்தில் அல்லாஹ் அந்நூர் என்ற 24வது அத்தியாயத்தின் 11-20 வரையுள்ள வசனங்களை அருளினான். அவதூறு பரப்பியவர்களைக் கண்டித்தான். அன்னை ஆயிஷா (ரலி) மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைத்தான்.

பிரச்சனைகளைக் கண்டு கவலைப்படாமலிருந்துவிட முடியாது. அதே நேரத்தில் கவலைப்படுவது மட்டுமே பிரச்னைகளுக்கு தீர்வாகி விடாது.

“மனிதன் அவசரக்காரனாகவே படைக்கப்பட்டுள் ளான். அவனை ஒரு தீங்கு தொட்டுவிட்டால் பதறுகிறான்” என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் (70:19,20) கூறியுள்ளான். மனிதனிடம் இருக்கக் கூடாத குணங்களின் வரிசையில் தான் பதற்றம் இடம்பெறுகிறது.

எனவே, கவலை, சங்கடம் நேர்ந்தால் பதறாமல் நிதானமாக அதைப் போக்கிட வழி தேடி சிந்திக்க வேண்டும். சிந்தனையின் விளைவாக எழுந்த முடிவை உறுதியுடன் செயல்படுத்த வேண்டும். மகிழ்ச்சி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டும். இதில் காத்திருப்பு மிக முக்கியம்.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: (“கவலை நீங்கி) மகிழ்ச்சியை எதிர்பார்த் (துக்காத்) திருப்பது சிறந்த வணக்கம்” (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரலி), நூல்: திர்மதி)

“கவலைகள் யாரைச் சிதைத்துவிட்டதோ அவர் உலகின் எந்தப் பள்ளத்தாக்கில் விழுந்து மாய்ந்தாலும் அல்லாஹ் அவரைப் பொருட்படுத்துவ தில்லை” என்ற ஹதீஸின் வார்த்தைகளுக்கு பேரறிஞர் யூசுஃப் அல்கர்ளாவீ (ரஹ்) இப்படி விளக்கம் தருகின்றார்:

“செல்வம், பதவி, மன விருப்பங்கள் ஆகியவற்றை அதிகப்படுத்திக் கொள்வதையே பெரும் அக்கறைக்குரிய விஷயமாக்கி அதிலேயே கவனம் சிதறிக்கிடப்பவனை அல்லாஹ் பொருட்படுத்துவதில்லை. அவற்றில் எதை அடையும் முயற்சியில் அவன் அழிந்தாலும் சரிதான். ஒரு நல்லடியார் இறை திருப்தியைப் பெறுவதைத்தான் தனது முக்கிய நோக்கமாக கொள்வார்” (நூல்: அந்நிய்யத்து வல் இக்லாஸ்)

எனவே, எதற்கும் நிலைகுலையாமல் வாழ்வோம். உள்ளத்தில் நம்பிக்கையை விதைக்கும் துஆக்களை திரும்பத் திரும்ப ஓதிக் கொள்வோம். நாளைய தினம் நமக்கு நல்லதாய் விடியட்டும். கவலைகள் நம்மை சிதைக்காம லிருக்கட்டும்.

சகோதரா! கவலைப்படாதீர்!





**கர்கரேயைக் கொலை செய்தது யார்?** என்ற நூல்

இப்போது தமிழில். . .

மார்ச்சு 14 - ஞாயிறு மாலை 6.45 மணிக்கு மதுரையில்

வெளியீடு இடம் : **சோக்கோ அறக்கட்டளையின்**

**நீதியரசர் வி.ஆர். கிருஷ்ணய்யர் திருமண மஹால், கே.கே. நகர், மதுரை**

வெளியிடுபவர் :

நூலாசிரியர் : **முஷ்ரிஃப்**

(ஓய்வுபெற்ற முன்னாள் காவல்துறை அதிகாரி, மஹாராஷ்டிரா)

முதல் பிரதியை பெறுபவர்: வழக்கறிஞர் **லஜபதி ராய்** வைகை சட்ட நிறுவனம்

முஷ்ரிஃப் அவர்களைச் சென்னையில் சந்திக்க இயலாதவர்களுக்கு
மதுரை மாபெரும் வாய்ப்பை வழங்குகின்றது
அனைவரும் வாரீர்

**வேர்கள் வெளியீட்டகம்,** 235, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை -14
அனைவரும் வருக!

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம் **Since 1993**

# அல்ஹரமைன்

# ஹஜ் சர்வீஸ் (பி) லிட்

(இந்திய மற்றும் சவுதி அரசு அங்கீகாரம் பெற்றது)

**REGN NO. M/HAJ / REGN / PTO / TN - 6/36/2009**

## புனித ஹஜ் - 2010 மற்றும் உம்ரா அழைப்பு

- ஹரம் ஷரிஃபிற்கு மிக அருகே தங்கும் இடவசதி.
- தரமான தமிழக உணவு, தெளிவான வழிகாட்டுதல்.
- 17 ஆண்டுகள் அனுபவம் நிறைந்த திட்டமிட்ட பயண ஏற்பாடுகள்.

## ஹஜ் பயணத் தொகை ரூ.2,25,000/-

- ரஜப் மாதம் வரை மாதா மாதம் (15 நாட்கள்) உம்ரா பயண ஏற்பாடு

## உம்ரா பயணத் தொகை

| | | |
|---|---|---|
| ரூ. 57,500/- | ரூ. 52,000/- | ரூ. 48,000/- |

உம்ரா பயணத் தொகையில் உள்ள வித்தியாசத்திற்கேற்ப தங்குமிடம் மாறுபடும்.

**மன நிறைவான ஹஜ் மற்றும் உம்ரா பயண ஏற்பாடுகளுக்கு அன்புடன் அழைக்கிறோம்.**

எமது புதிய தலைமையக முகவரி

**அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட்**
எண்.10, (பழைய எண்.73)
தாதா முத்தியப்பன் தெரு, (பிராட்வே)
பிளாட் எண்.6, முதல் தளம்,
கொத்தவால் சாவடி காவல்நிலையம் எதிரில்
ஜார்ஜ் டவுன், சென்னை–600 001.
போன் : 044 – 25242323, 25242324

<u>கிளை</u>

9, முதல்மாடி, நஜீம் காம்ப்ளக்ஸ்,
28/5, டவுன் எக்ஸ்டன்ஸன், மயிலாடுதுறை – 609001.
நாகை (Dt) போன் : 04364 – 224221


Email : alharaminehaj@yahoo.com web : www.hajdetails.com / al-haramine

குறிப்பு : பயணக் கட்டணங்கள் ஏர்லைன்ஸ் மற்றும் எக்ஸ்சேன்ஞ்ச் விலையேற்ற அடிப்படையில் மாற்றத்திற்குரியது.

மலக்கு மார்கள் கூட தங்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். அவர்கள் தர்க்கம் கூடச் செய்துள்ளனர். இதோ அல்லாஹ் கூறுகின்றான்: “மேலான கூட்டத்தினர் தர்க்கித்துக் கொண்டது பற்றி எனக்குத் தெரியாது” (என்று நபியே கூறுவீராக) **(38:69)**

நபிமார்கள் கூட தமக்கிடையே கருத்து வேறுபட்டுள்ளனர். இறைத்தூதர்களான மூஸா (அலை) ஹாரூன் (அலை) கருத்து வேறுபட்டனர். மூஸா(அலை) ஹாரூன் (அலை)வின் தாடியைப் பிடித்து அவர்களை கடுமையாகக் குறை கூறிடும் அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது. சாமிரீ என்பவன் உருவாக்கிய காளை மாட்டை இஸ்ரவேலர்கள் வணங்கத் தலைப்பட்ட பின்னர் இது நடந்தது. அவ்விரு இறைத்தூதர்களிடையே நடந்த உரையாடலை திருக்குர்ஆன் இப்படிக் கூறுகிறது.

“ஹாரூனே இவர்கள் வழி கெடுவதை நீர் கண்ட போது (அவர்களைத் தடுத்துத் திருத்துவதை விட்டும்) உம்மைத் தடுத்தது எது?” என்னைப் பின்பற்றிட வேண்டாமா? என் கட்டளையை நீர் மீறிவிட்டீரா?” என்று மூஸா நபி கேட்டார்கள்.



(அதற்கு ஹாரூன் (அலை)) என் தாயின் மகனே என் தாடியையும் தலை(முடி) யையும் பிடித்திழுக்காதீர். “என் வார்த்தைக்காகக் காத்திருக்காமல் பனீ இஸ்ராயில்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி விட்டீரே” என்று நீர் கூறிவிடுவீரோ என்று அஞ்சினேன் என்று கூறினார். **(20:94-94)**

“(என்னிடம் கடுமையாக நடந்து என்னுடைய) எதிரிகளுக்கு என் மூலம் மகிழ்ச்சியை ஏற்படுத்திவிடாதீர்கள்” என்று ஹாரூன் (அலை) மூஸா (அலை) விடம் கூறினார்கள். **(6:150)**

மூஸா, ஹிழ்ர் (அலை ஹிமா) இருவருக்கும் மூன்று கட்டங்களில் முரண்பாடு ஏற்பட்டது. முடிவில் இருவரும் பிரிந்திட நேர்ந்தது. ஹிழ்ர் (அலை) மூஸா (அலை) விடம் “இதுதான் எனக்கும் உமக்கும் இடையில் பிரிவுக்குரிய கட்டம். எதைப் பற்றி உம்மால் பொறுமையாக இருந்திட இயலவில்லையோ அதன் விளக்கத்தையும் திட்டமாக உமக்கு அறிவிக்கப் போகிறேன்” என்று கூறிவிட்டார்கள் **(18:78)**

**பேரறிஞர் யூசுப் அல்கர்ளாவீ**

இது பற்றிய விளக்கம் அல்கஹ்ஃப் அத்தியாயத்தில் உள்ளது.

இறைத்தூதர்களான தாவூத் (அலை) வும் அவர்களின் மகன் சுலைமான் (அலை)வும் கருத்து வேறுபாடு கொண்டனர். ஒரு சமுதாயத்தின் விளைச்சலில் மேய்ந்துவிட்ட ஆட்டு மந்தை பற்றி தீர்ப்பை இருவரும் வெவ் வேறு விதமாகக் கூறினார். மகன் சுலைமான் (அலை) வின் தீர்ப்பே சரியானது என்று திருக்குர்ஆன் சுட்டிக் காட்டுகிறது. எனினும் அவ்விருவரையுமே புகழ்ந்துரைக் கிறது.

அல்லாஹ் கூறுகிறான். சுலைமானுக்கு அதை நாம் விளங் கவைத்தோம். அவ்விருவருக்கும் ஞானத்தையும் கல்வியையும் வழங்கினோம். **(21:79)** (இது பற்றிய விளக்கம் அல் அன்பியா அத்தியாயத்தில் உள்ளது).

# மலக்குகள் நபிமார்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு!

நூறு கொலைகளைச் செய்துவிட்டு பின்னர் பாவ மன்னிப்புத் தேடியவராக தூய நகரத்துக்குப் புறப்பட்டுச் சென்றவர் வழியிலேயே இறந்து விட்டார். இவரது விஷயத்தில் அருளின் மலக்குகளும் தண் டனையின் மலக்குகளும் தர்க் கித்துக் கொண்டனர். கொலைக் குற்றம் செய்து கொண்டு அவர் எந்த ஊரில் வாழ்ந்தாரோ அந்தப் பாவ ஊரைக் கவனித்து இவர் குற்றவாளி என்று முடிவு செய்து தண்டனையின் மலக்குகள் இவரின் உயிரை எடுத்துச் செல்வதா? அல்லது திருந்தி வாழ்ந்திடும் நோக்கத்தில் தூய நகரத்துக்கு புறப்பட்டதைக் கவனித்து அருளின் மலக்குகள் அவரின் உயிரை எடுத்துச் செல்வதா? இதுதான் பிரச்சனை.

இதையே வேறு வார்த்தை யில் சொல்வதென்றால் அவரின் செயல்களைக் கவனித்து முடி வெடுப்பதா? நிய்யத் எண்ணத் தைப் பொருத்து முடிவெடுப்பதா? தண்டனையின் மலக்குகள் முந்தையதைக் கொண்டு முடி வெடுத்தனர். அரு ளின் மலக் குகள் இரண்டாவதைக் கவனித்து முடிவெடுத்தனர். பின்னர் அல்லாஹ் ஒரு மலக்கை அனுப்பி அந்த தர்க்கத்துக்கு முடிவு கட்டினான். அருளின் மலக்குகள் அம்மனிதரின் உயிரை எடுத்துச் சென்றிட வேண்டும் என்று அவன் தீர்ப்பளித்தான். புஹாரீ முஸ்லிம் ஆகிய நூல்களில் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

இதே போல, மூஸா நபியும் ஆதம் நபியும் தர்க்கித்துக் கொண்டனர். சுவனத்திலிருந்து வெளியேறி, பூமிக்கு இறங்கி, இங்கேயே தங்கிட வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பது பற்றி தர்க்கம் வந்தது. தடுக்கப் பட்ட மரத்தின் கனியைச் சாப்பிட்டது தான் அதற்குக் காரணமா? இல்லையா? இந்த விவாதத்தில் மூஸா (அலை)வை ஆதம் (அலை) வென்றார்கள். இதுவும் புஹாரீ, முஸ்லிம் ஆகிய வற்றில் காணப்படுகிறது.


ஒரு ஆண் குழந்தையை "இது என் குழந்தை" என இரண்டு பெண்கள் உரிமை கொண்டாடிய போது தாவூத் (அலை) சுலைமான் (அலை) இரு வரும் வெவ்வேறு தீர்ப்பை வழங்கியதாக ஹதீஸ் வந்துள் ளது. இதோ அந்த ஹதீஸ்.

அண்ணல் நபி -ஸல்- கூறினார்கள். இரண்டு பெண்கள் தமக்குரிய மகன்களுடனிருந்தனர். ஒரு ஓநாய் வந்து ஒருத்தியின் மகனைத் தூக்கிச் சென்றுவிட்டது. அவ்விருவரும் ஒருவர் மற்ற வரிடம் "உன் மகனைத் தான் ஓநாய் தூக்கிச் சென்றுள்ளது" என்று கூறினர் (இருக்கும் ஒரு பையன் தனக்குரிய வனே என இருவருமே கூறினர்) பின்னர் இருவரும் தாவூத் நபியிடம் தீர்ப்புத் தேடிவந்தனர். அவ்விரு பெண்களில் பெரியவளுக் குரியவன் தான் அந்தப் பையன் என தாவூத் நபி தீர்ப்பளித்தார்கள்.

பின்னர் அவ்விருபெண் களும் சுலைமான் நபியிடம் வந்து விபரம் கூறினர். அப்போது சுலை மான் (அலை) "என்னிடம் ஒரு கத்தியைக் கொண்டு வாருங்கள். (ஆளுக்குப் பாதியாக) இருவருக்கும் குழந்தையை வெட்டித் தருகிறேன்" என்று கூறினார்கள். அதைக் கேட்டு (பதற்றமடைந்த) இளைய வள், "அப்படிச் செய்து விடாதீர் கள். அது அவளின் குழந்தை யாகவே இருக்கட்டும்" என்றாள்.

(இதன் மூலம் உண்மையை விளங்கிய) சுலைமான் (அலை) அக்குழந்தை இளையவளுக் குரியதே எனத் தீர்ப்பளித்தார்கள். (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) நூல் : புஹாரீ, முஸ்லிம்)

ஒரு விஷயத்தை அணுகும் விதத்திலும் பார்க்கும் கோணத் திலும் கல்வித்தரத்திலுள்ள வேறு பாட்டின் காரணமாக அல்லாஹ் வின் சங்கைமிகு அடியார்களான மலக்குகள் நபிமார்கள் மத்தியில் கூட தர்க்கமும் வேறுபாடும் ஏற்பட்டுள்ளன என்றால் சங்கைக் குரிய நபியாகவோ இறை நெருக்கம் பெற்ற மலக்காகவோ இல்லாத சமுதாயத்திலுள்ளவர்களிடம்


பேரறிஞர் யூசுப் அல்கர்ளாவீ

பாவங்களிலிருந்து பாதுகாப்பு (இஸ்மத்) பெறாதவர் களிடம் வேறுபாட்டை அறவே அகற்றி விட முடியும் என்று எவ்வாறு கற்பனை செய்திட முடியும்?

## இகழப்பட்ட வேறுபாடு

கேள்வி : பிரிவுச் சட்டங்களிலும் அசல் சட்டங்கள் சிலவற்றிலும் கருத்து வேறு பாடுகள் ஏற்படுவது தவிர்க்க இயலாதது. அது ஒரு அருள். அல்லாஹ் வழங்கிய தாராளம். பெரும் செல்வம் என்பதை யெல்லாம் ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொண்டால் கருத்து வேறுபாட்டை இகழ்ந்து கூறப் பட்டுள்ள குர் ஆன் வசனங் களுக்கும் ஹதீஸ்களுக்கும் என்ன பொருள்?

பதில் : இகழ்ச்சிக்குரிய வேறுபாடு இருவகையில் அமையும். 1. மனோ இச்சை களைப் பின் பற்றுதல் வரம்பு மீறுதல் (பொறாமை) இவற்றின் காரணமாக ஏற்படும் கருத்து வேறுபாடு. வேதக்காரர்களான யூத, கிறிஸ்தவ சமுதாயத்தினரை யும் இவர்களைப் போன்றவர் களையும் அல்லாஹ் சபித்தது இதனால்தான். உலக மோகமும் பதவிப் பித்தும் அவர்களை முரண்படக் கூடியவர்களாக மாற்றியது. தெள்ளத் தெளி

**கேள்வி : பிரிவுச் சட்டங்களிலும் அசல் சட்டங்கள் சிலவற்றிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது தவிர்க்க இயலாதது. அது ஒரு அருள். அல்லாஹ் வழங்கிய தாராளம். பெரும் செல்வம் என்பதை யெல்லாம் ஏற்றுக் கொள்வதாக வைத்துக் கொண்டால் கருத்து வேறுபாட்டை இகழ்ந்து கூறப்பட்டுள்ள குர் ஆன் வசனங் களுக்கும் ஹதீஸ்களுக்கும் என்ன பொருள்?**

வாகத் தெரிந்துவிட்ட விஷயங் களிலும் ஆதாரங்கள் மூலம் தெளிவான விஷயங்களில் கூட அவர்கள் கருத்து வேறுபட்டனர்.

இதோ திருக்குர்ஆன் கூறுகிறது : மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர். நற்செய்தி கூறுபவர்களாகவும் எச்சரிக்கை செய்பவர்களாகவும் நபிமார்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அவர்களுடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக வேதத்தையும் இறக்கி வைத்தான். ஆனால் அவ் வேதம் கொடுக்கப்பட்டவர்கள் தெளிவான சான்றுகள் தம்மிடம் வந்தபின்னரும் தமக்கிடையே யுள்ள (தீய எண்ணம் செயல் களால்) அட்டூழியத்தால் முரண் பட்டார்கள். (2:213)

நிச்சயமாக அல்லாஹ்விடத் திலுள்ள தீன் இஸ்லாம்தான். வேதம் கொடுக்கப்பட்டவர்கள் தமக்கு விளக்கம் கிடைத்த பின்னரும் தமக்கிடையேயுள்ள அட்டூழியத்தால் முரண்பட்டனர். (3:19)

நிச்சயமாக நாம் இஸ்ர வேலர் களுக்கு வேதத்தையும் அதிகாரத் தையும் நபித்துவத் தையும் கொடுத்தோம். அவர் களுக்கு தூயவற்றிலிருந்து உணவையும் வழங்கினோம். அகிலத்தார்களை விட அவர்களை சிறப்புக்குரியவர் களாக்கினோம். தெளிவான கட்டளைகளையும் கொடுத் தோம். எனினும் தமக்கிடையே அட்டூ ழியத்தின் காரணமாக ஞானம் வந்த பிறகே தவிர அவர்கள் முரண் படவில்லை. நிச்சயமாக உம் இறை வன் அவர்கள் எதில் முரண்பட்டார் களோ அதில் அவர்களுக் கிடையே மறுமை நாளில் தீர்ப்பு வழங்குவான் (45:16,17)

ஆக, வரம்பு மீறல், பொறாமை, அட்டூழியம் இவற் றில் எழுந்த கருத்து வேறுபாடு சாபத்துக்குரியதே. இகழ்ச்சிக் குரிய கருத்து வேறுபாடுகளில் இரண்டாவது, இந்த சமுதாயத் தின் முழக்கம் சிதைந்திடவும் பகை வளர்ந்திடவும் குழுக்களிடையே சண்டை மூண்டெழவும் ஒருவர் மற்றவரைத் தாக்கி அழித்திடத் தயாராகிடவும் காரணமாக எது அமைகிறதோ அந்தக் கருத்து வேறுபாடும் சாபத்துக்குரியதே. இதைத்தான் சங்கைமிகுத் திருக் குர்ஆனும் தூய்மையான சுன்னா வும் வன்மையாகக் கண்டிக் கின்றன.

அல்லாஹ்வுக்கு அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள் என்றும் மரணம் வரை இஸ்லாமில் நிலைத்திருங்கள் என்றும் வலி யுறுத்திய பின்னர் திருக்குர்ஆன் கூறுகிறது.

அல்லாஹ்வின் கயிறை நீங் கள் எல்லோரும் பற்றிப் பிடியுங் கள். பிரித்துவிடாதீர்கள். அல் லாஹ் உங்களுக்கு வழங்கிய அருளை எண்ணிப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாயிருந்தீர். அப்போது அவன் உங்கள் உள்ளங்களை அன்பால் பிணைத் தான். எனவே அவனது அருளால் நீங்கள் சகோதரர்களானீர்கள் (3:103)

அவ்வசனத்திற்கு பின்னால், பிளவுப் படக்கூடாது என எச்சரிக் கிறது திருக்குர்ஆன். உங்களுக்கு முன்னர் வாழ்ந்த சமுதாயத்தினர் போல நீங்கள் பிரிந்தால் அவர்களுக்கு நேர்ந்த (அழிவு) உங்களுக்கும் வரும் என்கிறது.

தம்மிடம் தெளிவான சான்றுகள் வந்த பின்னரும் வேறுபட்டு பிரிந்தவர்கள் போல நீங்கள் ஆகிவிட வேண்டாம் அவர்களுக்கு பயங்கர தண்டனை உண்டு (3:105)

இன்னோரிடத்தில் திருக்குர் ஆன் கூறுகிறது. அல்லாஹ் வுக்கும் அவனின் தூதருக்கும் கட்டுப்படுங்கள். முரண்படாதீர் கள் (முரண் பட்டால்) கோழை களாகி விடுவீர் கள். உங்கள் பலம் போய்விடும். நீங்கள் பொறுமை யுடனிருங்கள். நிச்சயமாக அல் லாஹ் பொறுமையாளர்களுட னிருக்கிறான் (8:46)

தமது மார்க்கத்தைப் பிளந்து தாமும் பல கூறுகளாகி விட்ட வேதத்தைத் திரித்த வேதக் காரர்கள் இணை வைப்பவர்கள் ஆகியோரை இகழ்கிறது திருக் குர்ஆன்.

யார் தமது மார்க்கத்தைப் பிரித்து தாமும் பல கூறுகளாகி விட்டார்களோ அவர்களிடத்தில் (நபியே) நீர் எவ்வித தொடர்பிலும் இல்லை (6:159)

இன்னொரு அத்தியாயத் தில் இப்படிக் கூறுகிறது. (நபியே) நேரான மார்க்கத்துக்கு நீர் உம் முகத்தை திருப்புவீராக எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனின் இயற்கை மார்க்கம். அல்லாஹ்வின்

படைப்பில் எந்த மாற்றமும் இல்லை. அதுவே நிலையான மார்க்கம். எனினும் மனிதர்களில் அனேகர் அறியாதவர்கள்:

நீங்கள் அவனிடமே திரும்பியவர்களாக இருங்கள். அவனுக்கு அஞ்சுங்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள். இணைவைப்போரில் ஆகிவிடாதீர்கள். யார் தமது மார்க்கத்தைப் பிளந்து பல பிரிவுகளாகிவிட்டனரோ அவர்களில் நீங்கள் ஆகிவிடாதீர்கள். (அவ்வாறு பிரிந்த) ஒவ்வொரு கூட்டத்தினரும் தம்மிடமிருப்பதைக் கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர் (30:30-32)

தொடரும். . . .

**தமிழில் : இல்யாஸ் ரியாஜி**

---

# கட்டாய திருமண பதிவுச் சட்டம் நிவாரணம் தேடி. . . .

கடந்த 24.11.2009 அன்று தமிழக அரசு அறிவித்த தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் 2009 (தமிழ்நாடு சட்டம் 21/2009) எனும் சட்டம் அறிவிக்கப்பட்ட நாள் முதல் அது தமிழக முஸ்லிம்கள் மத்தியில் பெரும் பீதியைக் கிளப்பியுள்ளது.

தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா சபை முதன்முதலாக இச்சட்டம் குறித்த தனது ஐயங்களை, அச்சங்களை, இதனால் விளையும் ஆபத்துக்களை விளக்கி இச்சட்டம் திரும்பப் பெறப்பட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. சபையின் உறுப்பினர்களான சங்கை மிகு உலமா பெருமக்கள் தம்முடைய ஜும் ஆ உரைகள் வழியாக மக்கள் கருத்தைத் திரட்டினார்கள்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து "இச்சட்டத்திலிருந்து முஸ்லிம்களுக்கு விலக்களித்திட வேண் டும்" என்று கோரிக்கை வைத்திடவும் ஜமாஅத்துல் உலமா கலந்துபேசியது எல்லோரும் சேர்ந்து முதல்வரை சந்திக்கமுடிவு செய்திருந்தது. இதனிடையே தமிழகத்திலுள்ள இதர முஸ்லிம் அமைப்புகளையும் ஜமாஅத்துல் உலமா கலந்துபேசியது எல் லோரும் சேர்ந்து முதல்வரை சந்திக்க முடிவு செய்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் 'வைகறை'யில் நாம் ஒரு அறிவிப்பை வெளியிட்டி ருந்தோம்.

கட்டாய திருமண பதிவுச் சட்டம். இது குறித்து முஸ்லிம் அமைப்புக்கள் சில அச்சங்களை எழுப்பியுள்ளன. அவற்றுக்கு நிவாரணம் தேடி தமிழக முதல் வரை சந்திக்க இருக்கின்றார்கள். நிவாரணம் கிடைக்கும் என்பதால் அவற்றைப் பற்றி நாம் இப்போது எதுவும் எழுத விரும்பவில்லை என்று தெரிவித்திருந்தோம்.

முஸ்லிம்களின் கோரிக்கைகளை காது கொடுத்துக் கேட்கவும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் தமிழக அரசு தயாராக இருப்பதாலும் உலமாக்கள் சபை அரசை சந்திக்க உரிய முயற்சி மேற் கொண்டிருந்ததாலும் அது பலன் தரும் என்ற நம்பிக்கை நமக்கு இருந்தாலும் நிவாரணம் கிடைக்கும் சூழலில் அச்சட்டத்தை விமர்சிப்பது அவசியமில்லை என்று கருதினோம்.

இதன் பின்னர் பிப்ரவரி 3-ம் தேதி பத்திரிக்கையாளர்களைச் சந்தித்தார்கள் தமிழக முதல்வர். அப்போது இது தொடர்பான கேள்விக்கு "இது மத்திய அரசின் சட்டம். நீதிமன்றத்தீர்ப்பின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டது. அதிலே சிறுபான்மையினரின் உரிமையைப் பாதிப்பது பற்றி சிறுபான்மையோரின் பிரதிநிதிகளிடம் ஆலோசிக்கவிருக்கிறேன்" என்று பதிலளித்தார் முதல்வர் (தினகரன் 4.2.2010)

இந்நிலையில் 06.2.2010 இந்திய யூனியன் முஸ்லீம் லீக் நடத்திய கலந்துரையாடல் அமர் வில் தாருல் இஸ்லாம் சார்பில் அதன் தலைவர் மு. குலாம் முஹம்மது பங்கேற்று இச்சட்டத்தின் ஆபத்துக்களையும் பின்விளைவுகளையும் எடுத்துரைத்து இச்சட்டத்தில் முஸ்லிம்களுக்கு விலக்குப் பெற முயற்சிக்க வேண் டும் என்று கருத்து கூறினார்.


எல்லா முஸ்லிம் அமைப்புக்களும் மொத்தமாகச் சென்று முதல்வரை சந்தித்து நிவாரணம் கிடைக்க முயல வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது.

17.02.2010ம் தேதி முதல்வரை சந்திக்க வரும்படி முஸ்லிம் அமைப்புகளுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அழைப்பு விடுத்திருந்தது. இரு பத்திரண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள் சென்னை மயிலாப்பூர் பிரசிடெண்ட் ஹோட்டலுக்கு காலை சுமார் 9.30 மணிக்கு வந்தனர். ஆனால் முதல்வருடன் அன்று சந்திப்பு நடைபெறவில்லை.

இச்சட்டம் பற்றிய நிலைப்பாட்டில் முஸ்லிம் அமைப்புகளிடையே மாற்றுக் கருத்து நிலவுவதாக அரசுக்கு தகவல் வந்துள்ளது. எனவே முதல்வரை சந்திக்கும் முன்னர் எல்லோரும் ஒரே கருத்தில் இணங்கிவந்து, உங்கள் கருத்துக்களை முதல்வரிடம் தெரிவித்தால் அவர் அதை அப்படியே ஏற்றுக் கொள்வார் என்று (C.M.O) முதல்வரின் அலுவலகம் கூறியதாக முஸ்லிம் லீக் தெரிவித்தது.

பின்னர் அப்போது பிரசிடெண்ட் ஹோட்டலிலேயே ஒரு சுற்று கருத்து பரிமாற்றம் நடந்தது. முடிவில் இச் சட்டத்திலிருந்து முஸ்லிம்களுக்கு முழு விலக்கு அளித்திடவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. முதல்வரை சந்தித்து வழங்கிட வேண்டிய கோரிக்கை மனுவை தயாரித்திடும் பொறுப்பை ஏற்றிட ஏழு பேர் கொண்ட குழுவை தமிழ் மாநில ஜமாஅத்துல் உலமா சபையின் தலைவர் ஷைகுல் ஹதீஸ் அப்துல் ரஹ்மான் ஹழ்ரத் நியமித்தார்கள்.

தொடர்ச்சி 19ம் பக்கம்.




நூலாசிரியர் டாக்டர் வி.எஸ். நடராஜன் முதியோர் மருத்துவச் சேவைக்காக பெருமை வாய்ந்த டாக்டர் பி.சி. ராய் தேசிய விருதைப் பெற்றவர். 1978-ல் சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் முதியோர் நலப் பிரிவைத் தொடங்கியவர், முதியோர் மருத்துவத்தின் முக்கியத்துவத்தை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர், முதியோருக்கு அவர்களுடைய வீட்டுக்கே சென்று சிகிச்சை அளிக்கும் திட்டத்தை தொடங்கியவர் என, முதியோர் மருத்துவம் தொடர்பான பல முதல் முயற்சிகளை மேற்கொண்ட சாதனையாளர்.

## முதுமையில் மேற்கொள்ளும் அறுவைச் சிகிச்சை

- **முதுமையில் மேற்கொள்ளக்கூடிய அறுவைச் சிகிச்சைகள் என்னென்ன?**

தற்போதைய நிலவரப்படி, அடுத்த பத்து ஆண்டுகளில் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்பும் முதியவர்களின் எண்ணிக்கை பெருமளவு உயரக்கூடும் என்று தெரிகிறது.

முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்தல், விழிப்புணர்வு, வாழ்நாளை நீட்டிப்பதில் ஆர்வம், நிதி வசதி, அறுவைச் சிகிச்சை நிபுணர் மற்றும் மயக்க மருந்து நிபுணர்களின் (Anaesthesist) திறமை, கண் புரை, விபத்து, சிறுநீரக இயல் அறுவை சிக்சை மற்றும் ஜீரண உறுப்புகளில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சைகளே இதற்கு முக்கியக் காரணங்களாகும்.

- **முதியோர்க்கு அறுவைச் சிகிச்சை செய்யும் போது எதிர்கொள்ளப்படும் பிரச்னைகள் என்னென்ன?**

முதியோருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும்போது சில பிரச்னைகளை எதிர் கொள்ள நேரிடும்.

- **நோய் கண்டறிதலில் பிரச்னை:**

முதலில் நோய் கண்டறிதலே சிரமமாக இருக்கும். உதாரணம்: குடல்வால் அழற்சி (Appendicitis). இது ஓர் இளைஞனுக்கு வரும்போது கடுமையான வயிற்று வலி, வாந்தி போன்றவை ஏற்படலாம். இதுவே, ஒரு முதியவருக்கு வரும் போது வயிற்றில் ஏதோ சங்கடம் அல்லது அசாதாரணத் தன்மை மட்டுமே உணரப்படும். பரிசோதனையிலும் பிரச்னை தெளிவாகத் தெரியாது.

- **அறுவைச் சிக்சைக்குப் பிறகு எதிர்கொள்ளும் பிரச்னைகள்:**

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு முதியவர்களுக்கு அதிக பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உதாரணம் : குழப்பம், நோய்த் தொற்று, திரவச் சத்தின் சமச்சீரின்மை, அதிக நேரம் படுக்கையில் கழிப்பதால் ஏற்படும் உடல் புண்கள், மலச்சிக்கல், மன அழுத்தம் போன்றவை. கால்களில் ரத்தம் கட்டிக்கொள்ளும் வாய்ப்பும் அதிகம்.

- **முதியோருக்கு எந்த மாதிரியான அறுவைச் சிகிச்சை பாதுகாப்பானது?**

அறுவைச் சிகிச்சைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

### அவசர அறுவை சிகிச்சை

வயிறு சம்பந்தமான பிரச்னைகள், விபத்து போன்றவற்றுக்கு முதல் 6 மணி நேரத்துக்குள சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இதில் பிரச்னை அதிகம் தான் என்றாலும், அறுவைச் சிகிச்சையைத் தவிர்ப்பது உயிருக்கே ஆபத்தாக முடியலாம்.

### முன்கூட்டியே செய்யப்படும் அறுவைச் சிகிச்சை

உதாரணம்: சர்க்கரை நோயாளிகள் சிலருக்கு கால்களில் புண் ஏற்பட்டு, சில சமயங்களில் காலையே கூட அகற்ற நேரிடலாம். அதனால், கால்களில் புண் உருவான உடனேயே அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்.

### தேர்தெடுத்து செய்யப்படும் அறுவை சிகிச்சை

மிகவும் பாதுகாப்பானது. ஒரு நோயைப் பற்றி நிறுத்தி நிதானமாக ஆராய்ந்து, தேவைப்படும் பட்சத்தில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை முறை. நீரிழிவு, ரத்த அழுத்தம் இருந்தால் அதைக் கட்டுக்குள் கொண்டு வந்த பிறகு மேற்கொள்ளப்படுவது. இதனால் அவசரச் சிகிச்சையும் தவிர்க்கப்படும். முதியோர் அறுவைச் சிகிச்சை நிபுணரின் அறிவுரை யைப் பின்பற்றி செய்து கொள்ள வேண்டிய இதைத் தவிர்ப்பது உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும்.

- **அறுவை சிகிச்சையை வெற்றியடைய வைக்கும் காரணிகள் யாவை?**

அறுவை சிகிச்சை செய்து கொள்ள வயது ஒரு தடை அல்ல. என்றாலும் வயது அதிகரிக்கும் போது பிரச்னைகளும் அதிகரிக்கும்.

அறுவைச் சிகிச்சை வெற்றியடைய. . .

- ஆரம்ப நிலையிலேயே நோயின் தன்மையைத் துல்லியமாகக் கண்டறிதல்.
- சிகிச்சைக்கான திட்டம்.
- அவசர சிகிச்சையைத் தவிர்த்தல்.
- ரத்த அழுத்தம், சர்க்கரை அளவுகளைக் கண்காணித்தல்.
- சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணர்.
- அறுவை சிகிச்சைக்குப் பிறகான பிரச்னைகளைச் சமாளித்தல்.

முதுமையில் கட்டாயம் அறுவைச் சிகிச்சை செய்துக் கொள்ள வேண்டிய நோய்கள் பல உள்ளன. அவசியம் என்றால் காலம் தாழ்த்தாது உடனே செய்து கொள்வதுதான் நல்லது.

*தொடரும். . .*

**17ம் பக்க தொடர்ச்சி. ..**

இக்குழு மூன்று முறை கூட இந்த சட்டத்தின் சாதக பாதக அம்சங்களை அலசியது. முதல் வரிடம் தரவேண்டிய கோரிக்கை மனுவை தயாரித்தது.

இந்த சூழலில் பிப்ரவரி 20-ம் தேதி நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதில்,

உச்ச நீதிமன்ற தெரிவித்த வரைவுத் திட்டத்தின் படி, அனைத்து மாநிலங்களும் திருமணங்களை பதிவு செய்ய வேண்டுமென்ற சட்டத்தை இயற்ற வேண்டுமென்று தெரிவித் ததின் அடிப்படையில், அந்தச் சட்டம் இயற்றப்பட்டு அதன் காரணமாக இஸ்லாமிய சிறுபான் மை மக்களுக்கு பல்வேறு ஐயங்கள் ஏற்பட்டுள்ளன. திருமணம், மணவிலக்கு, சொத்து ரிமை, மற்றும் வாரிசு உரிமை சட்டங்களைப் பொறுத்து அவர்களுக்கு தனியான தோர் சட்டத்தின் மூலம் பேணப்பட்டு வருகிறார்கள். இஸ்லாமிய திருமணங் கள், மணவிலக்குகள், ஊர் உறவின் முறை ஜமாஅத், அரசால் நியமக்கப்படும் காஜியா லேயே பதிவு செய்திடும் முறை பல ஆண்டுகாலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது. அதற்கும் கூடுதலாக தற்போது உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல் பேரில்இயற்றப்பட்டுள்ள “திருமணப் பதிவு” சட்டத்தினால் இன்னொரு முறையும் என்று நுழைக்கப்பட்டு அவர்களது மார்க்க நடைமுறைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்று இஸ்லாமிய பெருமக்களின் பல்வேறு பிரதிநிதிகள் அரசிடம் முறையிட்டு வருகிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினை குறித்து இஸ்லாமிய சமுதயாத்தினரின் பிரதிநிதிகளை மத்திய, மாநில அரசுகளில் உள்ளவர்கள் அழைத்துப் பேசி, இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்தும் வகையில் ஆவன செய்திட வேண்டுமென்ற இப்பொதுக் குழு வலியுறுத்துகிறது.

என்று கூறப்பட்டிருந்தது.

இது நிவாரணம் கிடைத்திடும் என்ற நம்பிக்கையை அதிகப்படுத்தி யுள்ளது.

# 'சிமி' நீதி கிடைக்குமா?

'சிமி' (Simi) இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் மீதான தடையை நீக்கிட வேண்டும். ஏனெனில் அரசு இன்றளவும் எந்த ஆதாரத்தையும் 'சிமி'க்கு எதிராகத் தந்திடவில்லை.

'சிமி' -ஐ - இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தைத் தடைசெய்தது செல்லாது என நீதிபதி கீதா மித்தால் அவர்கள் 2008 ஆம் ஆண்டு பெப்ருவரி திங்களில் அறிவித்தார். காரணம் 'சிமி'ஐ தடை செய்ய எந்த ஆதாரமுமில்லை என்பதே.

நீதிபதி கீதா மித்தால் அவர்களின் உத்தரவை 24 மணி நேரத்தில் கிடப்பில் போட உத்தரவிட்டது உச்சநீதிமன்றம். ஆனால் 'சிமி' இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கம் தடை செய்யப்பட்ட செப்டம்பர் 2001 ஆண்டு முதலே அதனிடம் கிடப்பில் கிடக்கும் மூல வழக்குகளை விசாரிக்க உச்ச நீதிமன்றத்திற்கு நேரம் கிடைக்கவில்லை.

ஆனால் நீதிபதி கீதா மித்தால் அவர்களின் உத்தரவை வெறும் வாயால் ஒரு வழக்கறிஞர் சொல்ல, (அவர் எந்த ஆதாரத்தையும் காட்டிடவில்லை), உடனேயே கிடப்பில் போடும் உத்தரவைப் பிறப்பித்தது. இதில் 'சிமி' தரப்பு வழக்கறிஞர்களின் கருத்துக்களை செவிமடுக்கும் இங்கிதம் கூட உச்சநீதிமன்றத் திற்கு இல்லை.

'சிமி' இன் பெயரால் நாடெங்கும் கைது செய்யப்பட்டவர்கள், விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட பொய் வழக்குகள் அனைத்தையும் உடைத்தெறிந்து விட்டார்கள். அத்தனை வழக்குகளும் ஆதாரமற்றவை என்பதை நாடெங்கிலுமுள்ள நீதிமன்றங்கள் கூறி விட்டன. (இவற்றை நாம் வைகறையில் வெளியிட்டிருந்தோம்)

இனியும் ஏன் தடை? அதனை உடனேயே நீக்கிட வேண்டும் என்கின்றார் அபூ ஜாஃபர் அபுல் அஸ்மி. இவர் நாடெங்கிலும் சிமி மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் அவற்றிலிருந்து இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தவர்கள், விடுவிக்கப்பட்ட வரலாறு இவற்றைத் தொகுத்து தந்துள்ளார்.

இந்த தொகுப்பின் இறுதியில் சிமி மீதான தடை உடனே நீக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

உச்சநீதிமன்றம் துயிலெழும், நிதி கிடைக்கும் என எதிர்பார்க்கின்றார். ஏமாந்திட!

நீதிகிடைக்கவில்லை. மீண்டும் தடை நீடிக்கப்பட்டது

---

'சிமி' முக்கிய குறிப்புகள்!

தொடக்கம் - **25 ஏப்பிரல், 1977** அலிகர்.

நடுவர்மன்றம் தடை நீட்டிப்பு (ஆதாரமின்றி) : **26, மார்ச்சு, 2002**

இரண்டாவது தடை (நீடிப்பு) (ஆதாரமில்லாமல் 2 ஆண்டுகள்) : **26, செப்டம்பர் 2003.**

மீண்டும் நடுவர் மன்றம் தடை நீடிப்பு: **16 ஏப்பிரல் 2004**

மூன்றாவது தடை (2 ஆண்டுகள்) : **8 பெப்ருவரி 2006**

மீண்டும் நடுவர் மன்றம் தடை (ஆதாரமின்றி) : **8 ஆகஸ்ட் 2006**

நான்காவது தடை (2 ஆண்டுகள்) : **7 பெப்ருவரி 2008.**

நடுவர் மன்றம் தடை நீக்கம் **5ஆகஸ்ட் 2008** உச்சநீதிமன்றம் கிடப்பில் போடும் ஆணை : **6 ஆகஸ்ட் 2008.**

---


## இறைவனின் அழகிய வழி காட்டுதல் அனைவருக்கும்

மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்?

இந்த வினாவிற்கான முழுமையான விடையே திருக்குர்ஆன்

இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன்
தமிழ் மொழி பெயர்ப்பை பெற்றிட கீழ்காணும் முகவரிக்கு எழுதுங்கள்!

**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்**

235, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014

**குறிப்பு :**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

# சிந்தனையைத் தூண்டிவிடும் அறிவியல் நுணுக்கங்கள்! பயன்பாட்டுப் படைப்புகள்!! வியப்பூட்டும் விளக்கங்கள்!!!

ஆம்! இவையனைத்தும் சோழிங்கநல்லூர் முஹம்மது சதக் கலை அறிவியல் கல்லூரியில் கடந்த சனவரி மாதம் 20-23 தேதிகளில் நடத்தப்பட்ட குளோப் டெக் 2010 அறிவியல் கண்காட்சியைக் கண்டு அனுபவித்தவர்களின் இனிய உணர்வுகள்!

கல்லூரியின் அனைத்துப் பயன்பாட்டு அறிவியல் துறைகளும் ஆர்வமுடன் பங்கு கொண்ட இக்கண்காட்சியின் நோக்கம்; அடிப்படை அறிவியல் கல்வியின் இன்றியமையாமை, சமீப காலத்தில், பயன்பாட்டு அறிவியலில் நிகழ்த்தப்பட்டிருக்கும் சாதனைகள், முன்னேற்றங்கள் ஆகியவற்றை மக்கள் அறிய விளக்குவது; சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தொழில்நுட்ப வளர்ச்சியில் எதிர்மறை பாதிப்பான புவி வெப்பமடைதலின் காரணங்கள், அவற்றைத் தடுப்பதில் நமது பொறுப்பும் கடமையும் என்பவைகளாகும். ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் இத்தகைய பொது நோக்கில் முனைந்திருப்பது பாராட்டிற்குரியது.

மாணவ மாணவிகள் தனித் தனியாக செயல் திட்டங்கள் மேற்கொண்டு, அதன்மூலம் வடிவமைப்பு செய்திருந்த சாதனங்களும் அவற்றின் அமைப்பு, பயன்பாடு ஆகியவற்றைத் தெள்ளத் தெளிவாகப் பார்வையாளர்களுக்கு விளக்கியிருப்பதும் இக்கண்காட்சியின் தனித்தன்மை என்றே கூறலாம்.

தொழில்நுட்ப வளர்ச்சியில் பல்கிப் பெருகியுள்ள தொழிற்சாலைகள், இருசக்கர வாகனங்கள், சீருந்துகள், பேருந்துகள், ஆகியன இயற்கையின் மறுசுழற்சியை விஞ்சிடும் அளவுக்கு வெளியிடும் கரியமில வாயு ($Co_2$), புவியின் மேற்பரப்பிலிருந்து திருப்பி விடப் படும் கதிரவனின் வெம்மைக்கதிர் வீச்சுக்களை மீண்டும் புவி மீதே அள்ளி வீசுவதால், புவி வெப்ப மடைவதையும், அதனால் சுற்றுச் சூழல் சமநிலையில் (Eco logcial Balance) உண்டாகும் பாதிப்புகள் எவ்வாறு உலகை அழிவுப்பாதையில் தள்ளிக் கொண்டிருக்கின்றன என்பதையும் நம் கண் முன்னே செயல்படுத்திக் காட்டியிருப்பது, நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது என்று கூறுவதை விடச் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டியது என்று சொல்வதே



முஹம்மது சதக் கலை அறிவியல் கல்லூரி அறிவியல் கண்காட்சி குளோப் டெக் 2010 நிறைவு விழா 23.01.2010

பொருத்தமானது உயிர்த் தொழில் நுட்பத்துறை (Biotechnology) உயிர்த் தகவலியியல் (Bioinformatics) துறை, நுண்ணுயிரியல் துறை (Micro Biology) போன்றவற்றில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், ஆரோக்கியமிக்க வாழ்வை உறுதி செய்யவும் பயன்படுவதை அறியும் போது நம்பிக்கை வலிமை பெறுகிறது. நோயினாலும் வயது முதிர்ச்சியினாலும் வலிமை குன்றிச் செயலழிக்கும் உடல் உறுப்புகளை அகற்றிவிட்டு செல் பெருக்கம் (Cloning) முறையில் மாற்று உறுப்புகள் உருவாக்கிப் பொருத்தும் திறன் வளர்ந்து வருவதை அறியும் போது, நீரழிவு நோய், இதயநோய், சிறுநீரகக் கோளாறு போன்ற உயிர்கொள்ளி நோய்கள் முறியடிக்குப்படும் காலம் நெருங்கி விட்ட உணர்வு ஏற்படுகிறது.

அறிவியலின் தாய், எனப்படும் கணிதம் நமது நல்வாழ்விற்குப் பற்பல வழிகளில் பயன்படுகிறது என்பது விளக்கப்பட்ட போது, இனிமேல் கல்வியில் முதலிடம் கணிதத்திற்கே என்ற உறுதி உள்ளத்தில் ஆழமாகப் பதிகிறது. கணினி நமது வாழ்வின் இன்றியமையான அங்கம் என்பது அருமையாகச் செயல் படுத்திக் காட்டப்பட்டது.

மின்னணுத் துறை அரங்கம் நம்மையெல்லாம் வியப்பிலாழ்த்தியது. எத்துனை வகை பயன்பாட்டுச் சாதனங்கள்! தானியங்கித் தெரு, விளக்கு காற்று மற்றும் சூரியச் சக்தியில் மின் உற்பத்தியில், வாயு கசிவு எச்சரிக்கை கருவி, குண்டு (Bomb) கண்டறியும் கருவி, ராக்கட் தொழில் நுட்பம், தூரம் சென்று தாக்கும் போர்க் கருவி (Missle) நீர் அளவு காட்டும் கருவி, தலைக் கவசம் அணியாவிடில் ஓட மறுக்கும் இருசக்கர வாகனம் - எனப் பற்பல கருவிகள் அவற்றின் மின் இணைப்பு விளக்கங்கள் அனைத்தும் கண்டவர் களைக் களிப்புறச் செய்தன.

இவை போதாதென்று, நாவிற்கு ஏன் குறை என்று சொல்வது போல் அமைந்திருந்தது, ஓட்டல் மேலாண்மை துறையின் அரங்கம் உணவு வகைகளின் செய்முறை, பரிமாறும் கலை, உள் அலங்காரம், காய்கறிப் பழங்களில் கண்கவர் வடிவமைப்புகள் என நாவிற்கும் கண்களுக்கும் விருந்து படைத்தனர். அத்துறையின் மாணவ மாணவிகள். சுருக்கமாகச் சொல்வதென்றால் முஹம்மது சதக் கலை அறிவியல் கல்லூரி, இக்கண்காட்சியின் மூலம் அறிவியலின் சாதனைகளை வெளிச்சமிட்டது என்பதை விட காண்போர் உள்ளத்தில் அறிவியல் தேடலை எழுச்சி பெறச் செய்தது என்பதே உண்மை.

குளோப் டெக் **2010** அறிவியல் கண்காட்சி, சனவரி **20**ஆம் தேதி, தமிழ் நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் (TNSCST) உறுப்பினர் செயலர், முனைவர் எஸ். வின்சென்ட் அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது. நிறைவு விழா, சனவரி **23**ஆம் தேதி, சென்னை இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (IITM) துணை இயக்குநர், முனைவர் வி.ஜி. இடிச்சாண்டி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அறிவியல் திருவிழா (Science Fair) மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் முஹம்மது சதக் கலை அறிவியல் கல்லூரி, வணிகம், தொழில் மேலாண்மை, தகவல் இணைவு மேலாண்மை, உயிர் ரசாயணம், நுண்ணுயிரியல, உயர்த் தொழில் நுட்பம், உயர்த்தகவலியி யல், கணிதம் கணினி இயல், காட்சித் தகவல இயல், சமூகப்பணி இயல மற்றும் விருந்தோம்பல் ஓட்டல் மேலாண்மை துறைகளில் இளங்கலை முதுகலை கல்வியும் நுண்ணுயிரியல், உயர்த்தொழில் நுட்பவியல் ஆகியவற்றில் ஆய்வுக் கல்வியும் வழங்கும் முதுகலை ஆய்வுக் கல்வி நிறுவனமாகும். தேசியத் தர ஆய்வுச் சான்றிதம் கழகத்தால் தரச் சான்றிதம் பெற்ற உயர்க்கல்வி நிறுவனம் என்பது குறிப்பிடத் தக்கது.



நீர் மாசுபடுதல் - நமது வாழ்வின் நிலைபாட்டிற்குத் தலைமேல் தொங்கிக் கொண்டிருக்கும் கூரிய கத்தியின் ஆபத்து

# 108 : சேவை

7/2/2010 இரவு 10.30 மணிக்கு அரசு பேருந்தில் சென்னையை நோக்கி அன்பகம் வீற்றிருக்கும் கும்பக் கோணத் திலிருந்து பயணம் செய்தோம்.

இரண்டாம் ஜாமம் தாண்டிய பேருந்தில் சுமார் 3.30 மணிக்கு எங்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்த அரசு பேருந்தின் மீது எதிர் வந்த "விவேகம்" என்ற தனியார் பேருந்து தடம் மாறி மோதி விட்டது.

விபத்தில் விவேகம் பேருந்து ஓட்டுநர் கசங்கிப் போய்விட்டார் - தடத்திலேயே இறந்து விட்டார்.

அதே போல் அரசு பேருந்தின் ஓட்டுநரும் தடத்தி லேயே இறந்துவிட்டார். (இன்னா லில்லாஹி) வ இன்னா அலைஹி ராஜி யூன்).

இந்நிலையில் இரண்டு பேருந்திலும் இருந்து சுமார் 50 பேர் பயங்கர காயங்கள் - பீறிட்டுப் பாயும் இரத்தம் இவற்றோடு மீட்கப்பட்டார்கள்.

அனைவரையும் பண்ருட்டி மருத்துவமனைக்குத்தான் அனுப் பிட வேண்டும்.

என்னோடு பயணம் செய்த சென்னை நகர தாருல் இஸ்லாம் பொறுப்பாளர் சாதிக் அலுவலகப் பொறுப்பாளர்களில் ஒருவரான பைசல் அனைவரும் 108க்கு போன் செய்தோம்.

ஐந்து நிமிடங்களுக்குள் பல முறை 108க்குப் போன் செய்த போதும் நிலையத்தில் இருந்தவர் கள் பொறுமை இழக்காமல் பதில் சொன்னார்கள். "எல்லா 108 களையும் அந்த இடத்திற்கு தான் அனுப்பிக் கொண்டிருக் கின்றோம்" என பரிவோடு பதில் சொன்னார் கள்.




அடிப்பட்டவர் களுக்கு தண் ணீர் தருகின்ற பணியை சக பயணி கள் கவனித்தார்கள். எல்லா பயணிகள் மினரல் வாட்டர் பாட்டில்களும் அங்கே குவிந்தது.

தாடை ஒடிந்த பெண், கால்கள் இண்டும் சேதப்பட்ட பெண், முகமெல்லாம் இரத்தத் தோடு வீற்றிருந்த வாலிபர். அஜானுபாகுவான ஆனால் இடிப்பில்பட்ட அடியால் எழுந்து இருக்கவியலாத இளைஞன்.

தனது துயரத்தை சொல்லிட முடியாத பிரஞ்கையற்ற பெண்.

இருப்பது போல் தெரிந்த ஆண், ஆனால் இருந்த இடத்தை விட்டு அகற்றியவுடன் அட்டி அட்டியாக இரத்தக் கட்டி. இப்படிச் சிதறிக் கிடந்த எத்தனை பேர் நமது கண்களின் முன்னால் இறந்து போவார்களோ என நாம் கலங்கியபோது 108 ஓடோடி வந்தன.

இதனால் பலர் காப்பாற்றப் பட்டனர்.

### காயம்பட்டவர்களின் பெருந்தன்மை

நன்றாக அடிப்பட்டு நொறுங்கிக் கிடந்தவர்களையும், இரத்தம் அதிகமாக பீறிட்டுப் பாய்ந்து கொண்டிருந்தவர்களை யும் நாங்கள் 108 களில் ஏற்றிய போது, காயம்பட்ட சிலர் நான் அடுத்த 108இல் வருகின்றேன் இப்போது அவரை . . . . அவரை. . . ஏற்றுங்கள் எனக் கூறியது நெஞ்சை நெகிழச்செய்தது.

சில காவல் துறையினர்ட சுறுசுறுப்பாக இயங்கினர். பலர் சும்மா பம்மாத்துக் காட்டி நின்றனர். வந்த ஆத்திரத்தில் அவர்களை வைதுவிட்டுடோம். ஆனால் கெத்து காட்டினார்களே அல்லாமல் அசையவில்லை இவர்கள்.

திருத்தப்பட்டார்கள். மனதுக்குள் ஒரு விதமான சில சிறப்பு பயிற்சிகள் தேவைப்படு கின்றன. மனித தடவல் (Human Touch) தேவை.

### சேவை சிறப்படைய

108 இன் சேவைகள் சிறப்பானதாக இருந்ததால், இவர்களின் சோம்பல் காயம் பட்டவர்களைப் பாதிக்கவில்லை. சக பயணிகள் செய்த சேவையால் இவர்களின் மமதை காயம் பட்டவர்களை காவு கொள்ள வில்லை.

108கள் இதே போல் பெரிய எண்ணிக்கையில் காயம்பட்டவர் களைக் காபாற்றிடும் வகையில் பெரிய ஊர்திகளையும் பெற்றிருந் தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

அதிகபட்சம் நான்கு பேரை மட்டுமே ஏற்றிச் சென்றிட இயலும் என்ற நிலையில்தான் 108கள் இருக்கின்றன.

ஒவ்வொரு 108 மையத்திலும் ஒரிரு பெரிய ஊர்திகள் இடம் பெற்றால் சேவை நிறைவானதாக இருக்கும்.

எது எப்படி இருந்தாலும் இந்த 108 சேவை கொண்டு வந்த கலைஞரைப் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

இதுபோன்ற நேரங்களில் சாதாரணமாகக் கிராமத்து மக்கள் துடிப்பாக இருப்பார்கள். ஆனால் பண்ருட்டிக்குப் பக்கத்திலுள்ள அண்ணா நகர் மக்கள் ஒதுங்கி நின்றது வியப்பைத் தந்தது.

### புதியச் சட்டம்

இந்நிலையில் எல்லா மருத்துவ மனைகளும் தனியார் மருத்துவமனைகள். (Health Centres) என்ற ஆரோக்கிய மையங்கள் அனைத்தும் விபத்திற்குள்ளானவர்களுக்கு மருத்துவம் செய்திட வேண்டும். எந்த நிலையிலும் மறுத்திடக்கூடாது என்ற சட்டம் வந்திருக்கின்றது. இது பலன் பல பயக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த அரசுக்கு மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்தும் கொள்கின்றோம்.

---

# கடைசி குண்டுவரை! - வினிதா காம்தி

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூலைப் போலவே மிகவும் முக்கியமான தொரு நூல் “To the Last Bullet” கடைசி குண்டு வரை என்று நூல்.

இந்த நூலை எழுதியவர் கர்கரேயுடன் கொலை செய்யப்பட்ட அஷோக் காம்தியின் மனைவி வினிதா காம்தி.

அந்த நூலின் முக்கிய பகுதிகளையும் வைகறை வாசகர்களுக்கு தருகின்றோம்.

முதலில் வினிதாவின் நெஞ்சிலிருந்து நேராக என்ற அத்தியாயத்தை தருகின்றோம்.

**26.11.2008**, புதன்கிழமை மும்பையின் வாழ்க்கை போக்கை மாற்றிற்று. அது என்னுடைய வாழ்க்கையையும் மாற்றிவிட்டது.

எதிர் பாராமல் நடந்த அந்தத் தாக்குதல், காவல் துறையின் வீரத்தை வெளிப்படுத்தியதைப் போல், காவல் துறையின் பலவீனங்களையும் வெளிப்படுத்தியது.

மும்பைக் காவல் துறை இதைப் போன்றதொரு தாக்கு தலை இதற்கு முன்னால் சந்தித்த தில்லை.

நன்றாகப் பயிற்சி பெற்ற காவல் துறையினர் அதி நவீன ஆயுதங்கள் இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர் கொள்வதற் கான தேர்ச்சி இவையெல்லாம் சில பலவீனங்கள்; இவை யெல்லாம் 26/11 இன் போது வெளிச்சத்திற்கு வந்தன.

இதனால்தான் மும்பைக் காவல்துறையின் ஒரு பகுதியினர் இந்தத் தாக்குதலை எதிர் கொள்வதிலிருந்து தவிர்த்துக் கொண்டனர்.

ஆனால் அந்த நேரத்தில் சில காவல் துறை அதிகாரிகள் இதைத் தங்கள் தன்னிகரற்ற வெளிப்பாடுகளைக் காட்டினார்கள். அந்தச் சூழ்நிலையை எதிர்கொள்வதில் அலாதியான நெஞ்சுரத்தை கொண்டிருந்தார்கள்.


ஹேம்மந் கர்கரே, அசோக் காம்தி, விஜய் சலாஸ்கார் ஆகியோர் முன்னணியில் நின்று வழி நடத்தினார்கள். அவர்களுக்கு நன்றாகத்தெரியும். நமது காவல் துறைக்கு இந்தச் சூழ்நிலைகளை எதர் கொள்வதற்குரிய எந்த பயிற்சியுமில்லை. போதிய ஆயுதங்களுமில்லை என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள்.

என்னுடைய கணவர், ஹேம் மந்த் கர்கரே இன்னும் உள்ளவர் கள் அனைவரும் கொல்லப்பட்டா லும், அவர்கள் கசாப் போன்றவர் களைக் கைது செய்வதில் வெற்றி கண்டார்கள். (“கசாப்” உளவுத் துறையிடமிருந்த கை இருப்பு களில் ஒருவர் என்பது பின்னால் தெரியவந்தது)

என்னுடைய கணவர், அசோக் காம்தி, கிழக்கு மும்பையின் கூடுதல் ஆணையர். தீவிரவாதி களின் குண்டுகளுக்குப் பலியா னார். அன்றிரவு இதுதான் காமா மருத்துமனை நிகழ்வு.

என் கணவர் இறந்து ஓராண்டுக்குப் பின் என் கணவர் எப்படி இறந்தார் என்பதை அறிந்திடும் வேட்கை என்னை அதிகமாக உந்தித்தள்ளியது.

காமா மருத்துவமனையில் என்ன நடந்தது என்பதை அறிந் திட விரும்வோர் அனைவருக்கும் எல்லாத் தகவல்களையும் அறியத் தந்திடுவது




ஒன்றே சிறந்ததாக இருந்திடும்.

ஆகவே எல்லா சூழ்நிலைகளையும் இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

உண்மைகள், உதாசினப் படுத்தப்படுவதையோ, புதைக் கப்படுவதையோ, அல்லது சிதைக்கப்படுவதையோ கூட விரும்பவில்லை.

இந்த நூல் அங்கே (காமா மருத்துவமனயைில்) உயிரைத் தந்த தியாகிகளுக்கு அர்பணிக்கப் படும். அரியத்தொண்டு.

கொலை செய்யப்பட்ட காவல்துறை ஆணையர் மனைவி அளவில், அவர் கொலைச் செய்யப்பட்ட சூழ்நிலைகளை ஆய்வு செய்யத் தொடங்கிய எனக்கு

தொடர்ச்சி 30ம் பக்கம்

# எத்தனை நாள்

# இந்து வன்கொடுமைக்கு எதிரான போராட்டம்?

## சீர்காழி விழாவில் டி.எம். உமர் பாரூக் உரை



அன்பான வாசகர்களே, அல்லாஹ்வின் நல்லடியார்களே, அஸ்ஸலாமு அலைக்கும்.

தற்போது இந்த அரங்கிலே, என்னால் எழுதப்பட்ட 'செந்தமிழ் நாட்டுச் சேரிகள்' என்ற நூலின் அறிமுக நிகழ்ச்சி நடந்து எழுதிய மற்றொரு நூலாகிய 'சாதி ஒழிந்தது' என்ற நூலும் உங்களுக்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு நூல்களிலும் என் ஐம்பது ஆண்டுகால பொது வாழ்வில் தலித் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள், அவமானங்கள், துன்பங்கள், அவர்களுக்கு இழைக்கப்படும் போராட்டங்கள் என் அனுபவத்தில் ஏற்பட்ட கண்கூடான சம்பவங்களை தொகுத்து எழுதி உள்ளேன். அத்தனை சம்பவங்களும் இன்றைக்கும் சாட்சியங்கள் உள்ளவை. இதில் கற்பனையோ கட்டுக் கதைகளோ ஒரு சிறிதளவும் இல்லை. மொத்த அனுபவங்களில் ஒரு சிலவற்றையே எழுதியுள்ளேன். காரணம் ஒன்றே போல் பல சம்பவங்கள் நடந்திருந்தால் அவற்றுள் ஒன்று இரண்டை சம்பவங்கள் பல நடந்துள்ளன. ஆனால் வேட்டமங்கலம் குடிதாங்கி மட்டுமே எழுதியுள்ளேன் அதே போல நிலமீட்சி போராட்டங்களில் கதிராமங்கலம் புத்தூர் இவற்றைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளேன். இதில் சொல்லப்பட்டுள்ள சம்பவங்கள் தலித்துகளாகப் பிறந்த அனைவரும் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தான். அவர்கள் எவ்வளவு பெரிய அதிகாரிகளாக இருந்திருந்தாலும் வசதி, வாய்ப்பை, கல்வியை பெற்றிருந்தவர்களாக இருந்தாலும் அல்லது சாதாரண ஒரு குடிமகனாக இருந்தாலும் இத்தகைய அவமானங்களை பல்வேறு விதமான முறையில் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்தஸ்து மிக்க நீதிபதிகளாக இருந்த தலித்துகள் கூட, வழக்கறிஞர்களால், காவல் துறையினரால் அவமதிக்கப்பட்ட சம்பவங்களை நான் நேரில் கண்டிருக்கிறேன்; கேட்டிருக்கிறேன். ஆனால் இது போன்ற அவமானங்களை பல்லாயிரம் ஆண்டு காலமாக உங்கள் பாட்டனார், முப்பாட்டனார் காலம் முதல் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆகையால் இவை எல்லாம் பெரிதாகத் தெரியவில்லை அல்லது நீங்கள் வெளிக்காட்டிக் கொள்ள முடியாத நிலையில் கிடந்து உழலுகிறீர்கள். நீங்கள் படித்து பட்டம் பெற்று வசதி வாய்ப்பு பெற்ற நிலையிலும் கூட வெளியூர்களுக்கு உத்தியோகம் பார்க்க செல்லும் இடத்தில் உங்கள் சாதியைக் தெரிந்து கொண்டு உங்களுக்கு வீடு கொடுக்க மறுக்கும் - நிலை இன்றளவும் நடந்து கொண்டிருக்கிறது. பெரிய நகர்ப்புறங்களில் கூட இது போன்ற சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. சில இடங்களில் சாதியை மறைத்துச் சொல்லி பிறகு வீட்டுக்காரருக்கு ஜாதி தெரிந்து விடாமலிருக்க பெருமுயற்சி எடுத்துக் கொண்டு பயந்து கொண்டு இருப்பதையும் இருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

தலித்துகள் அனுபவிக்கும் கொடுமைகளை, அவர்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகளை, பாதிப்புகளை கதையாக, கட்டுரையாக எழுதுகின்ற எழுத்தாளர்கள், சீர்திருத்தக்காரர்கள், புரட்சிக்காரர்கள் உங்களுக்கு வெளியில் இருந்து வந்து உங்களைக் கேட்டும் மற்றவர்களை விசாரித்தும் எழுதுகிறார்கள். அதனால் அக்

கொடுமைகளின் உண்மைத் தன்மையை முழுமையாக வெளிப் படுத்த முடிவதில்லை. நான் அந்த மக்களோடு களத்தில் நின்று கொலை, குத்து, வெட்டுகளில் பங்கு பெற்று காயப்பட்டு அவமானப்பட்ட வகையில் சம்பவத்தின் உண்மைத் தன்மையை விளக்கி எழுதியுள்ளேன். ஆகையால் இதைப் படிப்பதற்கு உங்களுக்குப் புதிதாகவும் ஆர்வமாகவும் இருக்கிறது. அதனால் இது ஏராளமான பிரதிகள் விற்பனையாகி உள்ளன. வெண்மணியிலே நாற்பது நான்கு தலித்துகள் எரிக்கப்பட்ட சம்பவத்தை பல எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். சென்றார்கள், கொன்றார்கள், கொளுத்தினார்கள் என்று தான் எழுத முடிந்தது. தலித்தாகப் பிறந்த ஒவ்வொருவரும் உங்கள் சுய சரிதையை எழுதத் துவங்கினால் இது போன்ற நூல்களாக உருவாகி விடும்.

இங்கே விழாவிற்குத் தலைமையேற்ற முன்னாள் நீதிபதி அவர்களும், பாராளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்களும், முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவரும் மற்றும் அரசு அதிகாரிகளும் உங்கள் வாழ்க்கை அனுபவத்தை எழுதினால் இதைவிடப் பெரிய நூலாக அமைந்து விடும். இவ்வளவு அவமானங்களையும், வேதனைகளையும், துன்பங்களையும், அனுபவித்துக் கொண்டு நீங்கள் ஒரு இந்துவாகவே வாழ்ந்து கொண்டிருப்பது சரிதானா என்று சற்று எண்ணிப்பாருங்கள்.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னால் தீண்டாமை என்பது சட்டப்படியான ஒன்றாக இருந்தது. 1932-ல் சென்னை நகரில் முருகன் கோயிலுக்குள் முருகன் என்ற ஒரு தலித் இளைஞர் நுழைந்து விட்டார் என்பதற்காக அவரைப் போலீஸ் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியது. நீதிமன்றம் அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை அளித்தது. அண்ணல் அம்பேத் கர் இதை குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இன்று தீண்டாமை சட்டப்படி குற்றம் என்று சட்டம் வந்துவிட்டது. அறுபது ஆண்டுகளுக்கு மேலும் ஆகிவிட்டது. இருந்தபோதிலும் பெரிய மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்து விடவில்லை. இன்று வரை கோயில் நுழைவு போராட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது. தீண்டாமையைக் கடைபிடித்துவருவதை நீங்கள் உணரவில்லை. எந்த ஒரு அரசு அலுவலகத்தையும் நீங்கள் வசிக்கும் சேரிப்பகுதியில் கட்டுவதில்லை. நீங்கள் 90 சதவிகிதம் வசிக்கின்ற பகுதிகளில் கட்ட அரசு அங்காடிகள் சேரிக் குள் கட்டுவதில்லை. நீங்கள் ஊராட்சி மன்ற தலைவராக வரும் அளவுக்கு பெரும்பான்மையாக இருந்தாலும் கூட ஊராட்சி அலுவலகங்களை சேரிக்குள் கட்டுவதில்லை. காரணம் சேரிப் பகுதி என்பது தீண்டாமைப் பகுதி என்பது அனைவராலும் ஒத்துக் கொண்ட ஒரு விஷயமாக இருக்கிறது.

நீண்ட நெடுங்காலமாக சேரிப்பகுதிகள் எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியேதான் இருக்கிறது. எவ்வித சுகாதார வசதிகளும் இல்லாமல், போதுமான குடிநீர் வசதியும், மின் இணைப்பு வசதியும் இல்லாமல், இருந்து வருகிறது. மழைக்காலங்களில் சேரும் சகதியுமாக இருக்கிறது. கழிப்பறை வசதி கிடையாது. நடைபாதை மற்றும் சுற்றுப்புறங்களையே திறந்த வெளிக் கழிவறை களாகப் பயன்படுத்துகிறார்கள். உயர் சாதிக்காரர்கள் மனமாற சேரிக்குள் வந்து பிரவேசிப்ப தில்லை ஓட்டுக் காகவும், கூலிக்கு ஆள் பிடிப்பதற்காகவும் மட்டுமே வருகிறார்கள். ஓர் உதாரணத்திற் காகச் சொல்லுகிறேன். இங்கே சரிபாதியாக இஸ்லாமிய சகோதரர்கள் அமர்ந்திருக்கிறார்கள். மறு பாதியாக தலித் சகோதரர்களாகிய நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். இந்திய தேசத்தில் 12 இலட்சம் கிராமங்கள் இருக்கின்றன என்கிறார் அம்பேத்கர். இந்த 12 இலட்சம் கிராமங்களில் ஒரு சேரியைப் போல ஒரே ஒரு இஸ்லாமிய தெருவைக்கூட காட்டமுடியாது. அதே போல ஒரே ஒரு சேரிகள் கூட ஒரு இஸ்லாமிய தெருவைப் போல இருக்காது. அந்த அளவுக்கு சேரி மக்களுக்கு பொருளாதாரத் தடை விதித் துள்ளது இந்த தேசம்.

ஒரு லிட்டர் தண்ணீர் 12 ரூபாய் கொடுத்து சாதாரண மக்கள் கூட வாங்கிக் குடிக்கின்ற அளவுக்கு பொருளாதாரமும் சுகாதார எண்ணமும் வளர்ந்துள்ளது. ஆனால் சேரி மேக்களின் நிலை என்ன? வயல் பாசனத்திற்காக வாய்க்காலில் ஓடுகின்ற கலங்கிய தண்ணீரை இரு கைகளாலும் தூசியை விலக்கி விட்டு அள்ளிப் பருகி தாகத்தைத் தீர்த்துக் கொண்டு சேற்றில் வேலை செய்கின்ற பரிதாப நிலையைப் பார்க்கின்றோம். ஒரு லிட்டர் 12 ரூபாய் கொடுத்து குடிநீர் வாங்க சேரி மக்களால் முடியுமா? அப்படி முடியாததற்கு என்ன காரணம்? அவர்களை வேறு எந்தத் தொழிலும் செய்ய விடாமல் இந்த தேசம் அவர்களுக்கு துரோகம் செய்து விட்டது அல்லவா?

அவர்கள் தீட்டானவர்கள் என்று இந்த மக்களை நம்ப வைத்து விட்டது அல்லவா?


ஒரு கிராமத்தில் 300 இந்துக்கள் வசிக்கிறார்கள் என்றால் அங்கு 30 தலித்துகள் குடிஅமர்த்தப்படடிருக்கிறார்கள். அந்த 300 இந்துக்களுக்கும் இந்த 30 தலித்துக்கள் அடிமை வேலை செய்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எப்படி சுதந்திரமானவர்களாக வாழ முடியும்? மதுரை மாவட்டம் மேலூர் (முன்னாள் அமைச்சர் கக்கன் பிறந்த ஊர்) அருகே மேலவளவு என்ற கிராமம் இருக்கிறது. பெரும்பான்மை இந்துகளுக்கு மத்தியிலே அங்கு தலித்துக்கள் வசிக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர் பதவியை தலித்துக்களுக்காக அரசு ஒதுக்கியது நாம் பத்திரிக்கைகளில் பார்த்த பாப்பாபட்டி, கீரிப்பட்டியைப் போல் இங்கேயும் தலித்துகள் போட்டியிடக் கூடாது என்று சொன்னார்கள். அதையும் மீறி முருகேசன் என்ற தலித் இளைஞர் போட்டியிட்டார். வெற்றியும் பெற்றார் மற்றும் சிலர் உறுப்பினர்களாக வந்தார்கள். இந்துக்கள் என்ன செய்தார்கள்? அந்தத் தலைவர், அவரைச் சார்ந்த உறுப்பினர்கள் ஆக 6 பேரையும் ஒரே சயமத்தில் துண்டுத் துண்டாக வெட்டிக் கொன்றார்கள். என்ன செய்ய முடிந்தது? அவர்களுக்கு, நினைவுச் சின்னம் எழுப்பி விட்டு மீத முள்ளவர்கள் ஓட்டை வாங்குவதற்கு திட்ட போடுகிறார்கள் ஆண்டு தோறும் வீர வணக்கம் செலுத்துகிறார்கள். வெண்மணியிலும் இப்படித் தானே செய்கிறார்கள். வீர வணக்கம் செய்து விட்டால் மீதும் உள்ளவர்கள் வீரத்தோடு வாழ்ந்து விடுவார்களோ? அந்த நினைவுச் சின்னங்களைப் பார்த்தால் மற்றவர்களுக்கும் உயிர் பயம் தான் வரும் எப்படியோ இதை எல்லாம் சொல்லி ஓட்டு வாங்கி பிழைப்பு நடத்துகிறார்கள். செத்தவர்கள் போக மீதி பேர்களை யாவது வெளியேற்றி அம்பேத்கர் சொன்னது போல ஒரு பாதுகாப்பான இடத்தில் குடிஅமர்த்தினால் பயமில்லாமல் ஆவது இருப்பார்கள். எல்லா ஊர்களிலும் முடிய வில்லை என்றாலும் மேலளவு, பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற ஊர்களையாவது செய்திருக்கலாமே? முடியாது ஏனென்றால் அவர்கள் முழுமையாக உங்களை நம்பி ஓட்டுமொத்தமாக வெளியேறத் தயாராக இல்லை.

கையால் மலம் அள்ளுகிறோம், சாணி அள்ளுகிறோம். காலமெல்லாம் சேற்றிலும் சகதியிலும் உழல்கிறோம். இந்த நிலைக்கு இந்துச் சமூகம் நம்மை ஆக்க வைத்திருக்கிறதே என்ற மனநிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா? இது இழிவு, இது கேவலம் என்ற அம்மக்களுக்கு போதித்திருககிறார்களா? இந்த தேசம் இந்த நிலைக்கு ஆளாக்கி வைத்திருக்கிறதே என்று உணர வைத்திருக்கிறதா? இது நம் தலைவிதி. ஆண்டவன் இப்படியெல்லாம் நம்மைப் படைத்து விட்டான். போன ஜென்மத்தில் செய்த பாவம். இந்த ஜென்மத் தில் இப்படி பிறந்துவிட்டோம் என்றல்லவா நம்புகிறார்கள். அவன் அடிமை என்பதை உணர்த்துங்கள். அவன் கால் விலங்கினை அவனே அறுத்தெறிவான் என்று அம்பேத்கர் சொன்னாரே? அதைச் செய்தார்களா? ஓட்டுப் போடுங்கள், ஓட்டுப் போடுங்கள் என்று மாற்றி மாற்றி ஓட்டுக் போடச் செய்து அவர்களை ஓட்டு வங்கி ஆக்கிக் கொண்டார்கள். சுதந்திர இந்தியாவில் உங்களுக்கு கட்டுப்பாடு வாழ்கிறோம் என்று கையெழுத்துப் போட்டுக் கொடுத்த பிறகுதான் சுதந்திரம் வந்தது. அதுதான் பூனா ஒப்பந்தம் தலித்துக்கள் அனைவரையும் அடிமையாக்கிவிட்டது. இது போல் நடக்கும் என்று தான் அண்ணல் அம்பேத்கர் இந்த பூனா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டும் என்று 1944 முதல் சொல்லி வந்தார். ஆனால் அந்த ஒப்பந்தத்தை நம்மிடமே இன்று தலித்துக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எத்தனை எம்.பி.க்கள், எத்தனை எம்.எல்.ஏக்கள், எத்தனை மந்திரிகள், எத்தனை ஐ.ஏ.எஸ்.க்கள், எத்தனை ஐ.பி.எஸ். இன்று பார்ப்பனர்களுக்கு நிகராக அரசு பணிகளில் இருக்கிறீர்கள். ஆனாலும் உங்களது அடிமை நிலை போய் விடவில்லை. நீங்கள் இந்துவாக இருக்கும் வரை உங்களது அடிமை நிலை போகாது என்றால் அண்ணல் அம்பேத்கர். கேட்டார்களா? இனி இழிவு நீங்க இஸ்லாம் ஒன்றே தீர்வு என்றாரே பெரியார். அதைத்தான் கேட்டார்களா? இந்த மாமேதைகளின் அறிவுரைகளின் படி ஏராளமான தோழர்கள் இஸ்லாத்தில் இணைந்து விட்டோம். இஸ்லாமிய சமூகம் எங்களை ஆரத்தழுவி அரவணைத்துக் கொண்டது. ஏக இறைவன் முன்னால் எல்லாம் ஓரணியில் நிற்கின்றோம். நீங்களும் வாருங்கள், வாருங்கள் என்று அன்புடன் அழைக்கின்றோம். மதம் இல்லாமல் ஒரு மனித வர்க்கம் இல்லை. இன்று வரை அது போல் ஒரு வர்க்கம் உருவாகவும் இல்லை. மதமே மனிதனை செயலாக்கத்திற்கு உட்படுத்துகிறது என்றால் அண்ணல் அம்பேத்கர். ஆகவே, வாருங்கள் தோழரே வாருங்கள் என்று அல்லாஹ்வின் பெயரால் அன்புடன் அழைக்கிறேன்.

# கர்கரேயை கொலை செய்தது யார்?

## நூலாசிரியருக்கு பாராட்டு!

### நூலாசிரியர் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் கலந்து கொண்டார்கள்!




2008ஆம் ஆண்டு செப்டம்பர் 26-இல் இந்தியாவையும் உலகையும் உலுக்கியது, மும்பையில் நடந்த கோர தாக்குதல்.

பல அப்பாவிகளின் உயிரைப்போல், மும்பையைச் சார்ந்த மிக முக்கியமான காவல் துறையின் உயர்அதிகாரிகளின் சாதனை வீரர்களின் உயிர்களும் பறிக்கப்பட்டன.

உயிழிந்த அல்லது கொலை செய்யப்பட்ட காவல்துறை அதிகாரிகளுடன் பணியாற்றியவர் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள்.

முஷ்ரிஃப் அவர்கள்தாம், 3000 கோடி ரூபாய் முத்திரைத் தாள் மோசடியைக் கண்டுபிடித்து நாட்டுக்கு அறிவித்தவர். பல காவல் துறை அதிகாரிகளைத் தண்டித்தவர். தன்னுடைய நேர்மையான செயல்களின் மூலம் பல கோடி ரூபாய்களை நாட்டுக்கு இலாபப்படுத்தித் தந்தவர்.

முஷ்ரிஃப் அவர்களைப் போலவே நேர்மையான அதிகாரி ஹேம்மந்த் கர்கரே!

தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட பணியை நேர்மையுடன் செய்து சாதிப்பவர். மராட்டிய மாநில தீவிரவாத (தாக்குதல்) தடுப்புப் படையின் தலைவராக பணியாற்றியவர்.

ஹேம்மந்த் கர்கரே மாலிகோனில் நடந்த குண்டு வெடிப்பை ஆய்வு செய்து பல அதிசய தகவல்கள் சிக்கின. இராணுவத்திற்குள்ளும் ஹிந்துத்துவ தீவிரவாதிகள் ஊடுருவி இருப்பதைக் கண்டெடுத்தார்.

#### இராணுவத்தில் ஊடுருவிய தீவிரவாதிகள் எத்தனை பேர்?

இராணுவத்தில் இப்படி எத்தனைத் தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கின்றார்கள் என்பதைப் பற்றிய முறையான ஆய்வு ஒன்றை நடத்தி இராணுவத்தைச் சுத்தப் படுத்திட எந்த முயற்சியையும் நமது மன்மோகன் சிங் அரசு எடுக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இராணுவத்தில் இந்துத் தீவிரவாதிகள் ஊடுருவி இருக்கின்றார்கள் என்பதை அடுத்து இன்னும் பல “பகீர்?” உண்மைகளைக் கண்டுபிடித்தார் நமது மராட்டிய காவல் துறை மாவீரன் ஹேம்மந்த் கர்கரே!

இதில் பல இந்துத்துவவாதிகள் தேசப்பக்தர்கள் என்பதைப் போல் காட்டிக்கொள்ள விரும்புபவர்கள் ஆனால் உண்மையில் தேசத் துரோகிகள் இவர்கள் சிக்கிடும் நிலை வந்தது. இவர்கள் பெரும்பாலோர் அரசின் உயர் பதவிகளில் இருப்பவர்கள்.

தன்னுடைய புலனாய்வில் யார் சிக்கினாலும் விருப்பு வெறுப்பின்றி அவர்களைக் கைது செய்வது, சட்டத்தின் முன் நிறுத்துவது என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார் மாவீரன் ஹேம்மந்த் கர்கரே!

அதனாலேயே அவர் கொலை செய்யப்பட்டார்.

ஏனெனில் ஹேம்மந்த் கர்கரே யார், யாரையெல்லாம் கைது செய்திட இருந்தாரோ அவர்களெல்லாம் உளவுத்துறைக்கு வேண்டியவர்கள்.

அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தால் உளவுத்துறையின் ஒரு கோரமுகம் அல்லது உண்மை முகம் வெளிவந்திருக்கும். நாட்டு மக்கள் இந்த நாட்டில் நிருவாகம் என்ற பெயரில் இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்தின் மீதும் நம்பிக்கை இழந்திருப்பார்கள்.

### உள்துறை அமைச்சரின்..?

ஹேம்மந்த் கர்கரே தனது புலனாய்வில் பெரும்புள்ளிகளின் பெயர்கள் சிக்கியவுடன் உள்துறை அமைச்சரிடம் தகவலைச் சொன்னார். உள்துறை அமைச்சர் "ஐய்யகோ! நாட்டின் குடிமக்கள் அனைவரின் உயிருக்கும் ஆபத்து! ஆகவே அவர்களை உடனேயே கைது செய்யுங்கள்" எனக் கூறிடுவார் என்றே எதிர்பார்த் தோம். ஆனால் உள்துறை அமைச்சரோ இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாவேண்டாம் எனக் கூறி ஹேம்மந்த் கர்கரே யிக்கு வாய்ப்பூட்டுப் போட்டி ருக்கின்றார்.

ஆனாலும் கர்கரே யாருக் கும் அஞ்சாமல் தன் பணியைச் செய்யவும், நாட்டின் பாதுகாப் பிற்கு ஆபத்தாக அமைந்திடும் அனைவரை யும் நீதியின் முன் நிறுத்திட தயாரானார்.

கர்கரே செய்வது மிகப் பெரிய பணியென்றாலும், அவரின் பணிகள் முடியும் போது நாட்டில் பல திருப்பங்கள் நிகழ்ந் திடும். உளவுத்துறை ஒரு வேளை தலைகீழ்மாற்றத்திற்கு உள்ளாக லாம்.

தேசப்பக்தர்கள் பலர் தேசத்துரோகிகளாக சிறை சென்றிருப்பார்கள்.

இவற்றையெல்லாம் எண் ணிப் பார்த்தவர்கள் தங்களுக்கு வேண்டிய இந்துத்துவ தீவிரவாதி களைக் கொண்டு கர்கரேயைக் கொலை செய்துவிட்டார்கள்.

### முஷ்ரிஃப் இன் உயிருக்கு ஆபத்தா?

இதைப் பற்றிக் கேட்ட போது முஷ்ரிஃப் அவர்கள் ஓர் ஆழ்ந்த மௌனத்தையே பதிலாகத் தந்தார்கள்.

சிவ சேனாவைச் சேர்ந்தவர் களும், சங்கப்பரிவாரத்தினரும் ஒரு பெரும் முயற்சியை எடுத் திருக்கின்றார்கள். முஷ்ரிஃப் அவர்களை தொட்டாலோ அல்லது புத்தகத்தை வழி மறித் தாலோ, புத்தகம் பிரபல்யமாகி விடும். இதனால் உண்மைக் காட்டுத் தீ போல் பரவிவிடும் என அஞ்சியே தங்கள் முயற் சியைக் கைவிட்டிருக்கின்றார்கள்.

பின்னர் கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலை தடை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டி ருக்கின்றார்கள். குறைந்த பட்சம் முஷ்ரிஃப் அவர்களின் வீட்டின் முன் ஒரு நாள் முற்றுகைப்போர் என திட்டமிட்டிருக்கின்றார்கள். மனோகர் ஜோஷி என்ற சிவசேனை தலைவர் நீங்கள் அதைச் செய்தாலும், புத்தகம் பிரபல்யமாகிவிடும். விற்பனை அதிகமாகும் என்பதைவிட உண்மைக்காட்டுத் தீ போல் பரவும் நாட்டில் நடக்கும் தீவிரவாத செயல்களின் உண்மை முகம் வெளிப்பட்டுவிடும் எனக் கூறி தடுத்துவிட்டார்.

இந்த நூலை முழுமையாக இருட்டடிப்புச் செய்ய முயன்றதால் தாம் அதனை தமிழ் நாட்டிலும் இன்னுஞ்சில மாநிலங்களிலும் விநியோகத்தைக் கையிலெடுத்தி ருக்கின்றோம்.

## சென்னை நிகழ்ச்சி

இந்த உண்மைகளை யெல்லாம் வெளியே கொண்டு வந்த மராட்டிய மாநில காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர் களுக்கு சென்னையில் பாராட்டும், நூலின் மூன்றாவது புதுப்பிக்கப் பட்ட பதிப்பின் வெளியீடும், தந்தை பெரியார் திடலில் நடைபெற்றது.

நிகழ்ச்சி திராவிடர் கழகம், மற்றும் பகுத்தறிவாளர் கழகம், வேர்கள் பதிப்பகம் ஆகியவை இணைந்து நடத்தின.

திராவிடர் கழத்தின் தலைவர் டாக்டர் கீ. வீரமணி அவர்கள் நூலை அறிமுகப்படுத்தி உரை யாற்றினார்கள். இலக்கியச் சுடர் மு. குலாம் முஹம்மத், வேர்கள் பதிப்பகத்தி காப்பாளர், முஷ்ரிஃப் அவர்களின் வீரத்தையும், தியாகத்தையும் பாராட்டிப் பேசி னார்கள்.

பெங்களூரிலிருந்து சென் னை வந்த தலீத் வாய்ஸ் என்ற ஆங்கில பத்திரிக்கையின் ஆசிரியர் வி.டி. இராஜசேகரும் முஷ்ரிஃப் அவர்களைப் பாராட் டிப் பேசினார்கள்.

திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் குமரேசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் வன்முறை கும்பல் சங்கப்பரிவாரம் என்று நூலும் வெளியிடப்பட்டது.

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற **300** ரூபாய் விலையுள்ள நூல் ரூபாய் **250** ரூபாய்க்கு விற்பனை செய்யப் பட்டது.

**சென்னை விஜயத்தின் போது வைகறை வெளிச்சம் ஆசிரியருடன் உரையாடிய போது கூறிய தகவல்கள்.**

உளவுத்துறையால் விதவை யாக்கப்பட்ட கவிதா கர்கரே உங்கள் நூலைப் படித்தார்களா? என வினவிய போது:

நான் அவர்களுக்கு ஒரு பிரதியை அனுப்பினேன். ஆனால் அவர்களிடமிருந்து எந்த பதிலுமில்லை. அவர்களை இயங்கிடவிடாமல் தடுத்து விட்டார்கள் என்றார்கள்.

அவர்களுக்கு இருக்கும் இரண்டு குழந்தைகளுக்கும் பாது காப்பு வேண்டும். அவர்களின் எதிர்காலத்தை நன்றாக அமைத்துத் தந்திட வேண்டும் என்ற நிர்பந்தங்கள் இருக் கின்றன. இவற்றைக் காட்டி மிரட்டி அவர்களை அமைதிப் படுத்திவிட்டார்கள் என்பதை நாம் நம்பத்தகுந்த வட்டாரங் களிலிருந்து அறிந்தோம் என்றார்.

நாமும் ஊடகங்களின் வழி இவற்றைக் கவனித்து வந்திருக் கின்றோம். தொடக்கத்தில் காட்டிய வேகத்தை சகோதரி கவிதா கர்கரேயால் இப்போது காட்டிட இயலவில்லை.

காரணம் பாரதீய ஜனதா கட்சியின் ஓய்ந்துபோன தலைவர் கள் ராஜநாத்சிங், அத்வானி ஆகியோர் ஹேம்மந்த் கர்க ரேயைப் பற்றி கூறிய தரக்குறை வான சொற்களே!

தொடக்கத்தில் உங்கள் கணவரின் மரணத்திற்கு யார் காரணம்? எனப் பத்திரிகையாளர் கள் கேட்டதற்கு, நாம் தான் நாடாளுமன்ற தாக்குதலுக்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடிக்க இயலவில்லையே? எனக் கூறினார்கள்.

அதன்பின் 'டைம்ஸ் நவ்' என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் எனக்கு நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை என்று கூறினார்கள்.

அதன் பின் தொடர்ந்து நியாயங்களுக்காகப் போராடி னால் தன்னையும் தனது குடும்பத்தினரையும் ஒன்றாய், தன் கணவனைப் போல் அழித்துவிடு வார்கள் என அஞ்சி இருப்பார் என்பதே உண்மை.

அவர் அச்சத்தில் நியாய மிருக்கின்றது என்பதை நம்மால் உணர முடிகின்றது. (அல்லாஹ் வே அனைத்தையும் அறிந்தவன்)

ஆனால் வினிதா காம்தி என்ற அசோக் காம்ந்தியின் மனைவி (இவரும் கர்கரேயுடன் கொலை செய்யப்பட்டவர்) எழுதிய நூலுக்கு கவிதா கர்கரே ஓர் முன்னுரையைத் தந்திருக் கின்றார். அந்த முன்னுரையில் தனது விரக்தியைக் கொட்டியிருக் கின்றார். அதனை இன்ஷா அல்லாஹ் நாம் தமிழில் தருவோம்.

## வினிதா காம்தி

(இவரை நாம் வைகறை வெளிச்சம் மகளிர் மன்றத்தில் இடம் பெறச் செய்திருந்தோம்)

இவர் கர்கரேயுடன் கொலை செய்யப்பட்ட அசோக் காம்தியின் மனைவி. இவர் தன்னுடைய கணவன் எப்படி இறந்தார் என்பதைக் கண்டுபிடிக்க பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு உள்ளார். அனைத்திலும் விரக்தி.

தனது விரக்திகள் அனைத் தையும் ஒன்றாய்க் கோர்த்து ஒரு நூலாய் வெளியிட்டிருக்கின்றார். அந்த நூலை மக்கள் கைகளுக்கு எட்டாமல் தடுத்துவிட்டார்கள் அதிகார வட்டத்தில் இருப்பவர்கள்.

பின்னர் யாரோ நமது உளவுத்துறையினரிடம் அந்த நூலும் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களுடைய கர்கரேயைக் கொலை செய்தது யார் என்ற நூலுக்கு வலு சேர்ப்பதாக இருப் பதால் அதனை தடுத்துவிட வேண் டும் எனத் தடுத்துவிட்டார்கள்.

மொத்தத்தில் இரண்டு நூல்களும் அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைகளுக்கு ஆளாகிவிட்டன.

இந்த உண்மையையும் நாம் சென்னையில் வைத்து முஷ்ரிஃப் அவர்களைச் சந்தித்தபோது உறுதி படுத்தினார்கள்.

எம்.ஜி.எம்.

**24** ம் பக்கம் தொடர்ச்சி

எல்லா திசைகளிலும் அதிர்ச்சியே காத்திருந்தது.

என்னுடைய விசாரணை, என்னுடைய ஆய்வை எல்லா திசைகளிலும் தடை செய்யவும் இடறி விடவுமே வழிவகைகளைக் கண்டார்கள்.

காவல்துறையில் அரிய பணிகளைச் செய்து சாதனைகள் பல படைத்த என் கணவரின் பிரேத பரிசோதனை அறிக்கையையே (Post Mortem Report) தந்திட மறுத்தார்கள். இந்நிலையில் என் கணவர் கொலை செய்யப்பட்ட இதர சூழல்பற்றிய தகவல்களை அவர்கள் எப்படி, எப்படியெல் லாம் இடைமறித்திருப்பார்கள் என்பதை அனைவரும் எளிதில் புரிந்திடலாம்.

எனினும் நான் சட்டத்தின் உதவி, தகவல் அறிந்து கொள்ளும் உரிமை இவற்றையெல்லாம் பயன்படுத்தி தொகுத்த உண்மை களை இங்கே இடம்பெறச் செய்கின்றேன். அனைத்தும் அரசு ஆவணங்களிலிருந்து தொகுக்கப் பெற்றவை.

என் கணவர், ஹேம்மந் கர்கரே உள்ளிட்ட அதிகாரி களுக்கும் இவர்களுக்கும் உரிய நேரத்தில் உதவிகள் கிடைத்திருக்கும் என்றால், அவர்கள் காப்பாற்றப்பட்டி ருப்பார்கள், அவர்களின் சொந்தக் காவல்துறையே நாற்பது நிமிடங்கள் கழித்துத்தான் அங்கே வந்தது - என்பன போன்ற கசப்பான உண்மைகள் பல எனக்குக் கிடைத்தன.

என் கணவர் காலமெல்லாம் பணியாற்றிய காவல்துறை எனக்கு இந்த தகவல்களைத் தந்திடவில்லை, மாறாக நான் தகவல் அறியும் உண்மையைப் பயன்படுத்திதான், இந்தத் தகவல்களையெல்லாம் தெரிந்திட வேண்டியது வந்தது!

என் கணவர் அசோக் - இன் குடும்பம் சீருடையணிந்து இந்த நாட்டுக்கு கால காலமாகப் பணி செய்துகொண்டிருக்கும் ஒரு குடும்பம். அப்படி இருந்தும் அவர் கொலை செய்யப்பட்டது குறித்த தகவல்களை அறிந்திட நான் பட்ட கஷ்டங்கள் சொல்லி மாளாது!

இன்ஷா அல்லாஹ்

(தொடரும்)

# முஸ்லிம்களே உஷார்!

யார் ஆட்சிக்கு வந்தாலும், யார் எப்படி வாக்குகளை தந்தாலும், முஸ்லிம்களை வேரோடு களையெடுக்கும் பணி நம் இந்திய நாட்டில் செம்மையாக நடந்து கொண்டு வருகிறது. 1924ஆம் ஆண்டு வெறும் ஐந்து டாக்டர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புதான் ஆர்.எஸ்.எஸ். இன்று இது பல விஸ்வருபம் எடுத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. ஏன் 2 முறை இந்தியாவில் தடை செய்யப்பட்டு இன்று உலகஅளவில் வளர்ந்து வருகின்றது.

1939 குஜராத்தில் கம்யூனிசம் காம்பாக்ட் என்ற பத்திரிகை அங்கே 40க்கும் மேற்பட்ட கள ஆய்வுகளை நடத்தி குஜராத் வாழ் முஸ்லிம்களுக்கு ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பால் பெரும் ஆபத்து இருக்கின்றது என்று எச்சரிக்கை செய்தது. ஆனால் எந்த ஒரு முஸ்லிமும் விழிப்புணர்வு பெறாததால் 2002 இல் 20,000 மேற்பட்ட முஸ்லிம்களை நாம் இழந்து விட்டோம். (கொலை செய்யப்பட்டனர்)

அதே கம்யூனலிசம் காம்பாக்ட் இதழில் சென்னையை சார்ந்த மீனா கந்தசாமி என்ற பெண்மணி நம் தமிழ்நாட்டில் 45க்கு மேற்பட்ட கள ஆய்வுகளை செய்து இந்த தமிழ்நாட்டை ஒரு குஜராத்தாக மாற்ற திட்டமிட்டுள்ளனர் என்று கூறுகிறார். நம் தமிழ்நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை பார்க்கும் போது அது நூறு சதமானம் சரியானதாக தான் இருக்கின்றது. அதில் ஒரு சிலவற்றை நாம் பார்த்தோமானால் இந்த பெண் மணியின் கள ஆய்வு சரிதான் என்பது நமக்கு தெரியவரும்.

1. மதுரை சோழவந்தான் என்னும் இடத்தில் உள்ள ஒரு கல்லூரியில் வைத்து ஆர்.எஸ்.எஸ். ஆண்கள் மற்றும் பெண்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி கொடுக்கப்பட்டது (2006 ஏப்ரல்).

2. ஆர்.எஸ்.எஸ். ஆண்களுக்கு ஸாகாகள் மூலம் வாள்,கம்பு, போன்ற பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

3. 9 இன்ச் நீளத்தில் சூல் ஆயுதங்களும் வேல்களும் மேடைகளில் சில ஹிந்துத்வ தலைவர்களால் முஸ்லிம்களை கொல்வதற்காக என்று சொல்லியே வழங்கப்பட்டது.

4. பெரிய பெரிய ஹிந்துத்துவ தலைவர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்து விஷம பேச்சுகளை கொக்கரித்து செல்கின்றனர்.

5. கிருஷ்ண தரிஷனம் என்ற பெயரில் வட மாநில ஹிந்துத்வ முழு நேர ஊழியர்கள் தமிழ் நாட்டில் ஊடுருவி பாமர ஹிந்துக்களின் மனதில் முஸ்லிம்களைப் பற்றிய விஷமங்களை பரப்புதல்.

இதுபோன்று இன்னும் பல நிகழ்வுகள் நம் தமிழ்நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது போன்று இன்னும் விஷமமான காரியங்கள் அனைத்தும் தமிழ் நாட்டை 2011ல் இலக்கை வைத்து நடைபெறுகின்றன.

நாம் மிக முக்கியமாக தெரிய வேண்டியது என்னவென்றால் நாம் மேலே குறிப்பிட்ட இது போன்று அத்தனை நிகழ்வும் குஜராத் கலவரத்துக்கு முன்பு நடத்தப்பட்டது. ஆக அங்கு ஒரு குஜராத்துக்கு எப்படி திட்டங்களை வகுத்து கொடுத்து ஆயுதங்களை வழங்கினார்களோ அதே போன்று தமிழ்நாட்டிலும் ஒரு குஜராத்துக்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு ஆயுதங்களும் வழங்கப்பட்டது என்பது உண்மை. இதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். முன்பு நாம் எழுதிய விடியல் வெள்ளி மற்றும் தினகரன் பத்திரிகைகளிலும் இந்த விபரங்கள் வெளிவந்தன. (பார்க்கவும்).

குஜராத் கலவரத்திட்டத்தின் போது அவர்கள் இறுதியாக நடத்தியது தான் முஸ்லிம்களின் மீதான கணக்கெடுப்பு. குழு என்ற பெயரில் சில பெண்களை முஸ்லிம் வாழும் பகுதிகளில் அனுப்பி அவர்களை பற்றிய கணக்குகளை எடுத்து அதில் ஒரு வெள்ளோட்டம் பார்த்த பிறகு தான் அங்கு கலவரம் நடத்தப்பட்டது. மேலும் அரசு தரப்பினருக்கும் இக் கணக்கு விபரம் அனுப்பப்பட்டு முஸ்லீம்களை அழிப்பதற்கான (ஆம், இல்லை) என்ற அடிப்படையில் கேள்விகளும் கேட்டு அவர்களால் நிரப்பப்பட்டது. அதன் விளைவால் தான் குஜராத்தில் போலீஸ்

கமிஷனரும், டி.ஐ.ஜியும் கலக்டெரும், இன்ஸ்பெக்டரும் முஸ்லிம்களை நோக்கி சுட்டனர். முஸ்லீம் பெண்மனிகளை கற்பழிப்புக்கு உள்ளாக்கினர்.

இது போன்ற தமிழநாட்டு (குஜராத்) திட்டத்தில் தான் முஸ்லீம் வாழ்பகுதிகளில் பெண்களை அனுப்பி முஸ்லீம்களை பற்றின கணக்கெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதில் ஒரு பகுதியாக குமரி மாவட்டத்தில் , நாகர் கோவிலில், "முஸ்லிம் மக்களின் வாழ்நிலை குறித்து கள ஆய்வுப் படிவம்" என்ற படிவத்தை வைத்துக் கொண்டு நான்கு பெண்கள் கணக்கெடுப்புக்காக வந்துள்ளனர். அவர்கள் கொண்டு வந்துள்ள படிவத்தில் அரசு முத்திரையோ, விலாசமோ, அடையாள அட்டையோ எதுவுமில்லை. அவர்களிடமிருந்த படிவத்தில் இப்படி சில கேள்விகளும் இருந்தன.

முஸ்லிம்

1. ஆண் குழந்தை, பெண் குழந்தை பெயர்கள். (வயது)

2. கல்வித் தகுதி

3. சொந்த வீடு உள்ளதா?

4. வாடகை வீடாயின் முஸ்லிம் என்பதால் வீடு கிடைக்க சிரமம் உள்ளதா?

5. தாங்கள் வசிக்கும் பகுதி முஸ்லிம்கள் குவியலாக வாழும் பகுதியா இல்லை மாற்று மத மக்களும் உள்ளனரா?

6. அப்பகுதியில் வாழும் இதர மதத்தினருடன் தங்களுடைய உறவு எப்படி உள்ளது?

7. தங்களுக்கு விவசாய நிலம் உள்ளதா?

8. எவ்வளவு ஏக்கர் உள்ளது? எங்கு உள்ளது?

9. முஸ்லிம்களில் ஒரு சிலரின் நடவடிக்கைகள் முஸ்லிம் மக்களுக்கு பயன் தரும் என கருதுகிறீர்களா?

இன்னும் இப்படி விஷமத்தனமான கேள்விகள் பல கொண்ட ஆய்வுப் படிவத்தை கொண்டு வந்துள்ளனர். நம் முஸ்லிம் பெண்மணிகளும் ஏன், ஏது, யார் என்று கேட்காமல் இக் கேள்விகளுக்கு பதிலளித்துள்ளனர்.

அப்படி ஒரு தெருவில் நடந்து கொண்டிருந்தபோது, ஒரு சிலருக்கு சந்தேகம் எழுந்து அவர்களிடம் கேள்வி கேட்ட போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்துள்ளனர். பின்பு அவர்களை கையும் களவுமாக பிடிக்க முயன்ற போது தான் ஒரு மலர் என்ற குழுவில் இருந்து வருவதாக சொல்லி தன் கையில் இருக்கும் படிவங்களை கீழே விட்டு விட்டு ஓடி மறைந்து விட்டனர்.

மேலும் கீழே விட்டுச் சென்ற அந்த படிவங்களை நாம் கைப்பற்றி குமாரி மாவட்டத்திலுள்ள எல்லா பள்ளி வாசல்களுக்கும், ஜமாத்துகளுக்கும் எடுத்துச் சென்று, மாதிரி படிவங்களை கொடுத்து வெள்ளிக்கிழமை ஜும்மா தினத்தில் இதை பற்றிய ஆபத்துக்களை ஜும்மாவில் எடுத்துரைக்க வேண்டினோம். அவர்களும் மறுக்காமல் ஜும்மா உரையில் எடுத்துரைத்தனர் முஸ்லிம் மக்களை விழிப்புணர்வோடு இருக்க எச்சரிக்கையும் செய்தனர். (அல்ஹம்துலில்லாஹ்)

அத்தோடு விட்டுவிடவில்லை. இச்செய்தியினை முற்றுப் புள்ளி வைக்கும் விதத்தில் நாம் பத்திரிக்கை மற்றும் உள்ளூர் சேனல்களில் ஒளிபரப்ப முயன்றோம். அல்ஹம்த் துலில்லாஹ் அல்லாஹ் வெற்றியை தந்தான் (ஒளிபரப்பானது). அந்த நான்கு பெண்கள் தந்த முகவரியின் அடிப்படையில் Islamic Channel என்ற பத்திரிகை சேனல் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கி விரைந்து சென்றது.

நாகர்கோவில் பார்வதிபுரம் என்னும் இடத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு இடத்தில் இந்த குழு அமைந்துள்ளது. மனிதர்கள் யாரும் அடிக்கடி புழங்காத ஒரு காட்டுப் பகுதியை போன்ற காட்சி அளிக்கின்ற இடத்தில் அமைந்துள்ளது. இக்குழுவின் முழுப்பெயர் "மகளிர் சுய உதவி மலர் அஸோஸியேஷன்".

எங்கு பார்த்தாலும் மரம் செடிகளாக, காடாகவும் புதர்களாகவும் காட்சி அளிக்கின்றது. இதை நடத்தி வருபவரின் பெயர் சசிகுமார். இதில் **31,000** மகளிர் அங்கத்தினராக செயல்படுகின்றனர். இது குமரி மாவட்டம் முழுவதும் பரந்து விரிந்து செயல்பட்டுவருகின்றது. அங்கு உள்ளே நுழைந்ததும் 'துளிர்' போன்று சூழல் நம்மை வரவேற்கிறது. சுற்றுமுற்றும் பார்த்தால் அங்கு யாரும் புலன்படவில்லை. ஒரே ஒரு

பெண்ணை தவிர. அப்பெண் மணி நம்மை பார்த்ததும் வேர்த்து விருவிருத்து நின்றாள். நீங்கள் யார் என்று கேட்டதற்கு நான் இந்த குழுவில்தான் வேலை செய்கின்றேன் என்று பதிலளித் தாள். பின்பு ஏன் இங்கு யாரையும் காணவில்லை நீங்கள் மாத்திரம் நிற்கின்றீர்கள் என்று கேட்டதற்கு இங்கு யாரும் வருவது கிடையாது. எப்போ தாவது யாராவது வருவதுண்டு இன்று நான் வந்துள்ளேன் என்று பதிலளித்தாள்.

அவளிடம் இந்த படிவத்தை காட்டி விபரம் கேட்டதற்கு எங்களுக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது சசிகுமார்தான் எங்களை கணக்கு எடுக்கச் சொன்னானர்.

டில்லியைச் சேர்ந்த "பாரத் ஞான் விஞ்ஞான் சபா" என்ற அமைப்பு தான் எங்களை கணக்கு எடுக்க சொன்னது. அதன் பெயரில் தான் சசிகுமார் எங்கள் முஸ்லீம் பகுதிக்கு குழுகுழுவாக பிரித்து கணக்கை எடுக்கச் சொன்னார் என்று கூறினாள்.

ஆக இதை பார்க்கும் போது முஸ்லீம்களை வேறொடு அழிக்க திட்டமிட்ட சதி என்பது புலன்படுகிறது. மேலும் அந்த பெண் எங்களுக்கு வெளிநாட்டில் இருந்த பணம் வருவதில்லை என்று தானே உளறினாள். சசிகுமார்ஜ தொடர்பு கொண்ட போது முன்னுக்கு முரணாக பேசி செல்போனை சுவிச்ஆஃப்செய்து கொண்டார். (நன்றி இஸ்லாமிக் சேனல்)

இதன் அத்தனை நடவடிக்கைகளை நாம் பார்க்கும் போது இஸ்லாமிய நாடாக இருந்த ஸ்பெயின் நாட்டை கிறிஸ்துவர்கள் 100 ஆண்டுகாலம் திட்டமிட்டு கடைசி முஸ்லீம் வரை கொலை செய்து, அதை ஒரு கிருஸ்தவ நாடாக மாற்றியது போல், இந்தியாவில் பாஸிஸ்டு கள் 200 ஆண்டுகள் திட்டமிட்டு ஒரு இந்து நாடாக மாற்ற திட்டமிட்டுள்ளனர். அதில் சில மாநிலங்களில் வெற்றியும் கண்டு ள்ளனர். அதில் ஒரு பகுதி தான் தமிழ்நாட்டை 2011ல் குஜராத்தாக மாற்ற திட்டம்.

முஸ்லீம் சமுதாயமே விழித்தெழு விழிப்புணர்வாய் இரு யார் கணக்கெடுப்பிற்கு வருமாயின் அடையாள அட்டை வாங்கி பரிசோதித்து நம்பிக்கை வந்த பின் பதில் சொல் மேலும் உன் ஈமானை பலப்படுத்து.

அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்

முஃமின்கள் எதிரிகளின் கூட்டுப் படைகளை கண்டபோது, "இது தான். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எங்களுக்கு வாக்களித்தது; அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மையே உரைத்தார்கள்" என்று கூறினார் கள். இன்னும் அது அவர்க ளுடைய ஈமானையும் (இறை வனுக்கு முற்றிலும் வழிபடுவதை யும் அதிகப்படுத்தாமல் இல்லை (அல்குர்ஆன் 33:22)

அல்லாஹ்வுடைய இவ் வசனத்திற் கேற்ப நாம் எவ்வளவு பெரிய எதிரிகளை சந்தித்தாலும் அல்லாஹ் நமக்கு வாக்களித்த சுவர்க்கத்தின் அடிப் படையில் நாம் இதுபோன்ற எதிரிகளை எதிர்த்து ஓர் அணியில் நின்று போராட வேண்டும். நம் ஈமானையும் பலப்படுத்திக்கொள்ள வேண் டும் என்றும் கேட்டுக் கொள்கி றோம்.

மேலும் இது போன்ற ஹிந்துத்துவ பாஸிஸ அமைப்பு களை இனம் கண்டு நமது தமிழக அரசு அவைகளை தடை செய்து குண்டர் சட்டத்தில் அடைக்க வேண்டும். இப்படி தமிழக அரசை ஏமாற்றி ஒரு இனத்தை கணக் கெடுத்துக் கொண்டது தமிழக அரசையே கேவலப்படுத்தும் வித மாக அமைந்துள்ளது. தமிழக அரசே! இதுபோன்ற சங்கப் பரிவார் அமைப்புகளை இனம் காண வேண்டும். அவைகளை தடை செய்ய வேண்டும். திட்ட மிட்டிருக்கும் அந்த குஜராத் போன்ற பேரழிவை தடுத்து நிறுத்த வேண்டும்.

செய்யுமா கலைஞர் அரசு!

இன்ஷா அல்லாஹ்! எதிர்பார்ப்போம்.

குறிப்பு : Islamic Channel என்ற பத்திரிகை குழு மூலம் நாமும் சென்று குமரி மாவட்ட எஸ்.பியை சந்தித்து நடந்த நிகழ்வை குறிப்பிட்டு ஒரு புகார் மனுவை கொடுத்துள்ளோம். அவர் மாவட்ட டி.எஸ்.பியிடம் அனுப்பி நடவடிக்கை எடுக்க செய்வதாக கூறினார். இன்ஷா அல்லாஹ் எதிர்பார்ப்போம் காவல்துறை யின் நீதி செயலை!

# இஸ்லாத்திற்கெதிரான சதிகள்! விழித்துக் கொள்ளுமா முஸ்லிம் சமூகம்?

"நாள் தவறினாலும் நாங்கள் தவறமாட்டோம்" என இஸ்லாத்தை அழிக்க வேண்டும் என்று செயல்திட்டம் போட்டு அதை நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள் இஸ்லாத்தின் எதிரிகள். உலகில் தினமும் முஸ்லிம்கள் பாதிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொருமுறை முஸ்லிம்கள் தாக்கப்படும் போதும் முஸ்லிம்களே பழிக்கவும் படுகின்றார்கள். அதாவது முஸ்லிம்கள் மீதே போட்டு விடுகின்றார்கள். அது அமெரிக்கா செப்டம்பர் 11 வர்த்தக மையம் தாக்குதலாக இருக்கட்டும். அல்லது இந்தியாவின் பாராளுமன்ற தாக்குதலாக இருககட்டும். அல்லது அகமதாபாத் குண்டு வெடிப்பாக இருக்கட்டும் அல்லது பாட்லா ஹவுஸ் படுகொலையாக இருக்கட்டும். இன்று வரை இந்த பழியை சுமப்பவர்கள் முஸ்லிம்கள்தான். அப்படி இந்த பழியை மெல்ல மெல்ல இஸ்லாத்தின் பக்கம் திருப்பிவிடுகின்றார்கள். இதை இஸ்லாத்தின் எதிரிகள் மீடியாக்கள் வைத்து பிரச்சாரம் செய்கிறார்கள். இதை உண்மையறியாத முஸ்லிம்கள் தவறு நம்மிடம்தான் இருக்கின்றது என்று எண்ணிடத் தலைப்படுகின்றார்கள். முஸ்லிம்களிடம் ஆட்காட்டிகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள் இஸ்லாத்தின் எதிரிகள். இந்த கைக்கூலிகள் எதிரிகள் சொல்லும் பொய்களை முஸ்லிம்களிடம் பிரச்சாரம் செய்கிறார்கள். பாமரர்களில் பலர் இதனை அப்படியே நம்பி விடுகின்றனர். முஸ்லிம்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலும் யதார்த்தமாக நடந்ததில்லை. அவற்றிற்குப் பின் நீண்டதொரு திட்டம் இருக்கின்றது. இந்தியாவில் நடந்த பாபரி மஸ்ஜித் இடிப்பை தொடர்ந்து நடந்த கலவரமாகட்டும். நெல்லி படுகொலைகளாகட்டும், பாகல்பூர் படுகொலைகளாக இருக்கட்டும், குஜராத் இனப்படுகொலைகளாக இருக்கட்டும். இவையனைத்தும் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பட்டு வரும் சதிகளின் வெளிப்பாடாகும். இது இந்தியாவில் மட்டுமல்ல, அதே போல் சர்வதேச அளவில் நடந்து வருகின்றது. பாலஸ்தீன, போஸ்னியா, பல்கேரியா, ஆப்கானிஸ்தான், செச்சென்யா, கொஸவோ, இலங்கை, கஷ்மீர், ஈராக். . . தினமும் இதற்கு ஓர் நீண்ட வரலாறு உண்டு. அதற்கு பின் நீண்ட சதியும் உண்டு. ஆனால் முஸ்லிம்கள் ஏனோ இன்னும் இந்த சதியின் பின்னணிகளை புரிந்து கொள்ளாததால் அழிந்து கொண்டிருக்கின்றார்கள். தொடர்ந்து நடக்கும் தாக்குதல்களின் பின்னணி புரியாததால் அவற்றிற்கெதிரான எதிர் நடவடிக்கைகளை எடுக்க இயலாதவர்களாகி விடுகின்றனர் முஸ்லிம்கள்.

உண்மையைச் சொன்னால் இந்த தாக்குதல்களை புரியாததால் தாக்குதல்களில் தப்பிக்க முடியவில்லை. இதில் வேடிக்கை வேதனை என்னவெனில் இஸ்லாத்தின் எதிரிகள் பல நேரங்களில் சதிகளை பற்றி விவாதிக்கின்றார்கள். புத்தகங்கள் கூட எழுதியிருக்கின்றார்கள். இத்தனையும் இருந்தும் முஸ்லிம்கள் கண்டு கொள்ள தவறி விடுகின்றார்கள். முஸ்லிம்களாகிய நாம் சதிகளை அறிந்து இஸ்லாம் என்னும் லட்சியத்தை பூமியில் நிலைநாட்ட முயற்சி செய்வோம். 1400 வருடங்களாக உலகை ஆண்டவர்கள் நாம் (முஸ்லிம்கள்) இழந்த தலைமையை மீட்போம். 'தேசியம்' என்னும் குறுகிய சிந்தனையல்லாமல் உலக அரங்கில் நாம் செயல்படுவோம். அதற்கு அண்ணலாரின் கையாண்ட இறை நம்பிக்கை, ஒழுக்கம், வீரம், விவேகம், இன்று தேவைப்படுகிறது. இறைவனின் வழியில் இஸ்லாத்தை நிலைநாட்ட முயற்சிப்போம். இன்ஷா அல்லாஹ். . . முழுமை யான முயற்சி மேற்கொண்டு முன் மாதிரி முஸ்லிம் சமூகத்தை உருவாக்குவோம். இன்ஷா அல்லாஹ். . . வைகறை உன் பணி தொடர பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு,

**அஹமது பஷீர்**
**அபூ முஜாஹித்**
முகவை மாவட்டம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருனை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ ஒய்டு டிராவல்ஸ்

சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

SAUDI WAKALA CARD

بطاقة الوكالة السعودية

رسنا إنتربرائز

المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية

رقم التسجيل: ايه ٠٣١٠/موم/٣٠٠/٤ ٣/٤/٧٨٧٠/٢٠٠٦

* Saudi Arabian Consulate, Mumbai accept wakkalah from any Recruitments office.

## RASNA ENTERPRISES

GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!

தலைமை அலுவலகம் :

எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

கிளைகள் :

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

# அவமானம்! தேசிய அவமானம்!

எம்.எஃப். ஹுஸைன் ஒரு பெரிய தேசிய கலைஞன்! இப்படித்தான் இந்தியாவிலிருந்து அனைவரும் அவரை அழைத்தார்க்ள.

இந்த தேசிய கலைஞன் தீட்டிய கலையழகை ரசிக்க இயலவில்லை இந்த நாட்டிலுள்ள பாசிஸ்ட்டுகளால்.

அவர் தீட்டியவற்றையெல்லாம் தவிடு பொடியாக்கினார்கள். அவரை கொலை செய்ய தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள். அவர் உயிர்பிழைக்க ஊரைத் துறந்தார். இந்தியாவை விட்டே வெளியேறினார்.

பின்னர் கத்தர் நாட்டில் குடியுரிமைப் பெற்றுள்ளார்.

இதனை தேசிய அவமானம் என குடிமக்கள் அனைவரும் அழைத்து வருகின்றார்கள்.

ஆனால் நமது மத்திய அரசு அதனைப்பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்பட்டதில்லை.

ஆனால் பல்லாயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்களின் மரணத்திற்கு காரணமாய் இருந்தார் பால்தாக்கரே!

இவருடை கொலை பாதகச் செயல்களையும், இவரைச் சட்டத்தின் மன் நிறுத்திட வேண்டிய அவசியத்தையும், ஸ்ரீ கிருஷ்ணா கமிஷன் அறிக்கை தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லியதும்.

ஆனாலும் இவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை மாறாக, அவருக்கு மூன்றடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதையும் பல நல்லவர்கள் - இந்திய நாட்டின் உண்மையான குடிமக்கள் இந்திய அரசிடம் கேட்டுவிட்டார்கள்.

எந்தப் பதிலையும் தந்திட வக்கில்லாமல் நமது தேசிய தலைவர்கள் தலை குனிந்து நிற்கின்றார்கள்.

மொத்தத்தில் வன்முறையை வழியாகக் கொண்டவர்கள் தங்களுக்குப் பிடிக்காதவர்களுக்கு இந்தியாவில் இடமில்லை என்பதை உறக்க முழங்கியவர்கள் - தங்கள் திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கின்றார்கள்.

இப்படி வன்முறையை வழியாகக் கொண்டவர்கள், கை ஓங்கிட வழிவிட்ட காங்கிரஸ் ஆட்சியே முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும்.

தங்களை இஸ்லாத்திற்க அன்னியமாணவராக காட்டிக் கொண்டாலும், இஸ்லாத்திற்கு முரணான செயல்களையே செய்து கொண்டிருந்தாலும், முஸ்லிம் பெயருடையவராக இருந்தால் இதுதான் நடக்கும் என்பதை எப்.எம். ஹுஸைன் போன்றோர் உணர்ந்திட வேண்டும்.


முரண்பட்ட முஸ்லிம்களுக்கே இது கதி என்றால் உண்மையான முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்தை இலட்சியமாகக் கொண்டவர்களுக்கும் என்ன நடக்கும்?

அவர் இப்போது இந்தியாவின் குடியுரிமையை இழந்தது. அவருடைய ஓவியங்களின் விழைவு அவருடைய முஸ்லிம் பெயருக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என எவரேனும் கருதினால் அவர்கள் முஸ்லிமல்லாத ஒருவரின் பின் வரும் எழுத்துக்களை கவணிக்கவும்.

“Mr. Hussian is a true liberal and it is impossible for him to have hurt somebody’s religious snetiments. The problem is something else - his peeless popularity as an artist and his religion”

***a reader from Bangalore - The Hindu dt. March 2, 2010***

அதாவது ஹுஸைன் அவர்கள் உண்மையிலேயே ஒரு விசாலமான எண்ணமுடையவர். அவர் சிலருடைய மத உணர்வுகளைப் புண்படுத்தி இருப்பார் என்பது நம்ப முடியாத ஒன்று. பிரச்னை உண்மையிலேயே வேறு வகையானது. ஒரு ஓவியர் என்ற



வகையில அவருடைய இணையற்ற புகழ், அவருடைய மதம் ஆகியவையே!

**தி.இந்து 1.3.2010**
**ஒரு வாசகர்**

“நம் நாட்டில் அசிங்கியங்களுக்கும் ஆபாசங்களுக்கும் அளவில்லை; விளம்பரங்கள், சினிமாக்கள் அவற்றில் வெளிப்படும் ஆபாசங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் எம்.எஃப். ஹுஸைனின் ஓவியங்கள் பற்றி அதிகமாகக் கவலைப்படுகின்றார்கள். காரணம் அவர் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர். அவருடைய படைப்புகளை இந்த உலகமே பாராட்டிக் கொண்டிருக்கும் போது, நம் நாட்டு வகுப்புவாத சக்திகள் அவரை நாட்டை விட்டே துரத்திவிட்டன” சித்தானந்த் - பெங்களூர் தி. இந்து **2.3.2010**


“மத சார்பற்ற ஜனநாயக இந்தயா சாதிக்காததை இஸ்லாமிய கத்தர் சாதித்திருக்கின்றது” எனக் கருத்து சொன்னோரும் உண்டு.

ஆக உலகப் புகழ்பெற்ற ஓவியர் ஒருவர் தனது முஸ்லிம் பெயரால் இந்தியக் குடியுரிமையை இழந்துள்ளார்.

**எம்.ஜி.எம்.**

# கர்கரேயை கொலை செய்தது யார்?

## தொடர் – 2




**20ம்** நூற்றாண்டின் ஆரம்பம், பல குண்டுவெடிப்புகள் மீடியாக்களின் குருட்டாம் போக்கான தவறான மிகைப் படுத்தப்பட்ட தகவல்கள் (தெளி வாக இந்திய உளவுத் துறையால் (ஐ.பி) தூண்டப்பட்டு வெளியிடப்பட்டவை) தவறான நோக்கங்களுடன் நீதியற்ற முறையில் விசாரிக்கப்பட்ட குண்டு வெடிப்பு வழக்குகள்; தானாக வெடித்த 2006 நந்தியத் வெடிப்பு வழக்கு; அப்போதைய (ATS) தீவிரவாத எதிர்ப்பு படையின் தலைவரான மறைந்த ஹேம்மந்த் கர்கரேவின் மூலம் மிக நேர்மையாக நடைபெற்ற மாலேகான் 2008 குண்டுவெடிப்பு வழக்கு மற்றும் அதன் மூலம் வெளி வந்த தேசிய அளவிலான தீவிர வாத வலைப்பின்னல்; உளவுத் துறையினால் மிக புத்திசாலித்தனமாக தடுக்கப்பட்ட தகவல் மூலம் ஏற்படுத்தப்பட்ட 26/11 மும்பை தாக்குதல்கள், இதன் மூலம் மாலேகான் வழக்கு விசாரணையில் ஏற்படுத்தப்பட்ட தடை, கோழைத்தனமாகவும் கொடூரமாகவும் கொல்லப்பட்ட தீவிரவாத தடுப்பு பிரிவுத் தலைவர் ஹேமந்த் கர்க்ரே; ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விரைவாக ஹேம்ந்த் கர்க்ரே அவர்களுக்கு பதிலாக பணியமர்த்தப்பட்ட மிகவும் ஆட்சேபனைக்குரியவரான அதிகாரி கே.பி. ரகுவன்ஷி சி.எஸ்.டி. - காமா ரங்கபவன் சந்தின் (மும்பை தீவிரவாத தாக்குதலில் ஒரு பகுதி) சந்தேகத் திற்கிடமான ஐ.பி. மற்றும் எப்.பி.ஐ. விசாரணைகள் மற்றும் அதற்கு தலையாட்டி பொம்மைகளாக இருந்த மும்பை க்ரைம் பிரிவு இவற்றிற்கு சாட்சியானது.

இந்த புத்தகத்தில் 1983ல் நடந்த இந்து முஸ்லிம் கலவரத்திலிருந்து நவம்பர் 26, 2008 அன்று நடந்த மும்பை தாக்குதல் வரை நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் எழக் கூடிய பின் வரும் கேள்விகளுக்கு பதிலளிக்க விழைந்திருக்கிறேன். அவை,

1. மத்திய வரலாற்று காலத்திலும் அதற்கு பின்னும் உறவுகள் முஸ்லிம்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையே உள்ளன்போடு இருந்திருந்தும் ஏன் இந்த பிராம்மணீய சக்திகள் 1893 முதல் ஏன் முஸ்லிம்களுக்கு எதிரான மனோ நிலையை மக்கள் மனதில் உருவாக்கி இந்து முஸ்லிம் கலவரங்களை உருவாக்க வேண்டும்?

2. ஆர்.எஸ்.எஸ். போன்ற பிராமணீய இயக்கங்கள் தங்களுடைய ஆயிரக்கணக்கான கிளைகளின் மூலம் வெளிப்படையாக வாந்தியெடுத்துக் கொண்டிருக்கும் போது ஐ.பி. போன்ற நாட்டின் தலைமை உளவு நிறுவனங்கள் இத்தகைய பிராமணீய நிறுவனங்களின் சட்ட விரோத வகுப்புவாத செயல்களைப் பற்றி தெரிவிக்காமல் அரசாங்கத்தை இருட்டில் வைத்திருப்பதேன்?

3. இந்நாட்டை கடந்த 60 ஆண்டுகளாக இந்த வகுப்புவாத கலவரங்கள் கிழித்துப் போட்டிருக்கும் நிலையில் ஏன் ஐ.பி. நேரத்தே உண்மையான தகவல்களை, அதன் நேர்மையான அறிவுரைகளை அரசாங்கத்திற்கு தந்த அதனை கட்டுப்படுத்தக் கூடாது?

4. முஸ்லிம் தீவிரவாத இயக்கங்களின் மூலம் மிக முக்கியமானவர்களுக்கு (வி.வி. ஐ.பி.), முக்கிய கட்டிடங் களுக்கு மற்றும் மதஸ்தலங் களுக்கு ஆபத்து என்ற பொய்யான தகவல்களை உளவு என்ற பெயரில் ஐ.பி. ஏன் இந்த 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து செய்ய ஆரம்பித்தது?

5. பிராமணீய தீவிரவாத இயக்கங்களின் ஆயத்தங்கள் அதாவது தங்களுடைய தொண் டர்களுக்கு கொடுக்கக் கூடிய தீவிரவாத பயிற்சிகள், ஆயுதங் கள் யுத்த தளவாடங்களை வெடி மருந்துகளை சேகரிப்பது, வெடி குண்டுகளை தயாரிப்பது மேலும் முக்கியமாக குண்டு வெடிப்பு களை நிகழ்த்தியது போன்ற வற்றை ஏன் அரசாங்கத்திடம் தெரிவிக்கவில்லை?

6. ஏன் ஐ.பி. அபினவ் பாரத்தை பற்றியும் அதன் ‘ஹிந்து’ ராஜ்ஜியத்தை ஏற் படுத்தும் திட்டத்தை பற்றியும் அரசாங்கத்திற்கு தெரிவிக்காமல் அரசாங்கத்தை இருளிலேயே வைத்துள்ளது?

7. ஐ.பி.யின் தலையாய கடமை உளவுத் தகவல்களை சேகரிப்பதாக இருந்தும் அதை செய்யாமல் ஏன் அது அனைத்து குண்டு வெடிப்புகளிலும் தேவை யில்லாமல் தன்னிச்சையாக தலையிட்டுக் கொண்டிருக்கிறது?

8. ஐ.பி. மும்பை தீவிரவாதத் தாக்குதலை பற்றிய தகவலை குறிப்பாக ஏன் மறைத்தது? மேலும் அதை ஏன் மும்பை காவல்துறையுடனும் மேற்கு கடற்படையினரிடமும் பகிர்ந்து கொள்ளவில்லை?

9. ஐ.பி.க்கு 26/11 தீவிரவாதத் தாக்குதலில் உபயோகப் படுத்தப் பட்ட 35 சந்தேகத்திற்குரிய கைப் பேசி களை தாக்குதல் நடப்பதற்கு 5 நாட்களுக்கு முன்பே கிடைத்தும் அவற்றை ஏன் தங்களின் கண் காணிப்பில் வைக்கவில்லை?

10. ATS ன் தலைவர் ஹேமந்த் கர்கரே கொல்லப்பட்ட சில மணி நேரங்களிலேயே மிகுந்த சர்ச்சைக்குரிய வகுப்புவாத சிந்தனை கொண்ட கே.பி. ரகுவன்ஷியை ஏன் ATS தலை வராக்க வேண்டும்?

11. மும்பை தாக்குதல் வழக்கின் விசாரணையை ஆரம்பத்தில் இருந்தே ஐ.பி. ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் இந்த விசாரணையில் வெளிநாட்டு நிறுவனமான எப்.பி.ஐ.யின் விசாரணையை அனுமதித்து நம் நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட அதனை ஏன் அனுமதித்து?

என்னுடைய ஆய்வு நான் மேற்கூறிய அனைத்து பிரச்னை களும் ஒன்றுக்கொன்று தொடர் புடையது என்று நிறுவுகிறது. இந்த விளையாட்டின் முக்கிய வீரர்களாக இருந்து வருபவர்கள் பிராம்மணி ஸ்ட்கள் பிராம்மணர் களில் மிகக் குறைந்த அளவில் உள்ளவர்கள், ஒரு குறிப்பிட்ட கொள்கையின் அடிப்படையில் பயிற்றுவிக்கப்பட்ட பிராம்மணரல் லாதோர், பிராமண ஆதிக்கங் கொண்ட ஐ.பி., பிராமணர்களால் கட்டுப்படுத்தப்படும் மீடியாக் களின் ஒரு பகுதி.

இவர்களின் முக்கிய கொள்கை இந்திய சமூகத்தின் மீது அவர்களுக்குள்ள ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது. ஆரம்பத்தில் இது இந்துக்களை வகுப்புவாத கலவரங்களில் ஈடுபட செய்வதன் மூலம் சமூக மற்றும் மத ரீதியான ஆதிக்கத்தை ஏற்படுத்து வது என்ற அளவில் குறுகித்தான் இருந்தது. ஆனால் முஸ்லிம் களுக்கு எதிரான வேலைகளில் இவர்களுக்கு கிடைத்த வரவேற்பு கள் இவர்கள் எதிர்பார்த்ததை விட அதிக வரவேற்பை பெற்ற தால் அது அவர்களை அரசியல் சக்தியை அடைவதற்கும், ராம ஜென்ம பூமி போன்ற விஷயங் களை கையிலெடுத்துக் கொண்டு ஆக்ரோஷமாக மத துவேஷ சாட்டைகளை வீசவும் செய்ய வைத்தது. எதிர்பார்த்தது போல வே பாபரி மஸ்ஜித் இடிப்பிற்கு பின் அவர்கள் அடைந்த அரசி யல் வெற்றியை சுதந்திரத்திற்கு பின் அமைந்த வகுப்பு வாத அரசியலின் உச்சக்கட்டம் என்ற ழைக்கலாம்?

இத்தகைய சக்தியை சுவைத்த பின் பிராமணீய சக்திகள் இன்னும் சற்று மேலே பறக்க ஆசைப்பட்டன. ஆனால் அவர்களுக்கு பிராம்மணரல்லா தோரோடு அதிகாரத்தை பகிர்ந்து கொள்ள விருப்பமில்லை. ஏனெனில் பிராமணரல்லாதோ ரோடு சேர்ந்து பிராமணீய கொள்கையை நிறைவேற்ற முடியாது. அவர்களுக்கு முழு அதிகாரம் தேவை. எனவே அவர்கள் இந்து ராஜ்யம் என்ற பெயரில் பிராமணீய இராஜ்ய த்தை அரசியலமைப்பின் மூலம் ஏற்படுத்தப்படும் கூட்டாட்சியை தூக்கி எறிந்து வேறு வழியில் அதை அமைக்க ஆரம்பித்து விட்டனர். அவர்களின் திட்டம் ஐ.பி.யின் உதவியுடன் வரிசையாக குண்டு வெடிப்புகளை நாட்டில் நிகழ்த்தி அந்த பழியை முஸ்லிம் களின் மீது போடுவது. அதன் மூலம் மீடியாக்களின் ஒரு பகுதி நாட்டில் ஒரு உச்ச கட்டகுழப் பத்தை ஏற்படுத்தும். அதன் மூலம் நாட்டை அடையும் அவர்களின் திட்டம் எளிதாகும். ஆனால் இந்தியாவின் அதிர் ஷ்டம் மஹாராஷ்டிராவின் ATS (Anti Terrorist Squad) முன்னாள் தலைவர் மறைந்த ஹேமந்த் கர்கரே மூலம் விசாரிக்கப்பட்ட மாலேகான் 2008 குண்டு வெடிப்பு வழக்கு அவர்களின் கனவை நிலுவைக்கு கொண்டு வந்தது.

தொடரும்...

# கவிதா கர்கரே!



மகளிர் மன்றம் சாதனைப் பெண் களைச் சந்தித்து வரு கின்றது. இந்த மாத மகிளிர் மன்றத்தில் நாம் கவிதா கர்கரேயை இடம்பெறச் செய்கின் றோம்.

கண்ணியமான குடும்பத் தில் பிறந்தவர், தனியார் நிறுவனம் ஒன்றில் கர்கரே பணியாற்றிக் கொண்டிருந்த போது நடந்த பயிற்சி களத்தில் தான் கர்கரேயை சந்தித்தார்.

அதன் பிறகே கர்கரே காவல்துறையில் இணைந்தார்.

கவிதாவும், கல்லூரி பேராசிரியராக வாழ்ந்தவர்.

இரண்டு குழந்தைகளின் தாய்.

**26/11** இல் கர்கரே கொலை செய்யப்பட்ட முதல் நாள் தொட்டே தன் கணவர் கொலை செய்யப்பட்டார், அவர் தீவிரவாதிகளின் தாக்குதல்களில் இறக்கவில்லை. அவரைக் கொலை செய்தவர்கள் இந்தியத் திருநாட்டில் போலி நாட்டு பற்றைப் பேசுபவர்கள்தாம் என்பதை உலகறிய செய்தார்,

அவருடைய கணவருக்குக் கொடுத்த விருதுகள் அனைத்தை யும் அவர் பெற்றார்.

ஆனால் அந்த விருதுகளை வாங்கிடச் சென்ற இடங்களில் பேட்டிகள் என வந்தபோது, நாடாளுமன்ற தாக்குதல்களையே யார் நடத்தினார்கள் என்பது தெளிவாகவில்லை எனக் கூறினார்.

இதன்மூலம், நாடாளுமன்ற தாக்குதல்களை நடத்தியவர்கள் வெளியே பழி சுமத்தப்பட்ட முஸ்லிம்களல்ல. அதனை ஏவியவர்களும், செயல்படுத்தியவர் களும் தேசபக்த வேடம் போடும் போலிகள் என்பதைத் தெளிவுப் படுத்தினார்.

அது போலவே தன்னுடைய கணவனைக் கொலை செய்தவர் களும் வெளியே காட்டப்படுபவர் களல்ல - என்பதையும் தெளிவு படுத்தினார்.

கவிதா கர்கரேயை போலவே தன் கணவனை இழந்த இன்னொரு பெண் வினிதா அசோக் காம்டி.

இவரைப் பற்றி நாம் ஏற்கெனவே மகளிர் மன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

அவர் தன் கணவனுக்கு மனைவி செய்யும் கடமையாக ஒரு நூலை எழுதி இருக்கின்றார்.

அதன் பெயர் “To the Last Bullet”.

அந்த நூலில் கவிதா கர்கரே - கர்கரேயின் மனைவி ஓர் அறிமுகத்தை எழுதியுள்ளார்கள்.

கவிதா கர்கரேயின் ஒரே எழுத்துப் படிவம் அதுதான் என்பதால் அதனை இங்கே தருகின்றோம்.

“காவல் துறையினருக்குத் தலைமை தாங்குவதில் என் கணவரின் திறமையைக் காலம் முழுவதும் பார்த்திருக்கின்றேன். இதனால் அவர் இறந்த விதத்தில் ஐயங்களை எழுப்பியபோது நான் ஆச்சர்யத் தில் ஆட்கொள்ளப்பட்டடேன்.

காமா மருத்துவமனை நிகழ்வில் தான் என் கணவர் கொலை செய்யப்பட்டார். அந்த நிகழ்வின் போது என்னுடைய கணவர் காட்டிய தீரத்தை நான் விநிதாவின் முயற்சிகளின் வழி தெரிந்து கொண்டேன். இதற்கு நான் வினிதாவிற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். காமா மருத்துவமனையில் வைத்துத் தான் என் கணவர், வினிதாவின் கணவர் அசோக், விஜய் சலாஸ்கார் ஆகியோர் தீவிரவாதிகளை எந்த உதவியுமில்லாமல் எதிர் கொள்ள தயாரானார்கள். அதிகப்படைகள் வரும், உதவி செய்யும் என எதிர்பார்த்தார்கள் அது நடக்கவில்லை. எனினும் எதிரிகளைத் வீரத்துடன் எதிர் கொண்டார்கள்.

தொடர்ச்சி பக்கம் **44**

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட்

சார்பில்

ஆடுதுறை தியாகி அப்துல் அஜீஸ் நினைவு சமூக நலன் மற்றும் கல்வி விழிப்புணர்வு

**தியாகிகள் மையம் நடத்தும்**

# அறிவுத்திறன் போட்டிகள்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

அல்லாஹ்வின் மாபெருங் கருணையினால் எங்களது நிறுவனம் மற்றும் அதனைச் சார்ந்த தியாகிகள் மையத்தின் சார்பாக பல்வேறு சமூக நலப் பணிகள் ஆற்றிவருவதன் தொடர்ச்சியாக இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 09-05-2010 அன்று எங்களது சென்னை தலைமையக புதிய அலுவலகத் திறப்பு மற்றும் அல் ஹரமைன் ஹஜ் சர்வீஸ் (பி) லிட் நிறுவனத்தின் 18ம் ஆண்டு துவக்க நிகழ்வை முன்னிட்டு எதிர்கால இந்தியாவை நிர்மானிக்க இருக்கும் இளைஞர்களை - மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களது அறிவுத் திறனை வெளிக்கொணரும் வகையில் கட்டுரைப்போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடத்தி பரிசளிக்கும் விதமாகவும் இளைஞர்களை கல்வி கற்கத் தூண்டி அறிவு ஜீவிகள் நிறைந்த ஒரு சமுதாயமாக நம்முடைய சமூகம் உயர பாடுபடும் சமூக நல ஊழியர்கள் மற்றும் அமைப்புகளைத் தேர்வு செய்து கௌரவிக்கும் விதத்திலும் எங்களது **தியாகிகள் மையத்தின்** சார்பில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துள்ளோம்.

சமுதாயப் பெருமக்கள் அதிகமாணவர்களை இப்போட்டியில் பங்குபெறச் செய்வதுடன் தங்கள் பகுதியில் சிறப்பான முறையில் கல்விப்பணி ஆற்றிவரும் சமூக நல ஊழியர்கள் மற்றும் அமைப்புகள் பற்றிய விபரங்களை எங்களுக்கு அனுப்பிவைத்து இப்பணி மென்மேலும் தொடர எல்லாம்வல்ல இறைவனிடம் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

## போட்டி விபரம்

| | | |
|---|---|---|
| கட்டுரைப் போட்டி தலைப்பு | : | **பெரும் புரட்சியாளர் பெருமானார்**<br>**(அல்லது)**<br>**நம் தியாகத்தால் கிடைத்தது நாட்டுக்கு சுதந்திரம் சும்மா கிடைக்குமோ ஆட்சி, அதிகாரம்.**<br>**- ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஓர் ஆய்வு** |
| கலந்து கொள்ளத் தகுதி | : | மாணவர்கள் மற்றும் 40 வயதிற்குட்பட்ட அனைவரும். |
| அளவு | : | A4 அளவுத் தாளில் ஒருபக்கத்தில் மட்டும் டைப் செய்து ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் |
| தியாகிகள் மையத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | 15-04-2010 |
| பரிசு | : | நடுவர் குழுவால் தேர்வு செய்யப்படும் சிறந்த மூன்று கட்டுரைகளுக்கு தலா ரூ.5000/- மற்றும் ஆறுதல் பரிசுகள். |

முகவரி

தியாகிகள் மையம்
எண்.10, (பழைய எண்.73)
தாதா முத்தியப்பன் தெரு, (பிராட்வே)
பிளாட் எண்.5, முதல்தளம்,
கொத்தவால் சாவடி காவல்நிலையம் எதிரில், ஜார்ஜ் டவுன்.
சென்னை-600 001. போன் : 044 - 42165352

அன்புடன் அழைக்கும்

அ. முகம்மது இக்பால், B.A.B.L.,
தியாகிகள் மைய இயக்குனர்

# இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் தன்னைத் தந்த மழவர்கள்!

ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ், புஹாரி பாஸீ முஹைதீன் என்ற மூன்று இலட்சிய செல்வங்களை இழந்து (4) நான்காண்டுகள் நிறைவடைகின்றன.

இதில் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் 28 ஆண்டுகளாக என்னோடு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் இலட்சிய ஓட்டத்தில் உடன் நின்றார்கள்.

ஆசிரியர் அவர்களையும் அண்ணன் கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் அவர்கள்தாம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் சேவையை நாங்கள் செய்திட தொடங்கிய காலகட்டம். போடிக்கலவரம் என்ற ஜாதி மோதல் 1980களில் ஊரையும் உலகையும் உலுக்கிக் கொண்டிருந்தது. துரை ராஜபுரம் என்ற கிராமத்தை மையப்படுத்தி இஃது தொடங்கியதால் இதற்கு துரை இராஜபுரம் கலவரம் என்ற பெயருமுண்டு!

போடி, விலக்கு என அறியப்பட்ட முத்துத்தேவன் பட்டிக்குப் பக்கத்திலுள்ள சந்திப்பில் தான் துப்பாக்கிச் சூடு நடந்தது. அதில் இரண்டு தலீத்கள் இறந்தார்கள். பலர் காயம் பட்டிருந்தார்கள். காயம் பட்டிருந்தவர்களைக் காணவும் அவர்களுக்கு ஆறுதல் சொல்லவும், அத்தோடு அதுபோன்ற அநீதிக்கும் ஆக்கிரமிப்பிற்கும் உள்ளாவதிலிருந்து விடுபடவழி சொல்லவும், நான், அண்ணன், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் போடி நூர்தீன் ஆகியோர் சென்றிருந்தோம்.






சில நேரங்களில் முத்துத் தேவன்பட்டி சலீமும் உடன் வந்தார். ஆசிரியர் அவர்கள் அண்மையில்தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மனைவி ஒரே மகன் என அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

கிராமங்களைச் சுற்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்லி ஆறுதலையும், இஸ்லாத்தையும் ஒருங்கே சொல்லிவிட்டு, ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ்வின் வீட்டிற்கு வந்தோம்.

நெடிய பயணத்திற்குப் பிறகு ஹிதாயத்துல்லாஹ்வின் வீட்டிற்கு வந்த எங்களுக்கு விருந்துபோட்டார்கள் ஆசிரியரின் மனைவி அவர்கள்.

தொன்று தொட்டே இஸ்லாமிய சமையல் கலையைச் செய்து வரும் ஓர் முஸ்லிம் பெண்ணின் அனுபவத்தை விஞ்சும் உணவின் சுவை. கோழி கறி!

சிம்மினி விளக்கின் ஒளியில்தான் உணவருந்தினோம்.

ஆமாம்! ஆசிரியரின் வீட்டுக்கு மின்னிணைப்பு இல்லை. ஏன்? இணைப்பைப் பெற்று விட வேண்டியதுதானே? எனக் கூறியபோது, எங்களோடிருந்த முத்துத் தேவன் பட்டியைச் சேர்ந்த இன்னொரு முஸ்லிம் இவரும் அண்மையில் இஸ் லாத்தை ஏற்றுக் கொண்டிருந் தவர்.”

“இந்தக் காலணிக்கே மின் இணைப்பைப் பெற்றுத் தந்திடுவதில், முன்னணியில் நின்றவர் தன் வீட்டில் மின்ணிணைப்பு இல்லாமிருக்கின்றார்” என்ற போது ஆசிரியரின் தன்னலமற்ற சமுதாயத்தொண்டு உடனிருந்த அனைவரையும் உலுக்கிற்று.

ஆசிரியர் அவர் பெறும் அவர் சம்பளத்தில் ஒரு பகுதியை

மாதம் தவறாமல் சமுதாய சேவைகளுக் கே செலவிட்டார்.

நான், கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் தம்பி மன்சூர் ஆகியோர் பல இடங்களில் இஸ்லாமிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை விடாமல் தொடர்ந்து நடத்தி வந்தோம்.

இவை நாங்கள் நடத்தி வந்த தாஃவா என்ற இஸ்லாத் தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியிலிருந்து முற்றிலும் மாறு பட்டவை.

இந்த நிகழ்ச்சிகளில் நாங்கள் இஸ்லாத்தை நிலை நாட்டும் இலட்சியத்தின் முக்கியத் துவத்தையும், இஸ்லாத்தைத் தொடர்ந்து தாக்கிடுவோரின் தாக்குதலை தடுத்து நிறுத்திட வேண்டியதன் அவசியத்தையும் அறிவுறுத்தி வந்தோம். இஸ் லாமிய பொருளாதாரம் இஸ் லாமிய நிருவாக முறை ஆகிய வற்றை விளக்கிச் சொல்லி வந்தோம்.

இப்படி ஒரு திறந்த வெளி முகாமை குமரிமுனையில் - விவேகானந்தர் கேந்திரத்திற்கு முன்னால் உள்ள தோட்டம் ஒன்றில் நடத்தினோம்.

இதுபோன்ற முகாம்கள் பல்வேறு தலைப்புகளிலும் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

இந்த மூன்று நாள் முகாம் களிலும் ஆசிரியர் ஹிதயாத்துல் லாஹ் அவர்கள் கலந்து கொண் டார்கள்.

மூன்றாம் நாள் இஸ்லாத் தின் பக்கம் மக்களை அழைக்கும் பெரும் பணியையும் சேர்த்து நாம் என்னென்ன பணிகளை எடுத் திருக்கின்றோம். அவற்றில் என்னென்ன செய்திருக்கின்றோம் என்பதையெல்லாம் பட்டியல் போட்டோம். ஆய்வுக்கு உட்படுத்தினோம். நாங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நடத்திடும் (ஷீறா) கலந்தா லோசனை கூட்டத்தில் இந்த ஆய்வு நடைபெறும்.

இஃதல்லாமல் தேவைப் படும் போதெல்லாம் நாங்கள் கலந்து பேசி அடுத்தடுத்து செய்ய வேண்டிய பணிகளைப் பட்டிய லிடுவோம். அதுபோல் அன்று கன்னியாகுமரியில் நடந்த முகாமி லும் முடிவால் ஓர் ஆய்வை நடத்தி னோம்.

ஆசிரியர் அவர்கள் பல கேள்விகளை அடுக்கடுக்காய் கேட்டார்கள்.

தமிழகம் முழுவதற்கும் இந்த இஸ்லாமியப் பிரச்சாரத்தைக் கொண்டு சென்றிட வேண்டும் என்கின்றீர்கள். அதற்கு என்ன செய்வீர்கள்? எனக் கேட்டார்கள்.

இந்தக் கேள்விக்குப் பதிலை சொன்ன பிறகு - என்னிடம்,

நீங்கள் சொல்வதைப் பார்த் தால் தமிழகத்திற்கு வெளியேயும் கொண்டு செல்வீர்கள் போலிருக் கின்றது. அப்படியானால் நிதி பெரிய அளவில் தேவைப்படும் அதற்கென்ன செய்வீர்கள்? என்றொரு கேள்வியை எழுப்பி னார்கள்.

அதற்கு நான் எதையும் பணத்தை வைத்துக் கொண்டு நாங்கள் தொடங்கியதில்லை. இப் போது நம்மால் தனிப்பட்ட முறை யில் முடிந்த அளவு பணத்தைத் தருகின்றோம். ஆனால் கிராமங்கள் தோறும் புகுந்து நாம் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கின்றோம். இந்த இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் நிகழ்ச்சியை ஒரு நாள் முழுவதும் நடத்து கின்றோம். மதியம் மக்களுக்கு உணவு தருகின்றோம். அதற்கான பணத்தை அந்த ஊரிலேயே வசூல் செய்கின்றோம். ஊரில் சாதாரண மக்கள் பல நேரங்களிலும் பணம் படைத்தவர்கள் பல நேரங்களிலும் பணத்தைத் தந்திருக்கின்றார்கள்.

எந்த ஊரிலாவது வசூல் செய்த பணத்தில் மீதி வந்திருந்தால் அந்தப் பணத்தை அந்த ஊர் மக்களிடமே தந்திருக்கின்றோம். இதைப் பல நேரங்களில் நீங்களே பார்த்திருக்கின்றீர்கள் என்றேன்.

ஆகவே யதார்த்தங்கள் என்னவெனில் நாம் கடமையைச் செய்தால் பிரச்சாரத்தை தொடர்ந் தால் பணம் ஒரு தடையாக இருக் காது. மாறாக நமது உழைப்பும், அல்லாஹ்வின் உதவியுமிருந்தால் நிச்சயமாக எல்லா லட்சியங்களும் கை கூடும். பணம் ஒரு பிரச்னையே அல்ல என்றேன். பணமிருந்த இடங்களில சிறந்த இலட்சியம் உழைப்பு, அல்லாஹ் வின் உதவி இவை இல்லாம லிருந்ததால், பணம் பாழாய்ப் போயிருக்கின்றது. பல நேரங் களில் இந்தப் பணமே பகை, கீழ்த்தரமான குடுமிச் சண்டை இவற்றிற்கு வழிவிட்டிருக்கின்றது என்று நான் பதில் சொன்னேன்.

வரலாற்றில இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொண்டவர் கள், இழப்புகளையும் இன்னல் களையும் தான் சந்தித்திருக் கின்றார்கள். இவற்றை எதிர்பார்த் தே நாம் களத்தில் இறங்கிட வேண்டும் என்றேன்.

ஆசிரியர் அவர்கள் என் பதிலில் திருப்தி அடைந்தவராக நாம் முயற்சிகளை மேற்கொள் வோம். இன்ஷா அல்லாஹ் எனச் சொன்னார்கள்.

எங்கள் இலட்சிய பணி - இஸ்லாத்தை நிலைநாட்டிட வேண்டும், அதற்காக உழைக்க வேண்டும் என்ற பிரச்சாரத்தை முஸ்லிம்களிடமும், இஸ்லாமே உண்மையான இறைவனின் வழிகாட்டுதல் அது வாழ்வின் அனைத்துத் துறைகளையும் தழுவியது. அதனை ஏற்றிட வாருங்கள். ஏகத்துவத்தை ஏற்றிட வாருங்கள் என்ற பிரச் சாரத்தை சகோதர சமுதாயத் தைச் சார்ந்தவர்களிடமும் செய்து வந்தோம்.

ஆசிரியர் அவர்களும், இந்தப் பணிகளில், எங்களுடன் முழுமையாக களமிறங்கினார்கள்.

இந்நிலையில் எங்கள் அணியில் அவர்கள் இணைந்து பலப்பணிகளைச் செய்தார்கள். கிராமங்கிராமமாக நாங்கள் இஸ்லாத்தை எடுத்துச் சொல் லிடும் கருத்தரங்கங்களை நடத் திய போது உடனிருந்தார்கள் என்ற நிலையில் நிறுத்திடாமல் தங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களில் நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்தார்கள். போடி நூருதீன் இதில் ஓர் களப்பணியாளனாக நின்று அனைத்தையும் செய்தார்.

## கிராமங்கள் தோறும் இஸ்லாமியப் பிரச்சாரம்

கிராமங்கள் தோறும் தாங்கள் நடத்திய நிகழ்ச்சிகள் பின் வருமாறு அமைந்திருந்தது.

முதலில் அண்ணன் டி.எம். உமர் ஃபாருக் அவர்கள் அப்போது தலீத் மக்களுக்கு நடந்த கொடுமைகளை விளக்க மாக எடுத்துச் சொல்லுவார்கள். அத்தோடு இந்து மதத்தில் கட்டப்படும் கதைகள் அவற் றின் முரண்பாடுகள் இவற்றை யெல்லாம் அறிவுப் பூர்வ மான,ஆக்கப்பூர்வமான ஆய்வுக்கு உட்படுத்துவார்.

அதேபோல்தான் திருப் பனந்தாள் உத்திராசு அவர்களும் தலீத்களுக்கு இழைக்கப்படும் அவமானங்களையும் அநீதிகளை யும் நெக்குருக விளக்குவார்.

கொடிக்கால் ஷேஹ் அப் துல்லாஹ் அவர்கள், அம்பேத் கரின் வாழ்க்கையிலிருந்து நிகழ்வு களை எடுத்துச் சொல்வார். உரை கேட்போர் உருப்பார்கள் கண்ணீரை.

இவர்களின் உரைகள் அதாவது டி.எம். மணி அவர் களின் உரை உத்திராசின் உரை, கொடிக் கால் ஷேஹ் அப்துல்லாஹ் வின் உரை இவை, கருத்தரங்கத்தில் கலந்து கொண்டவர்கள் கண் கலங்க வைத்திடும்.

அடுத்த அமர்வில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திடும் அழகியப் பணியைச் செய்வோம். இதனை பெரும்பாலும் நான் செய்வேன். சில பல இடங்களில் டாக்டர் கே.வி.எஸ். ஹபீப் முஹம்மத் அவர்கள் இதைச் செய்திருக்கின்றாகள். அல்லது தம்பி மன்சூர் அவர்கள் செய்வார்கள்.

அடுத்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தனால் தாங்கள் அனுபவிப்ப வற்றைப் பட்டியல் போட்டுக் காட்டுவார்கள்.

இதில் ஆசிரியர் ஹிதாயத் துல்லாஹ் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள். இந்த உரையில், பொட்டில் அறைந்தாற்போல் ஓர் செய்தியைச் சொல்லுவார்கள்.

“என்னுடைய பெயரோடு பறையன் என்ற சொல் ஒட்டிக் கொண்டுவந்தது. ஆனால் என் மகனின் பெயரில் அது ஒட்டிக் கொண்டுவராது. அந்த அளவுக்கு இஸ்லாம் என்னை எல்லா வகையிலும் மாற்றிவிட்டது.” நான் இப்போது என்ன வியாபாரம் வேண்டுமானாலும் செய்யலாம். எங்கே சென்றாலும் வீடு வாடகைக்கு கிடைக்கும் என்று வந்தோரை கண்ணியத்தோடு வாழ வைக்கும் மார்க்கம் என தன் அனுபவங்களைக் கொட்டுவார்.

இப்படி நாங்கள் கிராமங்கள் தோறும் நடத்திய கருத்தரங்கங் களில் ஆசிரியர் அவர்கள் பெரு மளவில் பங்காற்றினார்கள்.

ஆனால் இடையில் ஓர் இடைவெளி.

நாங்கள் எங்கள் பணி களைச் செய்த கொண்டிருந்தது வழக்கம் போல், சூது, வாது இவற்றோடு சமுதாயப்பணிகளை ஆதாயம் தேட வந்தவர்களின்

கண்களை உறுத்தி இருக்கின்றது. இவர்கள் ஆசிரியர் அவர்களை யும் இன்னும் எங்களோடிருந்த சிலரையும் தங்கள் பக்கம் இழுத்து கொண்டார்கள்.

உடனிருந்ததோர் பலர் காணாமற் போய்விட்டார்கள். என்றாலும் நான் இன்னும் சிலரும் எங்களால் இயன்ற பணிகளைச் செய்துவந்தோம். இஸ்லாத்தை ஒரு கொள்கை என்ற அளவில் அனைவருக்கும் அறிமுகப் படுத்தும், பணிகள் தொடர்ந்து கொண்டேதான் இருந்தன.

இந்நிலையில் சில ஆண்டுகளுக்குப் பின் ஆசிரியர் அவர்கள் மீண்டும் வந்தார்கள். மிகவும் சோர்ந்து போயிருந்தார் கள். காரணங்களைக் கேட்ட போது அவர்கள் சொல்லவில்லை.

இஸ்லாத்தை நிலை நாட்டிட வேண்டிய அவசியத்தை மக்களுக்கு அறிவுறுத்திடும் பணிக் காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஷீறாவில் ஆசிரியர் அவர்களை அங்கமாக ஆக்கினேன்.

சில ஷீறாக்களுக்குப் பின் அதிர்ச்சி தரும் அந்தச் செய்தியை ஆசிரியர் அவர்கள் சொன்னார் கள்.

“ஆமாம்! நாங்கள் செய்து கொண்டிருந்த பணியைப் பாழாக்கிட வேண்டும் என்று கங்கணம் கட்டிச் செயல்பட்ட சில போலி இஸ்லாமிய இலட்சிய வாதிகள் ஆசிரியர் அவர்களை அணுகி இருக்கின்றார்கள்.” ஆசிரியர் அவர்களிடம் என்னால் (குலாம் முஹம்மதுவால்) எதையும் பெரிதாகச் செய்திட இயலாது. ஆனால் நாங்களோ எதையும் பெரிய அளவில் செய்திடும் சக்தி பெற்றவர்கள் என்றெல்லாம் பீற்றி இருக்கின்றார்கள்.

பால் பண்ணை ஒன்றை ஆசிரியருக்கு சொந்தமாக ஆக் கிடப் போவதாகவும், அதற்காக கறவை மாடுகளைக் வாங்கி தருவதாகவும் வாக்களித்திருக் கின்றார்கள். இதற்காக பெருந் தொகையை எளிய கடன்கள் மூலம் எழுப்பிடப்போவதாகவும் அளந்து கொட்டி இருக்கின்றார் கள்.

கிலாபத்தை அனைவரும் பங்குப் போட்டுக் கொள்ளலாம். அதில் ஒரு பகுதியை இஸ்லாத் தைப் பிரச்சாரம் செய்யப் பயன்படுத்திடலாம்.

என்றெல்லாம் கதைக் கட்டி இருக்கின்றார்கள். வெளுத்த தெல்லாம் பால் என நம்பிடும் ஆசிரியர் அவர்கள், அவர்களை நம்பிவிட்டார்கள்.

இவற்றையெல்லாம் நம்பி களமிறங்கிய ஆசிரியர். அவர்கள், மீளாக்கடனில் சிக்கிக் கொண்டார் கள்.

ஆசிரியர் பணியில் தான் வாங்கிய சம்பளத்துடன் இன் னொரு தொகையும் சேர்த்துத் தந்தால் தான் கடன் சுமை தீரும் என்ற நிலை. அதுவும் வட்டியு டன்.

மாதந்தவறாமல் வந்து நிற்கும் வட்டிக் கடன் காரர்களைச் சமாளிக்க வட்டிக்கடன் என வட்டி வாகாய் வளர்த்து விட்டது ஆசிரியரை வாயினிக்க பேசிய வர்கள் காணாமற் போய்விட்டார் கள்.

இந்தச் செய்தியை மெத்த வருத்தத்தோடு என்னிடம் சொன்னார்கள். நான் மிகவும் கண்ணியமாக வாழ்ந்து விட்டேன். ஆனால் இப்போது வட்டிக்கு கடன் தந்தவர்கள் பேசுவதை கேட்க முடியவில்லை என்றவர்கள், இன்னொன்றையும் சொன்னார் கள்.

அதற்குமேல் அதைத் தாங்கிட இயலாமல் நான் அதற்கான வழிகளைக் காணத் தொடங்கினேன். அப்போது என்னோடு களத்தில் நின்றவர்கள் அனைவரிடமும் சொன்னேன்.

எங்களிடம் எந்த வகை யிலும் உதவிச் செய்ய பணமில்லை.

இருந்தாலும் அல்லாஹ் வின் மேல் முழு நம்பிக்கை வைத்து களமிறங்கினோம். ஆசிரியர் அவர்கள் நீங்கள் எனக்கு சும்மா பணம் தந்திட வேண்டாம். நீங்கள் நடத்தவிருக்கும் அறிவகத்தை என் இல்லத்தில் தொடங்குங்கள். நான் வாடகை வீட்டுக்கு சென்று விடுகின்றேன் என்றார்கள். அதைத்தான் ஆசிரியர் அவர்கள் இப்படிச் சொன்னார்கள். அறி வகத்தை முதல்கட்டமாக திருப் பனந்தாளில் தொடங்கி சில காரணங்களால் நிறுத்தி வைத்திருந்தோம்.

நிறுவனமும் வந்தாற்போல் இருக்கும், ஆசிரியரையும் கடனி லிருந்து மீட்டது போலிருக்கும் என்ற முடிவுடன் கடனை தீர்க்க முனைப்போடு முயன்றோம்.

நாங்கள் அல்லாஹ்வின் மேல் வைத்த நம்பிக்கை பாழ் பட்டுப் போகவில்லை. விரைவில் கடன் அடைந்தது. அறிவகமும் செயலில் வந்தது. ஆசிரியருக் கான கடைசி தொகையைத் தந்தபோது இதைக் கொண்டு நீங்கள் மிகப் பெரிய இடத்தை விலைக்கு வாங்கியிருக்கலாம். ஆனால் எனக்கு உதவி செய்வதற்காகவே அதை சுருக்கிக் கொண்டவர்கள் என்று நெஞ்சம் நெகிழ்கிறார்.

**தொடரும்**

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | **:** | **இஸ்லாமில் குழந்தைகளின் உரிமைகள்** |
| **ஆசிரியர்** | **:** | **கௌதர் எம். அல்-மினாவி** |
| **தமிழில்** | **:** | **கியஸுத்தீன் நழீமி** |
| **விலை** | **:** | **ஐம்பது ரூபாய்** |
| **வெளியீடு** | **:** | **மக்கள் சேவை பதிப்பகம்**<br>**51/101, தம்பு தெரு, சென்னை - 600 001.**<br>**தொ.பே.: +91-(0) 44-42164350**<br>**கைபேசி : +91-99946 00350** |

குழந்தைகளுக்கான இலக்கியம் குழந்தைகள் பற்றிய இலக்கியம்.

இவ்விரண்டையும் ஒருங்கே அமையப்பெற்றது தான் இஸ்லாமிய குழந்தைகளின் உரிமைகள் எனும் இந்நூல்.

அறிஞர் கௌதர் எம்.அல் - மினாவி அவர்களால் உருவாக்கப்பட்டு மௌலவி கியாஸுத்தின் நளீமி அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நூல் இஸ்லாமில் குழந்தைகளுக்கான உரிமைகளைப் பற்றி மொத்தம் 16 தலைப்புகளில் விரிவாகப் பேசுகிறது.

உலக அரங்கில் நுட்பமாகத் திட்டமிடப்பட்ட ஆளுமை சிதைத்தல் என ஒன்றுள்ளது. அது குழந்தை வளர்ப்பிலும் தனது நுன்மான் நுழைபுலத்துடன் ஆதிக்கம் செலுத்திட விழைகிறது. ஆர்ப்பரித்து உணர்ந்திடாத முஸ்லிம் சமுதாயமும் தனது மழலைகளுக்கு தவறான வழிகளையே காட்டிட நேரிடும் என்பதை குர்ஆன் ஹதீஸ் வாயிலாக மிகத் தெளிவாய் தந்திடும் இந்நூல் அவசியம் வாசித்திட வேண்டிய பொக்கிஷம்.

குழந்தைகள் சமுதாயத்தின் எதிர்காலத் தூண்கள். எனவே அவர்களை திறம்பட செப்பனிட்டு சரியான வழிகாட்டுதல் கொண்டு மேம்படுத்திட வேண்டும். குழந்தைகள் வளர்ப்பு என்பது இஸ்லாத்தின் இபாதத் என்றே கருதப்படும் ஒன்றாகும். இபாதத் என நாம் அறிந்த செயல்களுக்கு கூலி கிடைப்பது போலவே இதற்கும் கூலி உண்டு என்பதை ஆணித்தரமாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

குழந்தைகள் பற்றி நாம் அறிந்திடும் பல செய்திகள் இபாதத்தின் வெளிச்சத்தில் குர்ஆன் ஹதீஸ் இவ்விரண்டையும் மேற்கோள் காட்டி தேவையான இடங்களில் மனோவியல் சம்பந்தமான இடங்களையும் மேலும் பால் குடிவிஷயம் பராமரிப்பு போன்ற தலைப்புகளில் இஸ்லாம் கூறும் உரிமைகளை இபாதத் போன்ற கண்ணோட்டத் தில் தந்திருப்பது பெற்றோருக்கான பொறுப்புகளை கூடுதலாகவே உணர்த்துகிறது.

குழந்தைகளுக்கு இரண்டாண்டுகள் தாய்ப்பால் தர வேண்டும். ஏனெனில் தமது உரிமையை வாதிட்டுப் பெற இயலாதவர்கள் குழந்தைகள்; இவ்வுரிமைகள் நிலை நாட்டப்படுவதற்காக இறைவனே அவற்றைத் தெளிவுபடுத்துவதோடு இறைத்தூதர் வாயிலாகவும் அவற்றை விளக்கியுள்ளான். என இது போன்ற கருத்துக்கள் மூலம் குழந்தைகளின் பக்கம் நமது முழுமையான கவனத்தை திரும்பச் செய்வது இந்நூலின் வெற்றிக்கான ஆதாரம்

சுருங்கக் கூறின்:

எளிய தமிழில் கோர்வையான வாக்கிய அமைப்புகளில் தமிழ் படுத்தப்பட்டுள்ளது. பதிப்பாசிரியரின் ஆர்வம் மெச்சப்பட வேண்டியது.

அவரின் இஸ்லாம் பற்றிய எண்ண ஓட்டங்கள் விசாலமானவை.

அல்லாஹ் இவர்களின் பணியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இறுதியாக :

ஒவ்வொருவரும் அவசியம் வாசித்திட வேண்டிய அருமையான நூல்.

மக்கள் பதிப்பகத்தார் இன்னும் இது போன்ற அறிய பல நூல்களை தமிழில் தந்திட வேண்டும். இது தமிழ்கூறும் நன்மக்களின் எதிர்பார்ப்பு.

***இஸ்மாயில் ரியாஜி.***

*In the Name of Allah the Most Beneficient and the Most Merciful*

## DARUL ISLAM FOUNDATION TRUST (REGD.)

235, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044-45566909
Email: darultrust@yahoo.com Website :: darulislam.in

## ESSAY COMPETITION

Dear Brother,

Asslamualaikum

Our foundation takes special efforts to present Islam as an ideology which still has the power and potential to solve the problems which humanity faces to-day.

You all knew the global meltdown which is generally called the recession is caused by certain factors. Many are of the view that it is not a recession but a fantastic failure of Capitalistic Imperialism.

Many have also highlighted the fact that the Islamic financial system or Islamic Economic system alone can save the world from the present day economic disorder.

We invite contributions which will discuss / analyse this fact.

Students and scholars are requested to send their Essays on: **'GLOBAL MELTDOWN AND ISLAMIC ECONOMIC ORDER'**

**The best contribution will be awarded Rupees Ten Thousand (Rs. 10,000 /- First Prize)**

The next best contribution will be awarded Rupees Five thousand (Rs. 5000/-)

The competition will be covered by the following rules

- The contributions will be valued by a panel; its decision will be final and binding.
- Request for revaluation will be entertained except on compelling reasons.
- Contributors should give their cell phone number with full address, both temporary and permanent.
- Contributions must reach our office on or before 15th April 2010. Contributions received after this date will not be entertained.
- The trust inteds to publish the best of the contributions, in that case appropriate royalty will also be paid. (Insha Allah).

**39ம் பக்க தொடர்ச்சி. . .**

அதிகப் படைகள் (மிகவும் அருகாமையிலிருந்த அதிகப்படைகள்) உதவிக்கு வரவில்லை.

என் கணவனின் மரணத்தைப் பற்றி நான் விசாரிக்க முனைந்தபோது என் கணவனின் மரணத்தைப் பற்றி மிகவும் தவறான தகவல்களையே தந்து கொண்டிருந்தார்கள்.

என் கணவர் அந்தத் தெருவில் நடந்து சென்றார். பின்னர் ஒரு வாகனத்தில் அமர்ந்தார், பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதுபோல் ஒரு தோற்றத்தை உருவாக்கிட முயன்றார்கள்.

இதன் மூலம் இரண்டு அதிகாரிகளின், திறமையை முட்டாள்தனம் போல் காட்டிட முயற்சி செய்தார்கள்.

வினிதாவும் அவளுடைய சகோதரி ரேவதியுந்தான் பாராட்டுக்குரியவர்கள. இவர்கள் தாம் அதிகார வட்டம் அசிங்கமாகக் காட்டிட நினைத்தவற்றை மீறி, உண்மையை உலகறிய செய்தார்கள். அவர்களின் வீரதீர செயல்கள், அம்பலத்திற்கு வந்தன.

வினிதாவின் தைரியம் தான் என்னுள் ஓர் உறுதியை ஏற்படுத்தியது. அந்த உறுதியுடன் பின்னணியில்தான் நான் என் கணவர் அன்று அணிந்திருந்த குண்டு துளைக்காத கவசத்தைப் பற்றிய விசாரணையைத் தொடங்கினேன்.

ஒரு நல்ல கவசம், அணிந்திருந்தால் என்னுடைய கணவர் காப்பாற்றப் பட்டிருப்பாரோ என்ற எண்ணம், என்னை நான் வாழ்ந்திடும் காலம் வரை என்னைத் துரத்திக் கொண்டே இருக்கும். . . ."

கவிதா கர்கரே (வினிதா காம்தியின் நூலுக்கு எழுதிய முன்னுரையிலிருந்து)

**எம்.ஜி.எம்.**

# பூனா குண்டுவெடிப்பு யாரால்?




தொடக்க நாள் தொட்டே நாம் ஓர் உண்மையைப் பறைசாற்றி வருகின்றோம். அஃது தீவிரவாதத்திற்கும், இஸ்லாத்திற்கும் - முஸ்லிம்களுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என்பதே!

அன்று நம்மை வசைபாடியோர் இன்று வாழ்த்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

அன்று நாம் பத்திரிகை விற்பனைக்கு பக்குவமாய் காய் நகர்த்துகின்றோம் என்றவர்கள் இன்று இவர்கள் வாக்கே இறுதியானது என்கின்றார்கள். அல்லாஹ் போதுமானவன்.

நமது வாதங்கள் அனைத்தும் மேலே நாம் கோடிற்றுக்காட்டிய இஸ்லாம் தீவிரவாத அனுமதிக்கவில்லை - அதனால் முஸ்லிம்கள் அதை செய்யமாட்டார்கள் என்ற இஸ்லாமிய அடிப்படைகளின் எழுந்தவையே. அதனால் தாம் வெற்றிப் பெறுகின்றன.

அதே போல் 3.2.2010 மும்பையில் நடந்த குண்டு வெடிப்பு பற்றிய தகவல்கள் அவற்றின் அடிப்படையில் நமது வாதங்கள் ஆகியவற்றை இங்கே தருகின்றோம்.

**- எம்.ஜி. எம்.**

(2010) பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் பூனாவிலுள்ள ஜெர்மன் பேக்கரியில் மாலை 6.40 மணிக்குக் குண்டுகள் வெடித்தன. இதில் 11பேர் இறந்தார்கள். சுமார் 70 பேர் காயம்பட்டார்கள்.

காயம் பட்டவர்களில் ஒருவர் ஈரான் நாட்டைச் சார்ந்தவர். இன்னொருவர் இத்தாலிய நாட்டைச் சார்ந்தவர். எஞ்சியோர் நமது இந்திய குடிமக்கள்.

இந்த குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தவுடன் வழக்கம்போல் லஷ்கரே - தொய்பா - முஸ்லிம்கள், பாகிஸ்தான் இந்திய உளவுத் துறை கண்டெடுத்த அல்லது உருவாக்கிய இந்திய முஜாஹித்கள் என்ற அமைப்பு, இவற்றின் பெயர்களே அடிப் பட்டன.

பின்னர் வழக்கம் போல் பல முஸ்லிம் இளைஞர்கள் விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களை அழைத்துச் செல்லும் போது இவர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் தளம் அமைத்துத் தருபவர்கள் குண்டுவெடிப்பிற்கு அடிப்படை வேலைகளைச் செய்து தருபவர்கள், என்றெல்லாம் கதைக்கட்டினார்கள் காவல்துறையினர்.

பெரும்பாலும் இந்த முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கையும் அவர்களின் குடும்பத்திலுள்ளவர்களின் வாழ்க்கையும் பாழாய்ப்போகும் என்றே நாம் எண்ணினோம். ஏனெனில்

இதுவரை நடந்த குண்டு வெடிப்பு களில் முதலில் பிடிக்கப்படும் அப்பாவி முஸ்லிம் இளைஞர் களின் தலையில்தான் மொத்தப் பழியையும் போட்டிருக்கின்றார் கள். கடைசி வரை அந்த முஸ்லிம் களே குற்றவாளிகளாகக் காட்டப் படுவார்கள். இறுதியில் அவர் களே தண்டிக்கவும் படுவார்கள்.

இடையில் உண்மை யிலேயே குண்டு வைத்த குற்ற வாளிகள் பிடிபட்டு, அவர்கள் ஒத்துக் கொண்டால் கூட முதலில் பிடிபட்ட முஸ்லிம் இளைஞர்கள் விடுதலையடைவதில்லை. ஏன்? பிணைகூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

டெல்லி குண்டுவெடிப்பு, அஜ்மீர் குண்டுவெடிப்பு, ஹைதராபாத், மக்கா பள்ளிவாசல் குண்டு வெடிப்பு, ஜம்ஜுகாட்டா எக்ஸ் பிரஸ் குண்டு வெடிப்பு. மாலிகான் குண்டு வெடிப்பு 2006, 2008. ஜெய்பூர் குண்டுவெடிப்பு 7/11என்ற பம்பாய் குண்டுவெடிப்பு என்ற எல்லாக் குண்டு வெடிப்பு களிலும், முஸ்லிம் இளைஞர் களையே கைது செய்தார்கள். கற்பனை கதை களைக் கட்டி விட்டார்கள்.

ஆனால் பின்னர் இந்தக் குண்டு வெடிப்புகளை நிகழ்த்திய வர்கள் அபிநவ்பாரத் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள்தாம் என்பதை மராட்டிய மாநில தீவிரவாத தடுப்புப் படையின் தலைவர் கர்கரே கண்டுபிடித்தார்.

இந்த அபிநவ் பாரத் ஐ சார்ந்த, சன்னியாசிகள் - சந்நியாசினிகள் இராணுவ தளபதி புரோகித் ஆகியோரை கைதும் செய்தார்கள். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தார்கள். சிறையிலும் அடைத்தார்கள். "மோக்கா" "Mocca" என்ற மராட்டிய மாநில குண்டர் சட்டத்தையும் அவர்கள் மீது பாய்ச்சினார்கள். (பின்னர் இந்த மோக்காவிலிருந்து விடுவித் தனர். இது இந்துதத்துவத் தீவிரவாதிகளுக்கு இந்த நாட்டில் வழங்கப்படும் சிறப்புச் சலுகை.)

இதே போல் மாலிகான் குண்டுவெடிப்புகளுக்கான குண்டுகளைச் செய்தவர்கள் வெடிப் பொருள்களை கொண்டு வந்தவர்கள் இவர்கள் இன்றளவும் கைது செய்யப்படவில்லை. அவர்கள் குஜராத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் மேலே நாம் சுட்டிக்காட்டிய குண்டு வெடிப்பு களில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்களுக்குப் பிணை கூட கிடைக்கவில்லை.

காரணம் கேட்டால் மேலே உள்ள குண்டுவெடிப்புகளில் மத்திய புலனாய்வுத்துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையைக் காட்டுகின்றார்கள்.

இந்தக் குற்றப் பத்தரிகை யில் நமது மத்திய புலனாய்வுத் துறை மாலிகோன் குண்டு வெடிப்பில் சம்மந்தப்பட்ட சந்நியாசிகளுக்கும், இராணுவ அதிகாரிக்கும் வேறு எந்தக் குண்டுவெடிப்பிலும் சம்மந்த மில்லை எனக் கூறியுள்ளது.

## குற்றப்பத்ரிகை விநோதம்?

சாதாரணமாக குற்றப்பத்தி ரிகை குற்றங்களுக்கும் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கும் என்ன தொடர்பு என்பதைத்தான் எடுத்துச் சொல்லும். அல்லாமல் குற்றவாளிகளுக்கும் எந்தெந்த குற்றங்களுக்கும் தொடர்பில்லை என்பதை எடுத்துக் கூறாது.

ஆனால் நமது மத்தியப் புலனாய்வுத்துறை சமர்பித்த குற்றப் பத்திரிகையில் இஃது நடந்திருக்கின்றது. இதனை விளக்கமாக வைகறை வெளிச்சம் ஜனவரி 2009 இதழில் சுட்டிக் காட்டியுள்ளோம்.

இதனால் அபிநவ் பாரத் உள்ளிட்ட அமைப்பினர் இந்து த்துவ தீவிரவாதிகள் பல குண்டு வெடிப்புகளிலிருந்து தப்பித்து விட்டார்கள். இவற்றில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம் கள் சிறையில் வாடிக்கொண்டிருக் கின்றார்கள்.

## கைது செய்யப்பட்ட முஸ்லிம்கள் விடுதலை. . ?

ஆனால் பூனாவில் பெப்ருவரி 13ஆம் நாள் நடந்த குண்டுவெடிப்புகளில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர் கள் விசாரணைக்குப்பின் விடு தலை செய்யப்பட்டு விட்டனர் என்கின்றார் நமது பூனா நிருபர்.

இப்போது பல குண்டு வெடிப்புகளில் நடந்த உண்மை கள் வெளிச்சத்திற்கு வந்திருக் கின்றன. அவை முஸ்லிம்கள் அப்பாவிகள் என நிரூபித் துள்ளன. இவற்றால் அரசு பயங்கர அதிர்ச்சிக்கு உள்ளாகி நிற்கின்றது.

கர்கரேயைக் கொலை செய்தது யார்? என்ற நூல் அமைதியாக ஆனால் ஆழமாக நமது அதிகார வட்டத்தை ஆட்டிப் படைத்து வருகின்றது. அதே போல் வினிதா காம்ந்தி என்ற 26/11 இல் கொலை செய்யப்பட்ட பிரிதொரு அதிகாரியின் மணைவி யின் நூல், "To the Last Bullet" இன்னொரு

அதிர்ச்சியைத் தரு கின்றது. இதனால் நிகழ்ந்த தவிர்க்க இயலாத நிகழ்வே பிடிக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் விசாரனைக்குப் பின் விடுவிக்கப் பட்டு விட்டனர். அவர்களில் யாரும் கைது செய்யப் படவில்லை என்ற இனிப்பான செய்தி!

## பூனா குண்டு வெடிப்பின் நோக்கம்!

பூனா குண்டு வெடிப்பு களில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் விடுவிக் கப்பட்டு விட்டாலும் நமது பத்திரிகைள் அதனை முஸ்லிம் களின் மீது போட்டிட வேண்டும் என்பதில் மிகவும் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகின்றன.

அவர்கள் பூனா குண்டு வெடிப்புகளின் நோக்கம் இஸ்ரவேலர்கள் குறி வைப்பது, ஏனெனில் ஜெர்மன் பேக்கரிக்கு யூதர்கள் அதிகமாக வருகின்றார் கள் எனக் கூறுகின்றார்கள்.

யூதர்கள் அதிக மாக வருவதற்கு இன்னொரு காரணம் பக்கத்தில் ஓஷோ என்ற ஆசிரமம் இருக்கின்றது. அதே போல இன்னொரு பக்கத்தில் 'சாபாத் கவுஸ்' என்ற யூதர்களின் பிரச்சார மையம் இருக்கின்றது இது யூதர்கள் அதிக மாக வருவதற்கு இன்னொரு காரணம்.

இஃதல்லாமல் குண்டு வெடித்த இடம் 'ஜெர்மன் பேக்கரி' என்ற பெயரைக் கொண்டது.

'ஜெர்மன் பேக்கரி' என்ற பெயரைக் கேட்டவுடன் அனை வரும் ஜெர்மனி நாட்டவர்கள் நடத்தும் பேக்கரிதான் அது என்ற முடிவுக்கே வருவார்கள். அதனைத் தொடர்ந்து வெளி நாட்டவர் களைக் குறிவைத்துத் தான் இந்தக் குண்டு வெடிப்பு நடத்தப்பட்டி ருக்கின்றது என்ற முடிவுக்கே வருவார்கள்.

இது ஜெர்மன் நாட்டவர் கள் நடத்தும் பேக்கரி தான் என்பதை அழுத்தமாக மக்களை நம்பிட வைக்க அங்கே அடிக்கடி வெளிநாட்டவர்கள் வந்து போவார்கள் என்றும் அங்கே வெளிநாட்டவர்கள் விரும்பும் உணவு வகைகள் ஏராளமாகக் கிடைக்கும் என்றும் பத்திரிகை செய்திகள், காவல்துறை செய்தி கள் இவை வந்து குவிகின்றன.

ஆனால் உண்மையில் அஃது ஜெர்மன் நாட்டவர்கள் நடத்தும் பேக்கரி அல்ல. அது நம் நாட்டவர்கள் நடத்தும் பேக்கரி தான்.

ஜெர்மன் நாட்டவர்கள்தாம் இந்த பேக்கரியை தொடங்கினார் கள் என்பது உண்மைதான். ஆனால் 22 ஆண்டுகளுக்கு முன் இந்தப் பேக்கரியை விற்று விட்டார்கள். இதனை நம் நாட்டவர்கள் தாம் வாங்கி நடத்தி வருகின்றார்கள்.

(ஃப்ரண்ட்லைன் 12.3.2010)

ஜெர்மன் நாட்டவர்கள் இந்தப் பேக்கரியை நடத்திக் கொண்டிருந்தபோது அதில் வெளிநாட்டவர்கள் விரும்பி சாப்பிடும் உணவு வகைகள் கிடைத்தது என்பதும் உண்மை தான். இந்தப் பெயர் புகழ் பெற்றது. இதனால் நாடெங்கும் கிளை களையும் இதே பெயரில் தொடங்கினார்கள் ஜெர்மன் நாட்டவர்கள். அவற்றில் உற்பத்தி யான பொருள்களும் உலகத்தரம் வாய்ந்தனவாக இருந்தன. இப்போது இந்தப் பேக்கரியை ஜெர்மானியர் நடத்தவுமில்லை. அவற்றில் தரம் வாய்ந்த உணவுப் பொருள்கள் கிடைப்பதுமில்லை. நாட்டுச் சரக்குதான் கிடைக் கின்றது.

அங்கே இவற்றிற்கெல்லாம் மாறாக விபச்சாரம் அதற்கான வாடிக்கையாளர்கள் கூடுவது என்பனவே அதிகம்.

போதாக்குறைக்கு பக்கத் தில் ஒரு மதுக்கடை இருக்கின்றது. ஜெர்மன் பேக்கரிக்கு அடுத்து இருக்கும் இந்த மதுக்கடை எந்த சேதத்திற்கும் உள்ளாகவில்லை.

(ஃப்ரண்ட லைன் மார்ச் 12/2010)

## இஸ்ரவேலர்களைக் குறிவைத்தா. . . ?

யூதர்களின் சாபாத் கவுஸ் 'Chabad House' நிறுவனம் இங்கே இருக்கின்றது. இதைக் குறிவைத்துத்தான் இந்தக் குண்டு வெடிப்புகள் நடந்தன எனக் கூறப்படுகின்து. ஆனால் சாபாத் கவுஸ் எல்லா வகையிலும் தன்னி றைவைப் பெற்றது. அதில் உள்ளவர்களுக்கு தேவையான உணவு உள்ளேயே சமைக்கப் படுகின்றது. அவர்கள் யாரும் ஜெர்மன் பேக்கரிக்கு வருவ தில்லை.

இப்போது குண்டு வெடிப்பு நடந்தபோது கூட சாபாத் கவுஸ் யூதர்கள், ஒய்யாரமாய் வந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

யூத கண்ணழகி ஒருத்தி வந்து அந்த இடத்தைப் புகைப் படம் எடுத்துக் கொண்டிருந்தாள்.

அவள்தான் அந்த சாபாத் கஹஸ் இன் யூதபாதிரியின் மனைவி. அவள் மிகவும் அதிகமாகக் கெத்துக் காட்டியதாலும் பத்திரிகையாளர்களையும் விஞ்சிய உரிமைகளோடு காவல்துறையினரிடம் உறவாடியதாலும் அவளை அவ்விடம் விட்டு அகற்றிவிட்டார்கள்.

அன்று இரவும் மறுநாளும் யூதர்களின் "சாபாத் கவுஸ்" என்ற பிரச்சார மையம் நல்ல ஒளிவிளக்குகளுடன் ஜொலித்துக் கொண்டிருந்திருக்கின்றது (ஃப்ண்டலைன் 12.3.2010) பாதிரியின் மனைவி பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் நாங்கள் நன்றாகத்தான் இருக்கின்றோம். எங்களுக்கு நல்ல பாதுகாப்பே தரப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

26/11 மும்பை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தது. மும்பையிலுள்ள நரிமன் ஹவுஸில் இடம் பெற்றிருக்கும் "சாபாத் கவுஸ்" இன் அலுவலகம் தான் என்பது மூத்த பத்திரிகையாளர் மனித உரிமை ஆர்வலர் அம்ரேஷ் மிஸ்ரா வெளிப்படுத்தும் உண்மை. இந்த நரிமன் கவுஸ் மற்றும் சாபாத் இல்லம் ஆகியவற்றை அபிநவ் பாரத் போன்ற அமைப்புகள் நன்றாகப் பயன்படுத்தி வருகின்றன என்பதையும் அம்ரேஷ் மிஸ்ரா அவர்கள் தெளிவு படுத்தி இருக்கிறார்கள்.

யூதர்களுக்கும் இந்துத்துவ தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த பல கலந்துரையாடல்களை தான் நேரில் நரிமன் கவுஸ் இல் வைத்து கண்டதாகவும் எழுதியுள்ளார்.

ஆனால் அவரை அப்படியே ஓரங்கட்டி விட்டார்கள்.

இப்போது பூனாவில் குண்டு வைத்தவர்கள் இஸ்ரேலி யரைக் குறிவைத்தார்கள் என்பது பொய் என்பது தெளிவாகி விட்டது.

## ஓஷோ ஆசிரமம்

அதே போல் ஓஷோ ஆசிரமத்தைக் குறி வைத்தார்கள் என்பதும் பொய். காரணம் அதுவும் தன்னிறைவைப் பெற்ற ஓர் நிறுவனம். இந்த ஆசிரமத்திலிருந்தும் யாரும் உணவுண்ண இந்தப் பேக்கரிக்கு வருவதில்லை. ஓஷோ ஆசிரமத்திற்கு வருபவர் கள் அவர்களுடைய இலட்சனை யை பதித்த அடையாள அட்டைகளை அணிந்து கொண்டே செல்ல முடியும். அதனால் அங்கே தீவிரவாதிகள் யாரும் நுழைய முடியாது.

ஆகவே குண்டு வைத்தவர்கள் யூதர்கள் களை குறிவைத்தார்கள் என்பது ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய்! இறந்தவர்கள், யாரும் யூதர்களோ ஓஷோ ஆசிரமத் தைச் சார்ந்தவர் களோ அல்ல.

## உளவுப் பார்க்க பொருத்தப்பட்ட தொலைக்காட்சி பதிவுகள்

எது எப்படி இருந்தாலும் 26.11.2008க்குப் பின் சபாத் நிறுவனம் ஓஷோ நிறுவனம் இவையெல்லாம் பயங்கர பாதுகாப்பு வளையத்திற்குள் வந்துவிட்டன. சாபாத் கவுஸ் பக்கம் வரும் வாகனங்கள், மனிதர்கள் அனைவரும் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இவை யெல்லாம் காக்கப்பட வேண்டியவை என உளவுத் துறையும் கூறிக் கொண்டே இருந்தது.

இவற்றோடு தொலைக் காட்சி அனைத்தையும் படம் பிடித்துக் கொண்டிருந்தது. அந்தத் தொலைக்காட்சி பதிவு பற்றி காவல்துறை எதையும் சொல்ல மாட்டேன் என்கின்றது.

இந்த ஜெர்மன் பேக்கரிக்கு எதிரே ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல். அதற்கு O Hotel. ஓ! ஹோட்டல் என்று பெயர். இதில் CCTV ஒன்றும் பொருத்தப் பட்டுள்ளது. இந்த CCTV பெரிய அளவில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவும் என்றார்கள். முதலில் முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்யும் போது இந்தத் தொலைக்காட்சி பதிவுகளின் அடிப்படையில் தான் கைது செய்கின்றோம் எனக் கூறினார்கள். ஆனால் இப்போது அந்த முஸ்லிம்கள் விடுவிக்கப் பட்டுள்ளார்கள். இதனால் அவர்கள் இந்தக் குண்டுவெடிப்புகளுக்கு முற்றிலும் அந்நியமானவர்கள் என்பது தெளிவாயிற்று. ஆனால் இப் போது எந்த பேச்சையும் காணோம்!

எள்முனை அளவு ஐயம் எழுந்திருந்தால் கூட அவர்களை விட்டிருக்க மாட்டார்கள்.

## டேவிட் ஹேல்மேன் ஹெட்லி?

'ஹெட்லி' என்றொரு புதிய கதாபாத்திரத்தை அண்மையில் 26/11 என்ற 2008 மும்பைத் தாக்குதலோடு பொருத்திப் பேசி வருகின்றார்கள்.

இவர் இந்தியா வந்தபோது இந்த 'O Hotel' ஓ ஹோட்டலுக்குப் பக்கத்திலுள்ள ஹோட்டல் சூரியா

வில்லா-வில்தான் தங்கி இருந்தாராம். அப்போது அவர் எடுத்த சர்வே இன் அடிப்படையில்தான் இப்போது குண்டுவெடிப்பாம். அவர் பாகிஸ்தான் உளவாளி எனப் புருடா விடுகின்றனர். அவர் அமெரிக்க குடிமகன்.

ஆனால் அவரை அமெரிக்கா இந்தியாவிடம் ஒப்படைக்க மாட்டேன் என்கின்றது. மட்டு மல்ல, அவனை அமெரிக்கா சென்று விசாரிக்கலாம் என்றால் அவனோடு இந்திய அதிகாரிகள் நேரே சந்திப்பதற்கு, விசாரிப்பதற்கு அனுமதி இல்லை என்கின்றது அமெரிக்கா! எங்கோ இருந்த சலீம் சல்மான் இவர்களையெல்லாம் இந்தியா கொண்டு வந்து சித்திரவதைகளைச் செய்தார்கள். காரணம் ஹெட்லி அமெரிக்கா என்ற சிவன் கழுத்துப் பாம்பு. சிக்காக்கோவில் வைத்து அமெரிக்கா மட்டுமே விசாரிக்குமாம். (ஆனால் ஹெட்லியின் பக்கம் நெருங்க முடியவில்லை.) அமெரிக்க உளவுத்துறை சொல்வதை நாம் நம்பிட வேண்டும். இதற்கு முன்னால் இதே மும்பையில் ஒரு அமெரிக்கன் குண்டுவெடிப்புகளுக்கு ஈ.மெயில் அனுப்பிக் கொண்டிருந்தான். பின்னர் அவர் தப்பிக்க வைக்கப்பட்டான். அமெரிக்காவுடன் நட்பை நாடி தவமிருக்கின்றோம். அதற்காக நமது வெளிநாட்டுக் கொள்கையை அமெரிக்காவுக்கு அடகு வைத்து விட்டோம். ஆனாலும் ஹெட்லியை விசாரிக்க அனுமதிக் கவில்லை அமெரிக்கா.

## உண்மை . . . ?

மொத்தத்தில் இந்த குண்டு வெடிப்புகளுக்கும் முஸ்லிம்களுக்கும் சம்மந்தமில்லை. மாறாக இந்துத்துவ தீவிரவாதி களின் கைவண்ணமே இந்தக் குண்டு வெடிப்புகள்.

முதன் முதலில் இந்தக் குண்டுவெடிப்புப் பற்றிய விசாரணையின் உக்கிரம், இப்போது குறைந்து வருகின்றது. பத்திரிகைகள் கண்டுங் காணாததை போல் நடந்து கொள்கின்றன. அதிகமாக இதைப் பற்றி எழுதுவதில்லை.

இது பற்றி நமது பூனா நிருபர்கூறிடும் போது “பூனா குண்டுவெடிப்பு விசாரணை அவர்கள் விரும்புவது போல் முஸ்லிம்களைத் பிணிக்கும் வகையில் இல்லை. மாறாக இந்துத்துவவாதிகள் பக்கம் திரும்புகின்றது”. அதனால் யாரும் அதில் அக்கறை காட்டிடவில்லை என்கின்றார்.

## உண்மையான நோக்கம்

அடுத்து பாரதீய ஜனதா கட்சிக்கு வேண்டாத செயல் ஒன்றை மத்திய காங்கிரஸ் அரசு செய்ய முன்வந்தது. அது,

பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை என்பதை தானாக முன் வந்து அறிவித்தது.

பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை என்பது கூடாது எனச் சொல்லிவருகின்றது பாரதீய ஜனதா கட்சி.

இந்தப் பேச்சுவார்தை களைத் தடுக்க நினைத்த இந்துத்துவ வாதிகள் இதைச் செய்திருக்கின்றார்கள் என்பதே இப்போதைய கணிப்பு!

இதனை உண்மைப் படுத்துவது போல், இந்தக் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தவுடன் பத்திரிகைகளுக்குப் பேட்டி தந்த பிரகாஷ் ஜாவாட்கர் என்ற பாரதீய ஜனதா கட்சியின் (Spokes Person) ஊடக தகவலாளர் எடுத்த எடுப்பிலேயே Terror and Talks will not go together. அதாவது தீவிரவாதமும் பேச்சு வார்த்தைகளும் ஒன்றாகப் போகாது என்றார். இந்தப் பேட்டி பளிச்சென இந்தக் குண்டு வெடிப்பைச் செய்தவர்கள் இவர்கள்தாம் என்பதை சுட்டிக் காட்டிற்று. இஃதல்லாமல் பல நவி நிர்மான் சேனை என்ற இந்துத்துவ அமைப்பை சார்ந்தவர்கள் பக்கத்தில் நின்றிருக்கின்றார்கள் (ஃப்ரண்ட் லைன் மார்ச் 12 / 2010)

ஆகவே இந்தியா - பாகிஸ்தான் நல்லுறுவை விரும்பாதவர்கள் செய்த செயலே இது. அதில் இந்துத்துவ அமைப்புகள் வெறிபிடித்து நிற்கின்றன.

## எஸ்.எம். முஷ்ரிஃப்

கர்கரேயை கொலை செய்தது யார் என்ற நூலை எழுதிய முஷ்ரிஃப் அவர்களும் பூனாவில் தான் இருக்கின்றார்கள். அவரை எச்சரிக்க இது நடந்திருக்குமோ? என நாம் அச்சப்பட்டோம். அவரிடம் பேசியபோது, அவர் எல்லாவற்றிற்கும் தயாராக இருக்க வேண்டியது தான் என்றார் (அல்லாஹ் அவரைக் காப்பாற்றுவான்)

அவரும், புலனாய்வு முஸ்லிம்கள் பக்கம் போகாததால் புலனாய்வு ஓய்ந்து போனது பூனா வெடிப்பில் என்றார்.

இந்துத்துவ வாதிகளின் கை வண்ணம் என்பதால் பூனா குண்டு வெடிப்பு பாகிஸ்தான் ஹெட்லி என்ற சொற்களோடு நின்று விடும். அதற்கு மேல்தாண்டி பாகிஸ் தானைப் பழித்தே காலத்தையும் கதையையும் ஓட்டிவிடுவார்கள்.

**எம்.ஜி.எம்**

அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# அப்துல் ஸலாம் (நோபிள்) அறிந்த அறிவியல்



இலக்கியச் சுடர்
ரஹ்மத் ராஜகுமாரன்
செல் : 9443446903

அமெரிக்கா, பாகிஸ்தானில் லாகூர், ஐரோப்பா, ஜப்பான், ஜெனீவா மற்றும் கோலார் தங்கச் சுரங்கம். . . . இந்த லோகேஷன்களில் இக் கட்டுரை நகர்ந்துள்ளது. எனவே வாசகர்களும் கூடவே வரவேண்டியது இருக்கும். சரியா. . . . ! ரெடி!

உங்களுக்கு வீக் அண்ட் ஸ்ட்ராங் நியூக்ளியர் ஃபோர்ஸ் (Weak and Strong Nuclear Force) தெரியுமா. . . ? புரோட்டன் நசிவு? பரவாயில்லை. எல்லாம் சொல்கிறேன். இதெல்லாம் குர்ஆனில் சொல்லப்பட்டிருப்பதாக நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி சொல்கிறார். ரொம்பவும் சந்தோஷமாக இருக்கிறதல்லவா. . . !

அப்துஸ் ஸலாம் இவர் யார். . . ? இவர்தான் 1979-இல் பௌதிகத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற ஒரே ஒரு பாகிஸ்தானியர்.

ஸலாமின் இளம் வயதை கவனித்தால், ஒரு மேதை எந்தச் சூழ்நிலையிலும் உருவாக முடியும் என்பது தெளிவாகும். 1926இல் பிறந்தார். பள்ளிப்படிப்பு லாகூருக்கு அருகே 'ஜாங்' என்ற டவுனில்.

"1936-ல் பள்ளி ஆசிரியர் எனக்கு புவி ஈர்ப்பைப் பற்றிப் பாடம் சொல்லிக் கொடுத்தா. எப்படி? புவிஈர்ப்பு விசை என்பது எல்லா இடத்திலும் இருக்கிறது. மின்சாரம் என்று மற்றொரு விசை இருக்கிறது. அது நம் ஊர் ஜாங்கில் மின்சாரம் இல்லை. மின்சாரத்திற்கு நூறு மைல் கிழக்கே லாகூர் போகவேண்டும். அப்புறம் அணுக் கருவிற்குள் எலக்ட்ரான், புரோட்டன் இவற்றுக்குள் ஏதோ விசையைப் பற்றிச் சொல்கிறார்கள் அது ஐரோப்பா வில்தான் இருக்கிறது. அங்கே போக வேண்டும்!"

. . . . . இப்படிப் பள்ளியில் போதிக்கப்பட்ட ஸலாம் பௌதிகத்தில் நோபல் பரிசு வாங்கியிருக் கிறதுக்கு அவரது தனிப்பட்ட புத்திசாலித் தனம் தான் காரணம். அவர் இயற்கையிலே ஏழ்மையாக இருந்த போதிலும் அல்லாஹ் நிரம்ப அறிவு கொடுத்திருந்தான். ஸலாம் 14 வயதில், லாகூர் பல்கலைக்கழகத் தேர்வுகளில் முதல் மார்க் வாங்கியிருந்தார். நன்றாகப் படித்து கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதம்,

பௌதிகம் இரண்டிலும் மேற்படித்து டாக்டர் பட்டம் வாங்குவதற்குள் பலப்பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி குவிந்தார்.

ஸலாம் ஆராய்ச்சி தொடங்கிய போது பிரபஞ்சத்தில் நான்கு வித சக்திகள் தனிப்பட்டுத் தென்பட்டன.

1. புவிஈர்ப்பு சக்தி

2. மின்காந்த சக்தி

3. அணுக் கரு விற்குள் இருக்கும் ஆகர்ஷண சக்தி இதில் இரு வகை

அ. வலுவான அணுக்கரு சக்தி.

ஆ. மெலிதான அணுக்கரு சக்தி.

ஆக மொத்தம் 4 வகை சக்திகளைக் கொண்டுதான் பிரபஞ்ச இயக்கங்கள் அனைத்தையும்புரிய வைக்க முடிந்தது.

புவி ஈர்ப்பு சக்தி உங்கள் எல்லோருக்கும் தெரியும் எறிந்த பந்து கீழே விழுவது இது மாதிரி அத்தனை ஈர்ப்புகளுக்கும் ஒரு சக்தி அதுதான் புவிஈர்ப்பு சக்தின்னு நியூட்டன் என்கிற விஞ்ஞானி கண்டுபிடித்தார். சரிதான் என்றோம்.

மின்காந்த சக்தியும் உங்களுக்கு நலல பரிச்சயம் இருக்கும். காரணம் கரண்ட், காந்த சமாச்சாரங்கள் அத்தனையும் இதில் அடக்கம். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஃபாரேட (Faraday), மாக்ஸ் வெல் (Maxwell) போன்ற விஞ்ஞானிகள் மின்காந்தசக்தியை அலசி ஆய்ந்து இறுதியில் சொன்னார்கள். 'சரிதான்' என்றோம்.

இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் ருதர் போர்டு (Ruther Ford) அணுக்கட்டத்தின் அமைப்பை விவரித்தார். வலுவான அணுக்கரு சக்தியின் மூலம் தான் அணுக்கட்டட அமைப்பு தெளிவாகும். அவ்வளவு தான் என்றார். நாமும் 'சரிதான்' என்றோம்.

அப்பாடா, ஆச்சுப்பா, பௌதிகமே இத்தனைதான் இனிமேல் இந்த 4யை கொண்டு பிரபஞ்ச இயக்கங்களை அனைத்தையும் புரிய வைத்திட முடியும் என்று விஞ்ஞான உலகம் சந்தோஷப்பட்டுக்கு கொண்டிருக்கும் போதுதான். . . .

ஏன் நான்கு. . . ? இந் நான்கையுமே ஒன்று என்று சொல்ல முடியாதா. இந்தக் கேள்வி உங்களுக்கு இப்போ எழும் முன் இந்த நூற்றாண்டின் மகாமேதை ஐன்ஸ்டைனுக்குத் தோன்றி விட்டது. அவர் ஏற்கெனவே சக்தியையும், திடப் பொருளையும் இணைக்கும் $E=mc^2$ என்பதை நிருபித்தார் (இதுபற்றிய என் கட்டுரை சிந்தனை சரத்தில் கையளவு பொருள், கடலளவு ஆற்றல் பார்க்கவும்) விஞ்ஞானி மாக்ஸ்வெல் அவருக்கு முன்பே மின்சாரம் நகர்வதால், காந்தசக்தி ஏற்படுகிறது என்று இரண்டையும் இணைத்து விட்டார். பெயர் மின்காந்த விசை.

ஐன்ஸ்டைன் புவிஈர்ப்பு விசையையும், மின்காந்த விசையையும் இணைக்கும் முயற்சியில் அவர் வாழ்நாளின் பிற்பகுதியில் பல வருஷங்களைச் செலவிட்டார்.

ஐன்ஸ்டைன் ரிலேட்டிவிட்டி (Realativity) சித்தாந்தத்தின் படி புவிஈர்ப்பு என்பது சூரியன், சந்திரன், நடசத்திரங்கள், கிரகங்கள் போன்ற திடப்பொருள்களின் குணமல்ல. அவற்றைச் சுற்றி யிருக்கும் விண்வெளி விளைந்திருப் பதால், ஏற்படுவது என்கிற புரட்சி கரமான கருத்தை நிருபித்துக் காட்டினாலும், அவரால் கூட புவிஈர்ப்பு, மின்காந்த சந்தியையும் ஒன்றிணைக்க முடியவில்லை.

ஐன்ஸ்டைனே முயன்று தோற்றதாய் இதை அணுகப் பலபேர் பயப்பட்டார்கள், ஐன்ஸ்டைனின் யூனி ஃபைடு ஃபீல்டு தியரி (Unified Field Theory) என்கிற 4 சக்தியும் ஒன்றாக்கி ஒரே ஒரு சக்தியாக பரிணமிக்கிற யூனி ஃபைடு தியரி என்பது மொத்த விஞ்ஞான உலகத்தின் வெறும் கனவாகவே இருந்தது.

இப்போதுதான் நமது கட்டுரையின் நாயகர் அப்துஸ் ஸலாம் இந்த 4 சக்திகளைப் பற்றி ஆராய்ந்தார். அப்துஸ் ஸலாம் இந்தப் பிரச்சனையை வேறு ஒரு கோணத்திலிருந்து அணுகி பிரபஞ்சத்து நான்கு சக்திகளில் இரண்டை இணைப்பதில் மிகப் பெரிய வெற்றியை கண்டார் ஸலாம், "புவிஈர்ப்பு விசையைத் தற்போதைக்கு விட்டுவிடுவோம். மின்காந்த விசையையும் மெலிதான அணுசக்தியையும் முதலில் சந்திப்போம்" என்று முயற்சி செய்தார்.

ஓர் எலக்ட்ரான் ஏற்படும் மின்காந்த விசையைத் தக்க கருவிகளைக் கொண்டு அதிக

தூரத்தில் கூட உணரமுடியும். ஆனால் அணுக்கருவிற்குள் இருக்கும் மெல்லிய விசை அதன் ஆதிக்கத்தில் மிகமிக கம்மி யானது. ஒரு சென்டிமீட்டரில் நூறுகோடி கோடி பாம்தான் அதன் ஆதிக்கம் பரவுகிறது. ரொம்ப ரொம்ப குட்டியான சக்தி இது. இதனுடன் பரவலாக ஆதிக்கம் கொண்ட மின்சக்தியை இணைத்து இரண்டும் ஆதாரமாக ஒன்றே ஒன்றுதான் என்று நிரூபிக்க ரொம்ப சிரமப்பட்டு வெற்றி கண்டார் அப்துஸ் ஸலாம்.

அடுத்து இந்தப் பிரபஞ்சம் படைப்பதற்காகவே எல்லாமே சேர்ந்திருந்த பிரபஞ்சத்தை மகா வெடிப்பால் சிதறிப் போகும்படி செய்ததாக குர்ஆனில்,

"ஆரம்பத்தில் வானம் என்றும் பூமி என்றும் தனித் தனியாக இல்லாமல் ஒன்றாக இருந்ததை நாமே பிரித்தமைத் தோம்"

**(குர்ஆன் 21:30)**

இந்த சம்பவத்தை விஞ் ஞான உலகமும் ஏற்றுக் கொண் டது. அந்த மகாவெடிப்பின் போது உஷ்ணம் மிகமிக அதிகமாக இருந்தது. எவ்வளவு உஷ்ணம். . . ? என்று கேட்பவர்களுக்கு, பத்துக்குப் பின் பதினைந்து சைபர் போட்டுக் கொள்ளுங்கள். அத்தனை டிகிரி உஷ்ணம்! அது பிரபஞ்ச ஆரம்ப காலத்தில், இப்போது, அதாவது **1500** கோடி வருஷங்களுக்குப்பின் பிரபஞ்சம் முழுவதும் பரவலாகக் குளிர்ந்து குளிர்ந்து போய் மைனஸ் **278** டிகிரிக்கு வந்து விட்டது.

அப்துஸ் ஸலாம் பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்தின் போது மின்காந்த விசையும் அணுக்கருவுக்குள் விசையும் ஒன்றாக இருந்தது. இந்த ஒன்றாகத்தான் இருந்ததற்கு என்பதற்குரிய ஐடியா அப்துஸ் ஸலாமுக்கு கிடைத்தது குர் ஆனின் மேற்கண்ட வசனம்தான் என்பதை அப்துஸ்ஸலாம் ஒரு பேட்டியின் போது சொன்னார்.

பிரபஞ்சத்தின் உஷ்ணம் இன்றைக்கு மிகவும் குளிர்ந்து விட்டதால் (**278** டிகிரி) அணுக் கருவுக்குள் விசையும் ரொம்பவும் வீக் ஆகிவிட்டது என்று சிந்தித் தார். இதை இருபது வருஷம் சிந்திக்க வேண்டியிருந்தது. அதன் பின் நிரூபிக்க முடிந்தது.

பிரபஞ்சத்தின் ஆரம்ப கணத்தில் இந்த நான்கு சக்திகளும் ஒரே சக்தியாக இருந்து நாள்பட அவை தனித்தனியே பிரிந்தன என்கிற சிந்தனைக்கு காரண கர்த்தா அப்துஸ் ஸலாம் என்பதை விஞ்ஞானம் உலகம் ஏற்றது. ஸலாமுக்கு நோபல் பரிசும் கிடைத்தது.

அவரிடம், "மின்காந்த விசை யையும் அணுக்கருவுக்குள்ளே உள்ள விசையையும் எப்படி உங்க ளால் ஒருசேர சிந்திக்க முடிந்தது. . .?" என்று கேட்டபோது,

"ஒவ்வொரு வஸ்துக் களையும் ஜோடி ஜோடி யாக நாம் படைத்திருக்கின்றோம். இதனைக் கொண்டு நீங்கள் நல்லுணர்ச்சி பெறுவீர்களாக!"

**குர்ஆன் (51:49)**

என்கிற இந்த குர்ஆன் வசனத்தை மேற்கோள் காட்டினார் ஸலாம்.

**1967**ல் ஸலாம் அறிவித்த இந்த ஒருங்கிணைந்த சித்தாந்தம் மெல்ல மெல்ல ஒப்புக் கொள்ளப் பட்டதுக்குக் காரணம் பரிசோ தனைகளில் அவை நிரூபிக்கப் பட்டதால், ஜெனீவாவில் ஆறு கிலோமீட்டர் நீளகாந்தம் அமைத்த ஆக்ஸலரேட்டர்களில் மின்துகள் களைத் துரத்தி, வேகப்படுத்தி, மோதவைத்து, பிரபஞ்சத்து ஆரம்ப காலத்து உஷ்ண நிலையை உண்டாக்க முடிந்தது. அந்நிலை யில் ஸலாமின் கணக்குப்படி "வெக்டர் போஸான்கள் (Vector Bosons)" என்கிற கண நேரத்து கள்கள் உண்டாக வேண்டும். அதை நிரூபிக்க முடிந்து, ஸலாம் போட்ட கணக்கு சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

இப்போது ஸலாம் மூன் றாவது விசையான வலுவான அணுக்கருவிசையில் கவனம் செலுத்தினார். இதுவும் அதே தான் என்று நிரூபிக்கத் தேவை யான உஷ்ணநிலையை உண்டாக் கக்கூடிய கருவிகள் உலகத்தில் இல்லை. இதனால் மறைமுக மான நிருபணம் தேடுகிறார்கள்.. அதுதான் கோலார் பரிசோதனை.

இந்திய ஜப்பானிய விஞ் ஞானிகள் மிகச் சிறந்தவர்களைத் தேடிப் பிடித்து ஒரு கூட்ட மைத்து ஏற்படுத்திய பரிசோத னை இது. தரை மட்டத்திற்கு ஏழாயிரம் அடி கீழ் சுமார் **158** டன் இரும்புத் தகடுகளை ஒரு குளிர்பதன அறையில் அமைத்தார். இத்தனை ஆழம் ஏன். . .? சுற்றுப்புறத்தில் எந்த விதமான கதிரியக்கமோ, காஸ்மிக் கதிர்களோ கூடாது. பரிசோத

னை கெட்டுவிடும். ஒரு வருஷத்தில் இரண்டு தடவையோ, மிஞ்சிப் போனால் மூன்று தடவையோ அத்தனை டன் இரும்பில் உள்ள கோடானுகோடி புரோட்டான்களில் 3 புரோட்டான் நசிவு (Proton Decay) என்கிற விளைவுக்கு உள்ளாகி ஓர் எதிர் எலக்ட்ரானாக (Anti- Electron) மாறும் போது ஒரே ஒரு வெளிச்ச ப்ளாஷ் அடிக்கும். இந்த வெளிச்சக் குஞ்சான ஃபோட்டானே (Photon) அளக்க மிகநுட்பமான வெளிச்ச பெருக்கக் கருவிகளை அத்தனை டன் இரும்பைச் சுற்றிலும் அமைத்து ஒரு வருஷம் ஜப்பானிய, இந்தியா விஞ்ஞானிகள் சுரங்கத்தடியில் காத்திருந்தார்கள். இந்த புரோட்டான் நசிவு ஏற்படலாம் என்று யூகித்துச் சொன்னவர் அப்துஸ் ஸலாம்.

வலுவான அணுக்கரு சக்தியும், மின்காந்த சக்தியும் ஆதாரமாக ஒன்றுதான் என்றால், வலுவான சக்தியால் கட்டுண்டிருக்கும் கோடானு கோடி புரோட்டான்களில் ஒன்றாவது நசிய வேண்டும். நசிந்து ஆன்ட்டி எலக்ட்ரானாக மாறும் போது ஒரு ப்ளாஷ் அடிக்க வேண்டும்.

அடித்ததா. . . ? அடித்தது வெல்டன் ஸலாம் வெல்டன்! ப்ளாஷ் அடித்தது. கோலார்க்காரர்கள் மூன்று நசிவுகளைப் பார்த்தார்கள். ஜப்பானில் இரண்டு பார்த்தார்கள். அமெரிக்காவில் மாறுபடவில்லை என்கி றார்.

“திருக்குர்ஆன் போதிப்பது இயற்கையின் இயக்கங்களைச் சிந்தித்து பார்த்து சிருஷ்டியில் உள்ள ஆச்சர்யத்தை அறிவதே” என்கிறார்.

வாசகர்களே, நீங்கள் எப்போது ஆராயப் போகிறீர்கள். . . ? இன்னும் இந்த உலகத்துப் பிரச்சனைகள் தீர்ந்து விட வில்லை! பூகம்பம் எப்போது வருகிறது. . . ? சுனாமி எப்படி தாக்குகிறது. . . ? எரிமலை குமுறுகிறது. . . ? பூமியின் வெப்பத்தை எப்படி குறைப்பது. . . ? எய்ட்ஸ்க்கும்,கேன்சருக்கும் மருந்து எங்குள்ளது. . . ? விண்வெளியில் பயணிக்கும் அந்த ஏழுபாதைகள் எங்குள்ளது. . . ? இப்படி அடுக்கக்கான பிரச்னைகள்.

“நபியே! இந்தக் குர்ஆனைக் கொண்டு மலைகள் நகரும்படியாகவோ அல்லது பூமியைத் துண்டு துண்டாகவோ அல்லது மரணித்தவர்களைப் பேசும்படியாகவே செய்த போதிலும் அவர்கள் நம்பிக்கைக் கொள்ள மாட்டார்கள்”

**குர்ஆன் (13:31)**

“அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்துப் பார்க்க வேண் டாமா. . . ? அல்லது இவர்களுடைய உள்ளங்கள் மீது பூட்டாப் பூட்டி தாளிடப்பட்டு விட்டதா. . ?”

**குர்ஆன் (47:24)**




M.I. Raseen Hameed
(Partner)

கனவில் கண்ட
காணி நிலம் வேண்டும் இறைவா !
அதில் நாங்கள் கலங்காமல்
இருக்கவேண்டும் இறைவா !!!



Autoor Haji.
S.H. Mohamed Iqbal
(Chief Executive)

இதோ எங்களிடம் மக்களின் நம்பிக்கை நாணயம் பெற்ற நிறுவனம்

**RICHFIELD PROPERTIES** LAND DEVELOPERS

Neelankarai, Chennai - 41. Cell: 93821 50535 / 9841487891 e-mail: richfield786@gmail.com

## டெல்லியில் நடந்த மாபெரும் கருத்தரங்கம்

# “இஸ்லாமும் இதர மதங்களும் ஓர் கருத்துப் பரிமாற்றம்”


### டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவியின் ஆதரவுடன் தாருல் இஸ்லாம் சார்பில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் பங்கேற்றார்!

### குடியரசு துணைத் தலைவர் டாக்டர் எம். ஹமீத் அன்சாரி அவர்கள் தொடங்கி வைத்தார்!

இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திட வேண்டும். எந்த ஒரு பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் மார்க்க அறிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் வெளியிடுகின்றார்கள். இதனால் பாமர மக்கள் குழம்பிப் போய் விடுகின்றனர். பிரச்னைகளில் வேறு வேறு கருத்துக் களைக் கொண்ட மார்க்க அறிஞர் களெல்லாம் ஒன்றாய் அமர்ந்து ஆய்வு செய்து இன்னப் பிரச்னைக்கான தீர்வு வழி காட்டுதல் இதுதான் எனச் சொல்லி விட வேண்டும். இதனால் கருத்துவேறுபாடுகள் தலையெடுக்க மாட்டா. கருத்து வேறுபாடுகள் நின்று போனால் முஸ்லிம்கள் சிறு சிறு குழுக் களாகிப் பிரிய மாட்டார்கள். பல மிழக்க மாட்டார்கள். கோழை களாக மாட்டார்கள்.”

என்றெல்லாம் மனப்பால் குடித்து வாழ்நாளைப் பாழாக்கிய வர்களுக்கு ஒரு நற்செய்தி. உங்கள் ஆசை ‘துவா’ நிறைவேறிற்று.

ஆமாம்! உலகிலுள்ள பல் வேறு மார்க்க அறிஞர்களும், பல்வேறு சிந்தனை போக்குடைய மார்க்க அறிஞர்களும் ஒன்றாய் இணைந்திருக்கின்றார்கள்.




அதற்கு “உலக முஸ்லிம் அறிஞர்களின் குழுமம்” “International Union for Muslim Scholars” எனப் பெயர் சூட்டி இருக்கின்றார்கள் - ஆலிம் உலமா கவுன்சில்.

### உலகமார்க்க அறிஞர்களின் குழுமம் : உறுப்பினராக:

இதில் தரமான இஸ்லாமியக் கல்விக் கூடங்களில் கல்வி கற்ற மார்க்க அறிஞர்கள் யார் வேண்டுமானாலும் உறுப்பினராக ஆகலாம்.

அஃதல்லாமல் தாங்களாக வே அறிவைத் தேடிப் பெற்று மார்க்க விவகாரங்களில் தேறிய வர்கள், அனுபவ அறிவைப் பெற்றவர்கள் இவர்களும் அங்கத்தினர்களாக ஆகிடலாம்.

இப்போது இந்தக் குழுமம் இயக்கம் - கத்தர் நாட்டை மையமாகக் கொண்டு இயங்கு கின்றது.

இப்படி மார்க்க அறிஞர்கள் உலகஅளவில் ஒன்று பட்டிருக் கின்றார்கள்.

இவர்கள் தற்கால சூழ்நிலை யில் இஸ்லாத்தின் மீது தொடரும் தாக்குதல்களை கருத்தில் கொண்டு இஸ்லாத்தின் உயர்வையும் விழுமியங்களையும் விரித் துரைக்க எடுத்துரைக்க உலகெங்கிலும் கருத்தரங்கங்களை நடத்தி வருகின்றார்கள்.

இப்படியொரு கருத்தரங்கம் தான் பெப்ருவரி 20,21 (2010)

ஆகிய நாள்களில் டெல்லியில் ஜாமியா மில்லியா பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

### டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி

கருத்தரங்கத்திற்கு "இஸ்லாத்திற்கும், கிழக்கிந்திய நாடுகளிலுள்ள மதங்களுக்குமிடையே ஓர், சர்வதேச கலந்துரையாடல்" "International Dialogue Between Islam and Oriental Religions" - என்று பெயர் வைத்திருந்தார்கள். (ஆலமி உலமா கவுன்சில்).

கருத்தரங்கத்தில் உலக மார்க்க அறிஞர்களின் குழுமத்தின் தலைவர் டாக்டர் ஷேஹ் யூசுஃப் அல்கர்ளாவி அவர்கள் கலந்து கொள்ளவிருந்தார்கள். பெப்ருவரி 18ஆம் தேதி அவர்கள் ஓர் அறுவை சிகிச்சைக்கு உள்ளாகிட வேண்டியதிருந்தால் அவர்களால் கலந்து கொள்ள இயலவில்லை.

ஆனால் அவர்களின் பிரதான உதவியாளரும் உலக மார்க்க அறிஞர்களின் குழுமத்தின் பொது செயலாளருமான அலீ அல் கரளாவி அவர்கள் கலந்து கொண்டார்கள். இவர்கள் கத்தர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்கள்.

அவர்களுடன் கத்தர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரும், உலக மார்க்க அறிஞர்களின் குழுமத்தின் - செயலகச் செயலாளருமான பேராசிரியர் இபுறாஹிம் சாலிஹ் அல் நெய்மி - அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். பேராசிரியர் நைய்மி அவர்கள் கத்தர் நாட்டின் தலைநகர் டோஹாவிலுள்ள Intefaith dialogue இதர மத நம்பிக்கைகளுடன் கலந்துரையாடும் மையத்தின் தலைவராகவுமிருக்கின்றார்கள். இரண்டு நாள்கள் இடைவிடாமல் நடந்த இந்த மாநாட்டினை இந்திய குடியரசு துணைத் தலைவர் முஹம்மத் ஹாமித் அன்சாரி அவர்கள் திறந்து வைத்தார்கள். துவக்க உரையை ஆற்றினார்கள். (மிகைந்த புள்ளிவிபரங்களுடன் கருத்தாழமிக்க உரையாக அது இருந்தது - இன்ஷா அல்லாஹ் உரை அச்சாகி கைவரப்பெற்றதும் வைகறை வாசகர்களுக்குத் தமிழில் தருவோம்)

சுவாமி லக்ஷ்மி சங்கராச்சாரியார் அவர்கள் கையில் நீண்ட தடியுடன் வந்த அமர்ந்தார்கள். உரையில் அவர்கள் அடிக்கடி "லா இலாஹா இல்லாஹ்" என்பதை முஸ்லிம்கள் உச்சரிப்பது போல் சரளமாக உச்சரித்தது அனைவரையும் கவர்ந்தது. அதே போல் பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரைக் குறிப்பிடும் போதெல்லாம் ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம் எனக் குறிப்பிட்டதும் கலந்துரை யாடலைக் கவனித்து வந்தவர் களிடம் மிகையான கரவொலியைப் பெற்றது. அதே நேரத்தில் தன்னுடைய கருத்துக்களை தெளிவாக எடுத்துரைத்தார். இந்து மதத்தின் பெயரால் நடக்கும் பாசிசத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

சீக்கிய மதகுரு கையில் வாழுடனும் அதன் இருப்பிடமான தங்க நிகர் உறையுடனும் வந்ததும் அவரும் "பயஹம்பர்"முஹம்மத் (ஸல்) என்று சொன்னதும், முஹம்மத் (ஸல்) அவர்களின் பெயரைக் குறிப்பிடும் போதெல்லாம் நிறுத்தி (Peace be upon him) அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும் என்று கூறியதும் ஆய்வாளர்களை கவர்ந்தது மட்டுமல்ல, நிறைவான கண்ணியத்தையும் பெற்றுத் தந்தது.

### அயோத்தி பிரதிநிதி

அயோத்தியிலிருந்து யுகால் கிஷோர் ஷாரன் சாஸ்திரி அவர்கள் இந்துக்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்கள் இவர் "அயோத்தியா ஆவாஸ்" என்ற பத்திரிகையை நடத்தி வருகின்றார்.

தனது உரையில்

பாபரி மஸ்ஜித் இடிக்கப் பட்டபோது 200 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். 16 முஸ்லிம்களை கோணிப் பைகளில் கட்டி இழுத்துச் சென்று எரித்துக் கொலை செய்தார்கள்.

இந்து மதத்தின் பெயரால் இதனை செய்வதைக் கண்டு நான் வெட்கப்பட்டேன். என்னையும் அவர்கள் அந்த முஸ்லிம்களுடன் எரித்திருக்க வேண்டும்.

"பாபரி மஸ்ஜித்"-ஐ இடித்தவர்கள் உண்மையான இந்துக்களல்ல. மாறாக இந்து மதத்தின் பெயரால் பிழைப்பு நடத்திக் கொண்டிருப்பவர்கள்" என்று கூறினார்.

### பந்தூக் வாலாவின் மறுப்பு

குஜராத்இலிருந்து கலந்து கொண்ட பேராசிரியர் பந்தூக் வாலா அவர்கள், "இந்து மதத்தின் பிரதிநிதிகள் சொல்லும் எந்த மகோன்னத பேச்சுகளையும் நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்."

"ஸ்ரீ ராமரின் பெயரைச் சொல்லி கற்பழிக்கின்றார்கள். இந்த ஈனச் செயலிலும் மிகவும் கீழாக நடந்து கொள்கின்றார்கள். இந்து மதத்தின் பெயரால் இந்த ஈனத்தனங்களை இழி செயல்களை செய்பவர்களை குஜராத்தில் தினமும் சந்தித்துக் கொண்டிருக் கின்றேன். அவர்களோடு தினமும் போராடிக் கொண்டிருக்கின்றேன்."

“என் வீட்டையும் உறவினர்களையும் இழந்தேன். ஆனாலும் நான் போராடுவதை விடவில்லை. பல முறை என் உயிரைப் பறிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் எனக்கு அல்லாஹ் குறித்த நேரம் வராததால்வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்”

இந்து மதம் அதனைப் பின்பற்றுபவர்களை மனிதர்களாக வாழ்ந்திடக் கற்றுத் தர தவறிவிட்டது என்பதே நாட்டு நடப்பு, நாம் கண்ணால் கண்ட அனுபவம், உண்மை. நமது வாழ்வும், வரலாறும் உரக்க முழங்கும் உண்மை.”

“இந்துமதத்தின் பெயரால் இந்த அநியாயங்களுக்கெல்லாம் தலைமை வகித்தவர் இன்னும் முதல்வராக வர முடியும் என்றால் இது என்ன அரசியல் நிர்ணயச் சட்டம்? என்ன ஜனநாயகம்? புரியவில்லை. ஜனநாயகம் இந்தியாவில் தோற்றுப் போய்விட்டது. இந்து மதம் மிகவும் நல்ல மதம் என்பதை செயலில் காட்டட்டும் அப்போது மட்டுமே அதனை எற்றுக் கொள்ள முடியும். இதுபோன்ற அரங்கங்கள் பலனை தரும்” என்றார்.

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள், மோடியின் கொடுங்கோன்மையின் கீழ், அவனையே எதிர்க்கும் ஒரு மாவீரனை சந்தித்தார்கள். (பந்தூக் வாலா அவர்கள் வைகறைக்கு தனியாக கட்டுரைகளை அனுப்ப ஒத்துக் கொண்டுள்ளார்கள்) இன்ஷா அல்லாஹ் இனி வைகறைக்கு அவர்களும் எழுதுவார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் எழுதுவார்கள். நாம் தமிழில் தருவோம். பந்தூக் வாலா அவர்கள், பல ஆங்கில பத்திரிகைகளிலும் இப்போது எழுதிக் கொண்டிருக்கின்றார்கள்.

## செய்யித் ஷா அலீ ஜீலானி

கஷ்மீரைச் சார்ந்த ஜீலானி அவர்கள் கலந்து கொண்டார்கள். அவர்கள் நீண்ட நாள்களாக கஷ்மீரில் களப்பணி, போராட்டம் என வாழ்ந்து வருகின்றார்கள்.

அவர்கள் இஸ்லாத்தை ஏனைய மக்களுக்கு எடுத்துச் சொல்வதே நமது கடமை. இஸ்லாத்திற்கு இணையான மார்க்கம் எதுவுமில்லை. இதை மையமாகக் கொண்டே கருத்துரையாடல்கள் நடைபெற்றிட வேண்டும்” என்றார்கள்.

உருது மொழியில் அவர்கள் ஆற்றிய உரைக்கு வரிக்குவரி கரவொலி. அவர்கள் பேசி அமர்ந்தபின் சுமார் 10 நிமிடங்கள் தொடர்ந்து ஆரவாரம்.

அவர்கள் அரங்கத்தை விட்டு வெளியேறிய பின், அவர்களோடு பெரும் கூட்டமும் வெளியே சென்று அவரோடு உரையாடிக்கொண்டிருந்தது.

ஜாமியா மில்லியா, பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாணவர்களும் நீண்ட நேரம் அளவளாவினார்கள்.

செய்யத் அலீஷா ஜீலானி அவர்கள் கஷ்மீரில் தான் கொண்ட நிலைபாட்டிற்காக பலமுறை சங்கப்பரிவாரங்களால் தாக்கப் பட்டார்கள், ஆனாலும் தனது கருத்துக்களில் உறுதியாக நின்று வருகின்றார்கள். பல சித்திரவதைகளையும் அனுபவித்திருக்கின்றார்கள்.

“சீக்கிய மதம்” பற்றி நடந்த ஆய்வின் போது உரையாற்றிய “ஹர்னேக் சிங்” அவர்கள் இந்தியாவின் அரசியல் நிர்ணயச் சட்டம் இந்து அரசியல் நிர்ணயச் சட்டமாகவே அமைந்து விட்டது. அதனை எல்லா மக்களுக்கும் பொருந்தும் அளவில் திருந்திட வேண்டும் என்றார்கள்.

புத்தமதத்தின் பிரதிநிதிகளும் இதே கருத்தை வலியுறுத்தினார் கள்.

## வெளிநாட்டு பிரதிநிதிகள்

கத்தர் பல்கலைக்கழக பேராசிரியர்கள் அல்லாமல் இதர நாட்டுப் பிரநிதிகளாக, நேப்பாளிலி ருந்து, தாமோதர் கவ்தம், சஞ்சீவானி சேவா சங், கேசாப் பிரசாத் ஆகியோர் இந்துக்களின் பிரயீதநிதிகளாகக் கலந்து கொண்டார்கள்.

நேபாளத்திலிருந்து வந்து கலந்து கொண்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் நேபாளத்தில் 16 முஸ்லிம்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள் என்ற செய்தியைச் சொன்னபோது அனைவரின் புருவங்களும் உயர்ந்தன. நேப்பாள் மக்கள் தொகையில் முஸ்லிம்கள் 4 சதவிகிதம்.

அத்தோடு முஸ்லிம்கள் மீது நடக்கும் அநியாயங்களையும் பட்டியலிட்டார் தாமோதர் கவ்தம். அவர்கள், அண்மையில் நேப்பாளத்தில் பத்திரிகைத்துறையிலும் தொலைக்காட்சி துறையிலும் முன்னோடியாக நின்ற முஸ்லிம் ‘சஜாத்’ என்பவர் பட்டப்பகலில் கொலை செய்யப் பட்டதை வேதனையோடு நினைவு கூர்ந்தார்.

## பாகிஸ்தான் பிரநிதிகள்

பாகிஸ்தானிலிருந்து நுஸ்ரத் மிஸ்ரா முன்னாள் பாகிஸ்தான் அரசின் பிரதான செயலாளர், ஆரிஸ் குமர் சிங் என்ற பாகிஸ்தான் நாடாளுமன்ற உறுப்பினர் கராச்சியைச் சார்ந்த சகோதரி ஷீலா கராடியா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

"ஆரிஸ் குமார்" என்ற பாகிஸ்தான் நாடாளு மன்றஉறுப்பினர் பேசிடும் போது, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் 10 இந்து உறுப்பினர்கள் நிரந்தர மாக இடம் பெறுகின்றார்கள். அதே போல் 10 சீக்கிய உறுப்பினர் களும் இடம் பெறுகின்றார்கள். இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வில்லை என்றால் இவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இது பாகிஸ்தானின் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் சிறப்பு ஏற்பாடு என்றார்கள்.

தான் இதுபோன்ற நிய மனம் செய்யப்பட்ட உறுப் பினரல்ல மாறாக, நவாஸ் ஷெரீப் அவர்களின் அவாமி லீக் கட்சி யின் 'சுவத்' பகுதியிலிருந்து தேர் தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர் என்பதையும் தெரிவித்தார்.

'சுவத்' பகுதி தாலிபன் களின் பிடிக்குள் வந்த தொடக்க நாள்களில் நடந்த போர்களால் மிகவும் கடினமான சூழ்நிலை களைச் சந்திக்க வேண்டி இருந்தது. இப்போது மீண்டும் அமைதியாக இருக்கின்றது" என்றார்கள்.

எந்த நிலையிலும் முஸ்லி மல்லாதவர்களுக்கு எந்தப் பிரச்னையுமில்லை. அடிக்கடி முஸ்லிம்களுக்கிடையேதான் பிரச்னை என்றார்கள்.

அதே போல் சகோதரி ஷீலா கராடியா பேசிடும்போது, இந்தியாவில் பாகிஸ்தானில் வாழும் இந்துக்களைப் பற்றி பொய்களும் புனைந்துரைகளுமே பரப்பப்படுகின்றன. அவை உண்மை அல்ல. எங்கள் நாட்டில் பாகிஸ்தானில் நாங்கள் மிகவும் சிறப்பாகவே வாழ்ந்து வருகின் றோம்.

பாகிஸ்தானில் நாங்கள் எங்கள் திருநாள்களைக் கொண் டாடிடும் அளவுக்கு மகிழ்ச்சியாக இந்துக்கள் இந்தியா வில் மகிழ்ச்சி யாக தங்கள் திருநாள்களை கொண்டாடியதாக தெரியவில்லை.

இதனை இங்கே வந்திருக்கும் பத்திரிகையாளர்கள் சுவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்கள்.

"சிறந்த தகவல் தொடர்புகள் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையே உள்ள உறவுகளை வலுப்படுத்தும். அத்தோடு, இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே சிறந்த உறவுகளையும் மலரச் செய்திடும், வெறுப்புகள் குறையும்" என்றார்.

## இலங்கை நாட்டுப் பிரதிநிதி

இலங்கையிலிருந்து வந்த பிரதிகளில் முக்கியமானவர் Mam சுக்ரீ அவர்கள் புத்தமதத்தைப் பற்றி மேற்கொண்ட ஆய்வும் அதனை அடிப்படையாகக் கொண்ட கருத்துரைகளும். அனைவரையும் கவர்ந்தது.

"புத்தமதத்தின் இலக்கியங் களையும் தத்துவங்களையும் அரபுக்கள் அரபு மொழியில் மொழி பெயர்த்த பின்னரே அவை உலகின் இதர பகுதிகளுக்குப் பரவிற்று என்பதை வரலாற்று ஆவணங்களோடு நிருபித்தார்கள். அத்தோடு புத்த மதத்திற்கு சில இஸ்லாமிய விழுமங்களே அடிப் படையாக அமைந்தது என்பதை யும் தெளிவுபடுத்தினாகள்."

## கருத்துப் பரிமாற்றங்களின் களம்

இப்படி பல்வேறு மதத் தினரும் தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் சிறந்த தள மாக களமாக மாநாடு அமைந்தது.

உலகெங்கிலுமிருந்து சுமார் 450 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

சென்னை தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் சார்பில் அதன் தலைவர், மு. குலாம் முஹம்மத் அவர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சிகளை மில்லி கெஜட் என்ற பத்திரிகை ஆசிரியர் ஜாபருல் இஸ்லாம் கான் ஜமாஅத்தே இஸ்லாமி, மில்லி கவுன்சில், ஜாமியா மில்லியா பல்கலைக்கழகம் ஆகியவை ஏற்பாடு செய்திருந்தன.

அமர்வுகளை "ஜாபருல் இஸ்லாம்கான்" அவர்கள் ஒருங் கிணைத்தார்கள்.

நிகழ்ச்சிகள், 'ஜாமியா மில்லியா பல்கலைக்கழக வளாகம் அன்சாரி அரங்கத்தில் நடந்தன'.

**டெல்லியிலிருந்து நமது நிருபர்**


உடனுக்குடன் மொழி பெயர்ப்புகளை மொழி பெயர்த்து தந்திடும் இயந்திரம் தேவைப் பட்டவர்களுக்கு வழங்கப் பெற்றது.

இந்தக் கருவியைத் தலையில் பொருத்திக் கொண்டால் பேசுபவரின் உரை, நாம்விரும்பும் மொழியில் நமக்குக் கேட்கும். அரபி, தமிழ், ஆங்கிலம், உருது ஆகிய மொழிகளில் இந்த உடனடி மொழி பெயர்ப்புக் கருவி உரைகளைச் செவிமடுத்திட உதவியது.

இதனால் அரங்கத்தில் நடைபெற்ற விவாதத்தில் அனை வரும் துடிப்புடன் கலந்து கொண்டார்கள்.

# கம்ப்யூட்டர் கல்வி

## MS OFFICE - TABLE LAYOUT TOOLS




| வ. எண் | தேர்வு | பள்ளி/ கல்லூரி | ஆண்டு |
|---|---|---|---|
| 1 | S.S.L.C | கிரஸன்ட் மேல்நிலைப் பள்ளி | 1989 |
| 2 | +2 | கிரஸன்ட் மேல்நிலைப் பள்ளி | 1991 |
| 3 | B.Sc. | கிரஸன்ட் மேல்நிலைப் பள்ளி | 1994 |

சென்ற இதழில் Table Tool Bar ல் உள்ள Design Tool களை உபயோகப்படுத்துவது எப்படி என்று பார்த்தோம். இதில் அடுத்ததாக முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டியது Layout Tool களைப் பற்றி.

Layout Tool பாரில் உள்ள Select Tool ஒரு அட்டவணையில் உள்ள ஒரு Column, ஒரு செல், அல்லது ஒரு வரிசை அல்லது மொத்தமாக ஒரு அட்டவணையையே தேர்வு செய்ய உதவுகிறது.

Layout ல் உள்ள Delete Option ஐ கிளிக் செய்தால் வரக்கூடிய மெனுவில் Delete Cells, Delete Column, Delete Row, Delete Table போன்ற Optionகளை தேர்வு செய்து ஒரு செல்லையோ, ஒரு காலத்தையோ, ஒரு வரிசையையோ, அல்லது ஒட்டு மொத்தமாக ஒரு அட்டவணையையோ Delete (நீக்கலாம்) செய்யலாம்.

Insert Above என்ற பட்டனை உபயோகப்படுத்தி ஒரு வரிசையை நுழைக்கலாம். உங்களுடைய மௌஸ் பாய்ன்டர் எந்த இடத்தில் இருக்கிறதோ அதாவது அட்டவனையின் எந்த இடத்தில் நீங்கள் இருக்கிறீர்களோ அந்த இடத்திற்கு மேலே ஒரு வரிசை புதிதாக உருவாகும். Insert Left இடதுபுறத்தில் ஒரு Column புதிதாக உருவாக்கவும் Insert Right வலது புறத்தில் ஒரு Column புதிதாக உருவாக்கவும் Insert Below கீழே ஒரு வரிசையை புதிதாக உருவாக்கவும் உதவும்.


அதே போல நீங்கள் ஏற்கெனவே உருவாக்கி வைத்துள்ள ஒன்றுக்கு மேற்பட்ட செல்களை ஒன்றாக இணைத்து ஒரே செல்லாக மாற்றுவதற்கு Merge Cells என்ற Option உதவுகிறது. Split Cell என்ற Option மூலம் ஒரு செல்லை இரண்டுக்கு மேற்பட்ட பிரிவுகளாக பிரிக்கலாம். ஒரு வேளை உங்கள் டேபிளையே இரண்டாக பிரிக்கவேண்டுமென்றால் எந்த இடத்திலிருந்து டேபிளை பிரிக்க வேண்டுமோ அந்த இடத்தில் கிளிக் செய்து தேர்வு செய்துவிட்டு பின்னர் Split Table என்ற Optionஐ தேர்வு செய்யுங்கள்.

உங்களுடைய டேபிளை மொத்தமாக தேர்வு செய்து பின்னர் Distribute Rows Evently என்ற Option ஐ கொடுத்தால் எல்லா வரிசைகளும் சமமான உயரத்திற்கு வந்து விடும். அதே போல் Distribute Columns Evently என்ற Option ஐ தேர்வு செய்தால் Column கள் சமமான அகலமுடையதாக மாறிவிடும்.




மேலேயுள்ள படத்தில் காட்டியுள்ள பட்டன்களை கிளிக் செய்வதன் மூலம் ஒரு செல்லுக்குள் உள்ள ஒன்றை அந்த செல்லின் இடது மூலைக்கோ அல்லது வலது மூலைக்கோ அல்லது இடது பக்கம் கீழே அல்லது வலது பக்கம் கீழே அல்லது இடது பக்கம் நடுவில் அல்லது வலது பக்கம் நடுவில் அல்லது எல்லாவற்றிற்கும் நடுவில் என பல்வேறு வகையில் கொண்டு வரலாம்.

Layout உள்ள Text Direction என்பதை தேர்வு செய்வதன் மூலம் நீங்கள் ஒரு செல்லிற்குள்ளோ அல்லது பல செல்களிலோ டைப் செய்துள்ளவற்றை நீங்கள் விரும்பிய திசைக்கு திருப்பலாம்.




Sort நீங்கள் டைப் செய்துள்ளவற்றை வரிசைப் படுத்த உதவும். Sort ஐ கிளிக் செய்தவுடன் கீழ்கண்ட திரை வரும். அதில் Ascending என்பதை தேர்வு செய்தால் நீங்கள் தேர்வு செய்துள்ள Column Alphabetical

Order ல் அதாவது அந்த காலத்தில் உள்ளது Text ஆக இருநதால் A முதலாவதாகவும் Z கடைசியாக வரும்படியும் அந்த அட்டவணை வரிசைப்படுத்தப் படும். இதுவே நீங்கள் Descendging என்பதை தேர்வு செய்து Ok கொடுத்தால் தலைகீழாக பெரிய எண்ணி லிருந்து சிறிய எண்ணிற்கு வரிசைப்படுத்தப் படும்.

Repeat Header Row என்பது ஒரு டேபிளை பல பக்கங்கள் வருமாறு டைப் செய்துள்ளீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இப்போது அந்த டேபிளை நீங்கள் பிரிண்ட் செய்ய விரும்புகிறீர்கள். அதே சமயம் ஒவ்வொரு பக்கம் பிரிண்ட் ஆகும் போதும் அதன் தலைப்பில் டேபிளின் முதல் வரிசை தலைப்பாக வரவேண்டுமென்றால் Repeat Header Row என்ற Option ஐ தேர்வு செய்ய வேண்டும்.

Convert to Text என்பது டேபிளை மொத்தமாக டேபிள் Format லிருந்து சாதாரண Text Format ற்கு மாற்ற.

Formula என்ற Option. Sum Multiply போன்ற Calculation போட உதவும்.

## Zoom Share - Lord Rahul Cool வைரஸ் பாதிப்பிலிருந்து விடுபட

இந்த வைரஸின் பாதிப் பிலிருந்து விடுபட உங்களுக்கு இரண்டு இலவசமாக கிடைக்கக் கூடிய மென்பொருள் கள் உதவுகின்றன. ஒன்று Trend Micro Hijackthis என்ற மென்பொருள். இதனை http:// download.cnet.com/ Trend Micro-Hijack This / 3000-8022_4-10227353.html. என்ற இணையதளத்தில் சென்று பதிவிறக்கம் Download செய்து கொள்ளலாம். அல்லது Google search ல் சென்று Trend Micro Hijackthis free download என கொடுத் தேடினால் வரக்கூடிய Links களிலிருந்தும் சென்று பதிவிறக்கம் செய்து கொள்ள லாம்.




மற்றொன்று Sergiwa வின் Restriction Removal Tool / இதனை பின் வரும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http: // www.sergiwa.com / modules / mydownloads/. அல்லது இதையும் Google Search சென்று Sergiwa RRT என கொடுத்து தேடலாம்.



இந்த இரண்டு மென் பொருள்களையும் உங்களுடைய கம்ப்யூட்டரில் Install செய்து கொள்ளுங்கள்.




பின்னர் RRT Tool ஐ Open செய்து கொள்ளுங்கள். அதில் RRT Personal Edition என்பதை தேர்வு செய்து Ok கொடுங்கள். பின்னர் அது Activation Code ஐ கேட்டால் அதை Cancel செய்து விட்டு Demo Mode ல் உள்ளே செல்லுங்கள். அதன் பின் கீழ்கண்டவாறு வரும் திரையில் உங்கள் Computer ல் வைரஸ்கள் என்னென்ன Restric tion களை ஏற்படுத்தி யுள்ளதோ அதையெல்லாம் தேர்வு செய்து Remove என்று கொடுத்தால் அந்த Restriction கள் நீங்கிவிடும்.




இதன் மூலம் முடங்கி போன உங்கள் கம்ப்யூட்டரின் Task Manager, System Folder Restriction, Control Panel Restriction போன்ற பல Restriction களை நீக்கலாம்.

அடுத்ததாக நீங்கள் Trend Micro Hijackthis என்ற மென்பொருளை Open செய்து கொள்ளுங்கள். வருகின்ற திரையில் Scan என்பதை தேர்வு செய்தால் பின்வருமாறு காட்டும்.



அதில் Rahul Cool என்று வருபவற்றையும் Zoom Share என்று வருபவற்றையும் தேர்வு செய்து Fix Checked என கொடுத்தால் அந்த குறிப்பிட்ட விஷயங்களை Registry யிலி ருந்து HiJackthis நீக்கிவிடும்.

பின்னர் My Computer C Drive ஐ Open செய்து அதில் Windows/ System 32 என்ற Folder ருக்குள் சென்று அங்குள்ள Rahul என்ற பெயரிலுள்ள File களை Deleteசெய்து விட்டு பின்னர் உங்கள் கம்ப்யூட்டரை Restart செய்யுங்கள். இப்போது உங்கள் கம்ப்யூட்டரின் Internet Explorer Open செய்தால் இப்போது Zoom Share - Lord Rahul என்ற செய்தி வராது. உங்களுடைய கம்ப் யூட்டர் அந்த வைரஸிலிருந்து விடுபட்டுவிட்டது.

அடுத்த இதழில் உங்கள் பென்டிரைவில் Autorun.inf என்ற பெயரில் வந்து அமர்ந்து கொண்டு பின்னர் உங்கள் Hard Disk களிலும் அமர்ந்து கொண்டு Double Click செய்து Open செய்தால் Open with என்று என வந்து பாடாய் படுத்தும் பென்டிரைவர் வைரஸை எப்படி நீக்குவது என்பதை காணலாம்.

இன்ஷா அல்லாஹ்.


தொடர் :9 **புதைக்கப்பட்ட மக்கள்!**

**மறைக்கப்பட்ட வரலாறுகள்!**

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை!

**டாக்டர் அங் சுவீ**

**தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்**




சென்ற இதழ் தொடர்ச்சி. . .

நான் அஜீசா வின் கைகளைப் பிடித்துக் கொண்டேதான், மூர்ச்சையானேன். ஆஜீசா கைத்தாங்கலாகவே என்னைப் பிடித்து எனக்கு முதலுதவிகளைச் செய்திருக்கின்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் நான் எழுந்தேன். எனக்கு நீராகாரம் தந்தாள். என்னை சற்று ஓய்வெடுக்கப் பணித்தாள்.

நான் படுக்கையில் தலை வைத்தேன். தூக்கம் வரவில்லை. நோயாளிகளோடு நானும் ஒரு நோயாளியா?" நான் வெட்கப் பட்டேன்.

என் வேதனையை ஒரு நினைவு நீக்கிற்று!

ஆமாம்! நான் ஆஜீசாவை காஸா மருத்துவமனையை விட்டு விட்டு போர்களம் போகாமல் தடுத்துவிட்டேன். அவளும் நின்றுவிட்டாள்.

அஜீசாவை நினைத்துப் பெருமைப்பட்டேன். பெண்ணினத்தின் மேல் எனக்கோர் புதிய நம்பிக்கைப் பிறந்தது.

அநாதைகளாக ஆகிவிட்ட ஆயிரமாயிரம் குழந்தைகளை, அன்போடு அரவணைத்தவள் அவள்.

ஆண்களைப் பறிகொடுத்த பெண்களுக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லி வாழ்ந்திட வழிகாட்டியவள் அவள்.

வீடிழந்தவர்கள், தற்காலிக் குடியிருப்புகளுக்கு கட்டுமான பொருள்கள் தேவை எனக் கேட்டபோது அவற்றைப் பெற்று தந்தவள். இத்தனையும் செய்த அவள்.

மருத்துவம் படித்தவள். சிறந்த மருத்துவர்.

காஸா மருத்துவமனையைக் காத்திட கனமும் தயங்கிடாமல் போர்களம் புக தயாரானவள்.

இவற்றையெல்லாம் மனக் கண்முன் ஓட்டிப் பார்த்த என்னுள் அஜீசாவை நினைத்து அழுகை வந்தது. பெருமையும் பட்டேன் அவளைப் போன்றதொரு பெண்ணின் கீழ் தொண்டாற்றுவதில்.

நான் அஜீசாவைத் தடுத்ததைப்போல், அங்கே நின்ற ஏனைய பாலஸ்தீன பெண்மணிகளும் அஜீசாவைத் தடுத்திருக்கின்றார்கள். அவர்கள், ஆயுதங்கள் கிடைத்தால் நாங்களே யூதர்களை எதிர்த்துப் போராடுவோம். எங்களுக்கு ஆயுதங்கள் கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என கேட்டுக் கொண்டார்கள். இதனால் அஜீசா சற்று நெகிழ்ந்திருக்கின்றாள்.

அந்தப் பெண்களில் ஒருத்தி, நீங்கள் வாழ்ந்தால்

பலருடைய உயிரைக் காப்பாற்று வீர்கள், நாங்கள் பலருக்கு பளுவாகத்தான் வாழுகின்றோம். ஆயுதங்கள் கிடைக்குமென்றால் நாங்கள் யூதர்களை வென்று காட்டுவோம் என வெகுண்ட ழெந்துள்ளாள்.

அந்தப் பெண்கள் எடுத்து வைத்த உணர்ச்சி பெருக்கில் நியாயங்களிருப்பதை அஜீசா உணர்ந்திருக்கின்றாள். அந்த நியாயங்களால் நெகிழ்ந்திருக் கின்றாள்.

அந்தப் பெண்கள் சும்மா சவடால் விடுபவர்களல்ல மாறாக அவர்கள், மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னால் கையில் கிடைத்த கற்களைக் கொண்டு யூதர்களை எதிர்த்தவர்கள், தாம் என்பது அஜீசாவின் கவத்தைப் போர்களத்திலிருந்து மருத்துவ மனையின் பக்கம் திருப்பி இருக் கின்றது.

நான் மூர்ச்சையாகி மடியில் வீழ்ந்தேன். அந்தப் பாலஸ்தீன வீராங்கனைகள் முழு மூச்சாய் நின்று அஜீசாவைப் போக விடாமல் சாதித்துவிட்டார்கள்.

இந்தப் பெண்களின் கைகளில் மட்டும் ஆயுதங்கள் கிடைத்திருந்தால் அவர்கள் உண்மையிலேயே யூதர்களை வென்றிருப்பார்கள்.

இதையெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த என்னால் படுக்கை யில் பிணமாகக் கிடக்க முடிந்ததே அல்லாமல் தூங்கிட இயல வில்லை.

என் பக்கத்தில் டாக்டர் 'மிர்' நின்று கொண்டிருந்தார். அவரிடம் அஜீசாவை விசாரித் தேன்.

அதற்கவர் "இஸ்ரேலியர்கள் ஷாப்ரா ஷத் திலா அகதி கள் முகாம் களின் மேல் குண்டு வீசுவதை நிறுத்தி விட்டார்கள்."

"இப்போது இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் ஷாப்ரா ஷத்திலாவுக்குள் வீடு வீடாகப் புகுந்து கொலைகளைச் செய்திட தொடங்கிவிட்டார்கள்".

"இஸ்ரவேலர்கள் வான் வெளி தாக்குதலை நிறுத்திவிட்டு, முகாம்களுக்குள் புகுந்து கொலை செய்ய தொடங்கிவிட்டார்கள்."

"காரணம் எதிர் தாக்குதலை நடந்திட எந்த ஆண்களும் அங்கே இல்லை என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள்."

"தண்ணீர் கொண்டுவரச் சென்ற பெண்கள் அங்கேயே கொலை செய்யப்பட்டார்கள். உணவுப் பொருள்களை வாங்கிவர சென்ற பெண்கள் அங்கேயே கொலை செய்யப்பட்டார்கள். மருத்துவ மனைக்கு வந்து கொண்டிருந்தவர்கள் வழியிலேயே கொலை செய்யப்பட்டார்கள்".

"இப்படி அடுக்கிக் கொண் டே சென்ற அவர், காயம் பட்டவர் கள் வருகை அதிகமாகிவிட்டதால், அஜீசா அவர்களுடைய உயிருக் காகப் போராடிக் கொண்டிருக் கின்றார்கள்" என்றார்.

'மிர்' சொல்வதைக் கேட்ட என்னால் படுக்கையில் தொடர்ந்து கிடந்திட இயலவில்லை. அஜீசா வுக்கு உதவி செய்திட வேண்டும் போலிருந்தது.



சற்றே உருண்டு பிறண்டு விட்டு நெஞ்சைத் தேற்றிக் கொண்டு புறப்பட்டுவிட்டடேன்.

அஜீசா ஆபரேஷன் தியேட் டரில் நின்றாள். முடிந்த வரை காயம்பட்டவர்களை, அங்கிருந்த லெபனானிஸ் மருத்துவமனை என்ற மருத்துவ மனைக்கு அனுப் பிக் கொண்டி ருந்தாள். காரணம் உயிர் காக்கும் மருந்துகள் மருத்துவ மனையில் மிகவும் குறைவாக இருந்தன. தண்ணீருக்கும் தட்டுப் பாடு.

இறந்தவர்களை ஆங்காங் கே விட்டுவிட்டு ஓரளவுக்கு உயிர் பிழைப்பார்கள் என்ற நிலையில் உள்ளவர்களே மருத்துவ மனைக்கு அழைத்து வரப்பட்டார் கள்.

அப்படி அழைத்து வந்தவர் கள், காயம்பட்டவர்கள், அனை வரையும் கொலை செய்தார்கள் இஸ்ரவேலர்கள்.

அதிலும் எஞ்சியவர்கள் தாம் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

இதனால் உயிர் பிழைக்கும் தருவாயிலிருந்தவர்கள் மிகக் குறைவே. இவர்களைத்தான் லெபனான் மருத்துவமனைக்கு அனுப்பினோம். மற்றவர்களுக்கு வலி நீக்கும் மாத்திரைகளைத் தான் தந்து கொண்டிருந்தோம்.

அஜீசாவும் ஏனைய மருத்துவர்களும் இடைவிடாமல் ஆபரேஷன்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களோடு நானும் இணைந்து கொண்டேன். மதியம் ஊனப்பட்டு வந்தவர்கள் ஒரு புது செய்தியைச் சொன்னார்கள்.

இப்போது இஸ்ரவேலர் களுடன் 'பால்பேய்க்' என்ற குழுவினரும், கொலை செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த 'பால்பெய்க்' என்பவர்கள் லெபனானில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் கிருஸ்தவர்கள். இவர்கள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல் லாம் யூதர்களோடு இணைந்து முஸ்லிம்களைக் கொலை செய் வார்கள். இப்போது இவர்களும் களமிறங்கி விட்டார்கள். என்னே வேதனை!

பலர் இறந்து போயினர்.

இவர்களை நாங்கள் இறந் தவர்களை வைக்கும் (மார்ச்சொரி யில்) பிணவறையில் வைத்தோம். இடம் கொள்ளவில்லை. அதனால் பிணங்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைத்திடும் அவல நிலை. கண்களால் காண இயலவில்லை. அத்துணைக் கோரம்.

ஒரே நாளில் 2000 காயம் பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். பல்லா யிரம் பேர் அடைக்கலம் தேடி வந்தார்கள்.

அத்தனை நாள் சேர்த்து வைத்திருந்த உணவுப் பொருள்கள் நொடிப் பொழுதில் தீர்ந்து போய்விட்டன.

அபயம் தேடி காஸா மருத்துவமனைக்குள் புகுந்திருந்த பலப் பெண்கள், வெளியே ஓடினார்கள்.

அவர்கள் எங்கே போகி ன்றார்கள் எனக் கேட்டேன் அங்கு நின்று கொண்டிருந்த பெண்ணி டம். ஆங்கிலம் தெரிந்த பெண் ணொருத்தி உடைந்த ஆங்கிலத்தில் இப்படிச் சொன்னாள்.

"காஸா மருத்துவ மனையில் அபம் தேடி வந்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்ப தால் அவர்களும் அந்த எண்ணிக் கையை அதிகமாக்கிட விரும்ப வில்லை".

"ஆகவே. . . . என்ற இழுத்தாள் நான் வழிமறித்து "எங்கே போவார்கள்" எனக் கேட்டேன் அதற்கவள்.

இங்கே அபயந்தேடி வந்தவர்களுடன் நின்று நெரிசலை அதிகப்படுத்துவதைவிட போராடப் புறப்பட்டுவிட்டார் கள்? என்றாள். "எப்படிப் போராடுவார் கள்" எனக் கேட்டேன். அதற்கவள் கையில் கிடைப்பதை எடுத்துப் போராடுவார்கள் என முடித்தாள்.

ஆமாம்! அவர்கள் காஸா மருத்துவமனையில் அலை மோதும் மக்கள் வெள்ளத்தில் அடைக்கலம் தேடிட விரும்ப வில்லை, மரணத் தின் மூலம் அடைக்கலமும் அமைதியும் தேடிச் சென்று விட்டார்கள்

**- தொடரும்**

**இன்ஷா அல்லாஹ்.**




# வன்முறையின் மறுபெயரே சங்பரிவார்க் கும்பல்

என்ற இந்த நூல் 2.2.2010 அன்று பெரியார் திடலில் எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்களுக்கு நடந்த பாராட்டு விழாவில் வெளியிடப்பட்டது